# வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்
# 2014

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

# நோக்கு

வெளிநாட்டு சந்தைகளுக்கு திறன்மிக்க மனிதவளத்தை வழங்குவதில் உலகின் சிறந்த தெரிவாக இலங்கையை உருவாக்குவது

# இலக்கு

தேசிய பொருளாதாரத்திற்கு பங்காற்றுவதுடன், சகல சாராரினதும் உரிமை நலன்களைப் பேணி, பொதுமக்களுக்கு தமது திறன்களைக் கொண்டு வெளிநாட்டு சந்தைகளில் நன்மையான பயன்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வினைத்திறன்மிக்க, நியாயமான வழிமுறைகளை உருவாக்குவது.

# ஓப்புகை

குறிப்பிட்ட காலப்பகுதியினுள் கொள்கைத்திட்டங்கள் மற்றும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலன்புரி அமைச்சரினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் தொடர்பில் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நோக்கங்களை செயற்படுத்துவது தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலன்புரி அமைச்சின் செயலாளர், பணியகத்தின் பணிப்பாளர் சபையினர், பணியகத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பிரிவுகளுக்குட்பட்ட பணியளார்கள், அனுமதி பெற்ற தொழில் முகவர் நிலையங்கள் ஆகியோரினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புகளுக்கு நன்றியை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**ஆர்.கே. ஒபேசேக்கர**
**தலைவர்**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வருடாந்த அறிக்கை | 01 |
| 2. | நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கள் | 31 |
| 3. | விரிவான வருமானக் கூற்று | 32 |
| 4. | ஒருங்கிணைந்த நிதிப்பாய்ச்சல் கூற்று | 33 |
| 5. | உரித்துடமை மாற்றங்கள் பற்றிய கூற்று - குழு | 35 |
| 6. | உரித்துடமை மாற்றங்கள் பற்றிய கூற்று – பணியகம் | 36 |
| 7. | முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளும் கணக்கீடுகளுக்கான குறிப்புகளும் | 37 |
| 8. | கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை | 65 |
| 9. | கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை மீதான பணியகத்தின் அவதானிப்புகள் | 93 |

### ❖ பணியகத்தை நிறுவுதல்

1994 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் புதிய திருத்தமான 2009 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நிறுவப்பட்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் 2010.11.22 ஆம் திகதி தொடக்கம் வெளிநாட்டு வேலைவாயப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சின்கீழ் இயங்கி வருகின்றது.

### ❖ பணியகத்தின் நோக்கங்கள்

2009 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினால் புதிதாக திருத்தப்பட்டவாறான மேற்கூறிய சட்டத்தின் 15 ஆம் பிரிவில் பணியகத்தின் நோக்கங்கள் எழுத்துரைக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் இப்பணியகத்தின் பிரதான நோக்கங்களாவன, இலங்கையர்கள் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புகளைப் பெறுவதற்கு ஊக்குவித்தலும் விளம்பரப்படுத்தலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிகளை ஒழுங்குபடுத்தலும் உதவுதலும் இலங்கைக்கு வெளியே பணிபுரியும் இலங்கையர்களது நலன்களைப் பேணலும் பாதுகாத்தலுமாகும்.

### ❖ பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

2014 ஆம் ஆண்டில், 2014.01.01 ஆந் திகதி தொடக்கம் 2014.06.14 ஆந் திகதிவரையான காலப்பகுதியில் கீழ்க்குறிப்பிடப்பட்டவர்கள் சபையின் உறுப்பினர்களாக இருந்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1. | திரு. அமல் சேனாலங்காதிகார | தவிசாளர் |
| 2. | திரு.ரொட்னி எம் பெரேரா | பணிப்பாளர் |
| 3. | செல்வி ஜி.டி.சி.ஏக்கநாயக்க | பணிப்பாளர் |
| 4. | திருமதி அசோக்கா அலவத்த | பணிப்பாளர் |
| 5. | திரு.சுசில் ரணசிங்க | பணிப்பாளர் |
| 6. | திரு.எம்.பி.பதிரண | பணிப்பாளர் |
| 7 | திரு.எம்.இசட்.எம்.மன்சூர் | பணிப்பாளர் |
| 8. | திரு. எல்.ஏ.ஆர்.என். பெரேரா | பணிப்பாளர் |
| 9 | திரு.ரொஹான் சோமவங்ச | பணிப்பாளர் |
| 10. | திரு.பீ.பி.நியதந்துபொல | பணிப்பாளர் |
| 11. | திரு.ஏ.ஆர்.பீ. நிஹ்மத்தீன் | பணிப்பாளர் |

2014 ஆம் ஆண்டில், 2014.06.15 ஆந் திகதி தொடக்கம் கீழ்க்குறிப்பிடப்பட்டவர்கள் சபையின் உறுப்பினர்களாக இருந்துள்ளனர்.

1. திரு. அமல் சேனாலங்காதிகார - தவிசாளர்
2. செல்வி ஜி.டி.சி.ஏக்கநாயக்க - பணிப்பாளர்

3. திருமதி அசோக்கா அலவத்த - பணிப்பாளர்
4. திரு.எஸ்.ஏ.ஏ. பெரேரா - பணிப்பாளர்
5. திரு.சுசில் ரணசிங்க - பணிப்பாளர்
6. திரு.எம்.பி.பதிரண - பணிப்பாளர்
7. திரு.எச்.எம்.எஸ்.பண்டார - பணிப்பாளர்
8. திரு.எல்.ஏ.ஆர்.என். பெரேரா - பணிப்பாளர்
9. திரு.பீ.பி.நியதந்துபொல - பணிப்பாளர்
10. திரு.ஏ.ஆர்.பீ. நிஹ்மத்தீன் - பணிப்பாளர்
11. திரு.எஸ்.ஈ. ரத்நாயக்க - பணிப்பாளர்

2014 இல் 11 சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் 177 சபை பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

### ❖ கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

இக்குழுவானது 2014 ஆம் ஆண்டில் பிரதானமாக 2011 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தினால் அவருடைய கணக்காய்வு அறிக்கையில் செய்யப்பட்ட அவதானிப்புக்கள், அரசாங்க தொழில் முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கை மற்றும் நிலுவையாகவுள்ள கணக்காய்வு விசாரணைகள் சம்பந்தமான நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல், பயிற்சி நிலையங்களை கண்காணிப்புச் செய்தல், கொள்வனவு விடயங்கள் மற்றும் 2011ஆம் ஆண்டிலிருந்து 2013ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தொடர்பில் தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது.

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியத்தின் நடவடிக்கைகள் பற்றிய பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

2014 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவுற்ற நிதியாண்டுக்கான ஆண்டறிக்கையை பணியகத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகின்றது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமானது இதுவரை இலங்கைப் பணியாளர்களுக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் ஏனைய பங்காளர்களுக்குமாக தனது 29 ஆண்டுக்காலச் சேவையைப் பூர்த்தி செய்துள்ளது.

### பிரதான நடவடிக்கைகள்

ஆய்விலுள்ள ஆண்டின் போது பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

- ❖ வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் நல்லாட்சியும் ஒழுங்குபடுத்தலும்
- ❖ புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தை பாதுகாத்தலும் வலுவடையச் செய்தலும்
- ❖ புலம்பெயர்வும் அபிவிருத்தியும்
- ❖ வியாபார உபாய முறைகளுக்கு ஆதரவாக கூட்டிணைப்பு வளங்களைப் பயன்படுத்துதல்

## ❖ வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் நல்லாட்சியும் ஒழுங்குபடுத்தலும்

உரிமப்பத்திரங்களை வழங்குதல், அனுமதித்தல், ஒப்பந்தங்களைப் பதிவுசெய்தல், புலனாய்வுகளை மேற்கொள்ளல், சட்டப்பிரிவு மற்றும் ஊழியர்களைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடல் போன்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையினை ஒழுங்குபடுத்துவது போன்ற பிரதான நடவடிக்கைகள் இதில் உள்ளடங்குகின்றன. மேலே குறிப்பிட்ட பிரிவினால் மீளாய்வு ஆண்டில் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறாகும்.

### • உரிமம் வழங்குதலும் இரத்துச் செய்தலும்

1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக சட்டத்தின் 24 ஆம் பிரிவுக்கமைய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தவிர இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்படுகின்ற உரிமப்பத்திரங்களின் உரிமையாளர் அல்லாத எந்தவொரு நபரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் சம்பந்தமான வியாபார நிலையங்களை நடாத்திச்செல்ல முடியாது.

உரிமப்பத்திரப் பிரிவினால் மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் உரிமப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் அவ்வாறு வழங்கப்பட்ட உரிமப்பத்திரங்களை இரத்துச் செய்தல் ஆகிய பணிகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்படி பிரிவின் செயலாற்றுகை கீழே தரப்பட்டுள்ளது.

| | *2014 ஆம் ஆண்டு* | *2013 ஆம் ஆண்டு* |
|---|---|---|
| வழங்கப்பட்ட புதிய உரிமங்களின் எண்ணிக்கை | 101 | 108 |
| மீள்புதுப்பிக்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை | 998 | 926 |
| உரிமம் பெற்ற முகவர்களுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 09 | - |
| இப்தார் விழாவைக் கொண்டாட்டம் | - | 01 |
| உரிமங்களை இரத்துச் செய்தல் | 14 | - |
| பரிசளிப்பு விழாவை ஒழுங்குசெய்தல் | 01 | - |

புலனாய்வுப் பிரிவின் செயற்பாடுகள் கீழக்குறிப்பிட்டவாறு அமைந்தன:

| | *ஆண்டு 2014* | *ஆண்டு2013* |
|---|---|---|
| ஆண்டின் பேரூது கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 3,272 | 3,510 |
| இந்த ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 3,614 | 2,774 |
| நடாத்தப்பட்ட திடீர் சோதனைகளின் எண்ணிக்கை | 138 | 115 |
| முடிவுறுத்தப்பட்ட விசாரணை கோப்புகளின் எண்ணிக்கை | - | 98 |
| விடுக்கப்பட்ட அழைப்பாணை மற்றும் பிடியாணைகளின் எண்ணிக்கை | 887 | |
| சட்ட விரோதமான ஆட்சேர்ப்பு மற்றும் ஆடடகடத்தல் தொடர்பாக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 03 | - |

- **சட்ட நடவடிக்கைகள்**

மீளாய்வு ஆண்டின் போது சட்டப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் பின்வருமாறு:

➢ இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டத்தின் கீழ் குற்றங்களைப் புரிந்தவர்களுக்கு எதிராக குற்றங்கள் வரையப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

➢ உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களாலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழில் துறையில் ஈடுபட்டுள்ள அதிகாரம் அளிக்கப்படாத நபர்களினாலும் ஏமாற்றப்பட்ட அல்லது தவறாக வழிநடத்தப்பட்ட இலங்கைத் தொழிலாளர்கள் மற்றும் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பைத் தேடுபவர்கள் சார்பாக நீதிமன்றங்களில் ஆஜராகுதல்.

➢ பல்வேறு தரப்பினர்களால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகளுக்குகள் தொடர்பில் நீதிமன்றங்களில், தீர்ப்பு மன்றங்களில், ஆணைக் குழுக்களில் முன்னிலையில் ஆஜராகுதல்.

➢ இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஏனைய பிரிவுகளுக்கு சட்ட அறிவுறுத்தல்களை வழங்குதல். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் (சட்ட அமுலாக்கம்).

➢ இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கான சட்ட ஆவணங்களைத் தயாரித்தலும் சான்றுறுதிப்படுத்தலும்.

- **உரிமப்பத்திரம் பெற்றுள்ள முகவர் நிறுவனங்களின் தொழில் கட்டளை அனுமதி மற்றும் வியாபார விளம்பர அனுமதிகளை வழங்குதல்**

| | **2014** | **2013** |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட தொழில் கட்டளைகளின் எண்ணிக்கை | 6,184 | 6,326 |
| அனுமதிக்கப்பட்ட தொழில் வெற்றிடங்களின் எண்ணிக்கை | | 504,914 |
| அனுமதிக்கப்பட்ட விளம்பரங்களின் எண்ணிக்கை (பத்திரிகை) | 3,232 | 3,583 |
| மீளப்புதுப்பிக்கப்பட்ட தொழில் கட்டளைகளின் எண்ணிக்கை | 3,274 | 2,979 |

- **இறுதி அனுமதி வழங்கலும் (குடியகழ்வு) புலம்பெயர்பவர்களை பதிவுசெய்தலும்**

| | **2014** | **2013** |
|---|---|---|
| வெளிநாடு செல்லவிருக்கும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட குடியகழ்வு அனுமதிகளின் எண்ணிக்கை | 177,896 | 181,937 |
| தனி நபர் பதிவுகள் | 117,054 | 109,245 |

- **தொழில் ஒப்பந்தங்களைப் பதிவுசெய்தல்**

புலம்பெயர் ஊழியர் தொழில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நபரின் முன்னிலையில ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை புலம்பெயர் ஊழியர் விளங்கிக் கொள்ளக் கூடியவாறு வாசித்து தெளிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது, 2014 ஆம் ஆண்டின்போது 180, 775 எண்ணிக்கையிலான ஒப்பந்தங்கள் உறுதிப்படுத்தப்பட்டன.

- **சட்ட அமுலாக்கம்**

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் இடம்பெறும் முறைகேடுகளை இல்லாதொழித்து, சிறந்த நடைமுறைகளை அதிகரிக்கும் நோக்கில் 2014 ஆம் ஆண்டிலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புலனாய்வுப் பிரிவு அதன் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றுள்ளது.

**சட்டப் பிரிவின் செயல்நிறைவேற்றம் கீழே தரப்பட்டுள்ளது:**

| | ஆண்டு 2014 | | ஆண்டு 2013 | |
|---|---|---|---|---|
| பிரிவு / செயற்பாடு | | | | |
| | பௌதீகம் சார்ந்த | நிதி விதிமுறைகளின் கீழ்(ரூ) | பௌதீகம் சார்ந்த | நிதி விதிமுறைகளின் கீழ்(ரூ) |
| **சட்டப் பிரிவு** | | | | |
| **•நீதிமன்றங்களில் ஆஜராகுதல்** | | | | |
| தொடுக்கப்பட்ட புதிய வழக்குகளின் எண்ணிக்கை | 270 | - | 143 | - |
| தீர்ப்பு வழங்கப்படாதுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 3,031 | - | 2,908 | - |
| முடிவுறுத்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 141 | - | 122 | - |
| நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 3,150 | | 3,576 | - |
| வழக்குகள் மூலம் வசூலிக்கப்பட்ட தொகை | - | 4,1888,207 | - | 1,433,688 |
| விதிக்கப்பட்ட தண்டப்பணம் | - | 1,544,000 | - | 1,195,000 |
| விதிக்கப்பட்ட தண்டப் பணத்தொகையில் 75 % தொ.ந.நி. அனுப்பப்பட்ட பணத்தொகை | - | 1,158,000 | - | 896,250 |
| **•ஏனைய பிரிவுகளின் நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட சட்ட உதவிகள்** | | | | |
| உரிமங்களை மீளப் புதுப்பிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | 1,318 | - | 1,284 | - |
| பூர்த்தியாக்கப்பட்ட காப்புறுதிக் கோவைகளின் எண்ணிக்கை | 379 | - | 284 | - |
| குத்தகை உடன்படிக்கை மற்றும் ஏனைய உடன்படிக்கைகளை தயாரித்தலும் உறுதிப்படுத்தலும் | 45 | - | 16 | - |
| ஏனைய நிறுவனங்களால் நடாத்தப்பட்ட சட்ட பட்டறைகளின் எண்ணிக்கை | 19 | - | - | - |
| தேவை ஏற்படும் போது மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் அது போன்ற ஏனைய ஸ்தாபனங்களில் ஆஜராகி தேவையான தகவல்ளை வழங்குதல் | 10 | - | - | - |
| நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 04 | - | - | - |

❖ **புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை பாதுகாத்தலும் வலுவூட்டலும்.**

- **இலங்கை தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும் நடாத்தப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்**

இலங்கைத் தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்குமாக பணியகத்தின் நலன்புரி பிரிவினால் பின்வரும் நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன:

| | *ஆண்டு2014* | | *ஆண்டு2013* | |
|---|---|---|---|---|
| | *எண்ணிக்கை* | *தொகை ரூபா.மில்* | *எண்ணிக்கை* | *தொகை ரூபா.மில்* |
| காப்புறுதிக் கோரிக்கைகளின் கொடுப்பனவு | 2,728 | 161.93 | 2,784 | 130.52 |
| வெளிநாடு சென்ற தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும் விசேட நிதி உதவி வழங்குதல் | 69 | 3.847 | 163 | 9.21 |
| புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில்கள் | 3,064 | 57.9 | - | - |
| ஊனனமுற்ற புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வீடுகளை நிர்மாணித்து கொடுத்தல் | 04 முடிவுறுத்தப்பட்டுள்ளது<br><br>வேலை நடைபெற்று வருபவை 15 | 1.2<br>2.33 | வேலை நடைபெற்று வருபவை 13 | 2.3 |
| புலம்பெயர் தொழிலாளர்களின் மருத்துவமனைக் கொடுப்பனவு | - | - | 125 | 0.21 |
| புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் பேரூந்துக் கட்டணங்கள் மற்றும் சிற்றுண்டி வழங்கியமை | 452 | 0.067 | 475 | 0.066 |
| புலம்பெயர் தொழிலாளர்களின் விசேட திறன்களைக் கொண்ட பிள்ளைகளுக்கு நிதியுதவி அளித்தல் | 1,587 | 0.753 | 2008 | 15.15 |

| | | | | |
|---|---|---|---|---|
| வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுச் சென்று பின்பு நாடு திரும்பிய தொழிலாளர்களின் கடன் வட்டி மானியம் வழங்குதல். | 627 | 0.691 | 542 | 0.561 |
| வெளிநாட்டு தொழில் வாய்ப்புப் பெற்றுச்சென்ற தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ வசதிகள் அளிப்பதற்கு நடாத்தப்பட்ட மருத்துவ முகாம்கள். | 805 (ஆட்களின் எண்ணிக்கை) | 0.461 | - | - |

## சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 300 எண்ணிக்கையிலான சிறுவர்கள் நன்மை அடைந்துள்ளதுடன் ரூபா.1.5 மில்லியன் இதற்காக செலவழிக்கப்பட்டுள்ளது.

- கட்டுநாயக்க விமான நிலைய கரும பீடங்கள் ஊடாகவும் ”சஹன பியஸ” நலன்புரி உதவி நிலையத்தினுாடாகவும் இலங்கை தொழிலாளர்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்குதல்.

உதவி நாடி வரும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு நலன்புரி மற்றும் ஏனைய வசதிகளை அளிக்கும் நோக்குடன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வருடத்தின் 365 நாட்களிலும் 24 மணி நேரமும் சேவை கரும பீடங்கள் நான்கையும் “சஹன பியஸ” நலன்புரி உதவி நிலையத்தையும் நடாத்தி வருகிறது.

இலங்கைத் தொழிலாளர்கள் அவர்களது வேலைத்தளங்களில் முகங் கொடுத்த பல்வேறு பிரசசினைகள் காரணங்களின் நிமித்தம் இலங்கைக்கு திரும்பி வரும் போது விமான நிலையத்தில் வெளியேறுகை பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியக ஊழியர்கள் அவர்களை வரவேற்று அவர்களுக்கு உணவு உறைவிடம், போக்குவரத்து வசதிகள் மற்றும் மருத்துவ மனையில் சேர்த்தல் போன்ற வசதிகளை அளிப்பதற்காக “சஹன பியஸ” ஊழியர்களிடம் கையளிப்பர்.

இவ்வாறு வருகை தரும் புலம்பெயர் ஊழியர்களை விமான நிலையத்திலிருந்து “சஹன பியஸ'' நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கு 26 ஆசனங்களைக் கொண்ட பேருந்து ஒன்றும், அம்புலன்ஸ் மற்றும் இரண்டு வேன்கள் எப்போதும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டில் பயன் அடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 8549 ஆகும். (நாடு திரும்பியவர்களும் வெளிநாட்டுக்கு தொழிலுக்குச் சென்றவர்களும்)

“சஹன பியஸ” நிலையத்திலுள்ள மருத்துவ நிலையத்தில் கடமையாற்றும் மருத்துவ உத்தியோகத்தரின் பரிந்துரைக்கிணங்க சுகவீனமுற்றுள்ள பயணிகள் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மருத்துவமனை, தேசிய மருத்துவமனை, மனநோயாளர் மருத்துவமனை அல்லது அவர்களின் வதிவிடங்களுக்கு அண்மையாகவுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மருத்துவ மனைக்கு அனுமதிக்கப்படும் நாடு திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களின் மருத்துவ மனைக் கொடப்பனவுகள் பணியகத்தினால் மேற்கொள்ளப்படும்.

| | *ஆண்டு2014* | *ஆண்டு2013* |
|---|---|---|
| உணவு, தங்குமிட வசதிகள் வழங்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை | - | 11,448 |
| அவர்களின் வதிவிடங்களுக்கும் பேருந்து நிலையங்களுக்கும் போக்குவரத்து வசதிகள் அளிக்கப்பட்ட நாடு திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை | 169 | 260 |
| மருத்துவமனைகளுக்கு அனுமதிக்கப்பட்ட, நாடு திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை | 197 | 179 |
| பேருந்தில் செல்வதற்கு கட்டணங்கள் வழங்கப்பட்ட, நாடு திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை | 5,374 | 7,753 |

இதற்கும் மேலாக, வெளிநாட்டுக்குச் செல்வதற்கு முன்னர் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடு சென்று அங்கு தொழில் புரியும் போது மரணமடைந்தவர்களின் பூதவுடல் விமான நிலையத்தை வந்தடையும் போது மரணச் சடங்குச் செலவினமாக ஒரு பூதவுடலுக்கு ரூபா.30,000 படி வழங்கப்படும்.

தங்களின் வதிவிடங்களுக்கு தனித்துச் செல்ல முடியாத பெண் பிரயாணிகளுக்கு உதவும் முகமாக அவர்களது உறவினர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதற்கு அல்லது தந்தி அனுப்புவதற்கு அல்லது காவற்றுறையினர் ஊடாக செய்திகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்கூறிய வசதிகளை வழங்குவதற்காக பணியகத்திற்கு ஏற்பட்ட செலவுகள் கீழே தரப்பட்டுள்ளது.

| *விபரம்* | *ஆண்டு2014* | *ஆண்டு2013* |
|---|---|---|
| | *தொகை (ரூபா)* | *தொகை (ரூபா)* |
| பேருந்துக் கட்டணம் (நாடு திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை | 5,767,500 | 6,902,198 |
| உணவு - பிரயாணிகளுக்கு (காலை – மதியம் - இரவு - தேநீர்) | 585,867 | 555,768 |
| எரிபொருள் செலவினமும், வாகனங்கள் பேணல் செலவினமும் | 5,742,708 | 3,128,020 |
| ஏனைய நலன்புரி வசதிகள் (குழந்தைகளுக்கான ஆடைகள், சவர்க்காரம், குழந்தைகளுக்கான பால்மா ஆகியன) | 157,999 | 1,302,465 |
| விமான நிலையத்தில் ஏற்கப்படும் சடலங்களின் மரணச்செலவுகளுக்கு செலுத்தப்பட்ட தொகை | 5,025,500 | 2,813,500 |
| **மொத்தம்** | **17,279,574** | **14,701,951** |

- மத்தல விமான நிலைய கரும பீடங்கள் ஊடாகவும் “சஹன பியஸ” நலன்புரி உதவி நிலையத்தினூடாகவும் இலங்கை தொழிலாளர்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்குதல்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தை வினைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் பணியகமானது புறப்படுகை பிரிவில் 02 கரும பீடங்களையும் வெளியேறுகை பிரிவில் 01 கரும பீடத்தையும் செயற்படுத்தி வருகிறது. மேலாக மத்தல நலனோம்பல் நிலைய நிலையமும் செயற்படுகிறது.

விமான நிலையப் பிரிவில் முகாமையாளரின் மேற்பார்வையின்கீழ் பணியக ஊழியர்கள் 365 நாட்களும் 24 மணித்தியாலங்களும் நாலன்புரி நிலையங்களில் கடமையாற்றுகிறார்கள்.

- **விமான நிலையத்தின் புறப்படுகை பிரிவிலுள்ள கருமபீடத்தின் செயற்பாடுகளும் நிறைவேற்றங்களும்**

விமான நிலையத்தின் முகப்புக்கூட கருமபீடத்தில் (இடதுபக்கம்) கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் இலங்கைக் கடவுச் சீட்டையுடைய சகல பயணிகளையும் பரிசீலிப்பதன் மூலம் பணியக பதிவினை உறுதிப்படுத்துவார்கள். தனிப்பட்ட தொடர்புகள் மூலமாக தொழில் கருதி வெளிநாடு சென்று விடுமுறைக்காக இலங்கை திரும்பி மீண்டும் அதே வேலைத்தளங்களுக்குச் செலலும் பயணிகளுக்கு இந்தக் கருமபீடத்தில் பணியக பதிவினை மேற்கொள்வதற்கு வசதிகள் அளிக்கப்படும்.

- **நலன்புரி நிலையத்தினதும் நலன்புரி உதவி அளிக்கும் நிலையத்தினதும் செயற்பாடுகளும் செயல்நிறைவேற்றங்களும்**

இலங்கைத் தொழிலாளர்கள் அவர்களது வேலைத்தளங்களில் முகங் கொடுத்த பல்வேறு பிரச்சினைகள் காரணங்களின் நிமித்தம் இலங்கைக்கு திரும்பி வரும் போது அவர்களுக்கு உணவு உறைவிடம், போக்குவரத்து வசதிகள் மற்றும் மருத்துவ மனையில் சேர்த்தல் போன்ற வசதிகளை நலன்புரி நிலையமும் நலன்புரி உதவி நிலையமும் வழங்குகின்றன.

மேற்கூறப்பட்ட வசதிகளை வழங்குவதற்காக பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம்

| ***விபரம்*** | ***ஆண்டு 2014 (ரூபா)*** | ***ஆண்டு 2013 ரூபா*** |
|---|---|---|
| | | |
| பேருந்துக் கட்டணம் (புலம்பெயர் தொழிலாளர்கள்) | 3,400 | 1,700 |
| உணவு - பிரயாணிகள் (காலை – மதியம் - இரவு - தேநீர்) | 550 | 440 |
| எரிபொருள் செலவினமும், வாகனங்கள் பேணல் செலவினமும் | 1,310,860 | 1,109,296 |
| **மொத்தம்** | **1,314,810** | **1,111,436** |

- **பிற நாடுகளிலுள்ள இலங்கை தூதுவர் அலுவலகங்களினதும் மற்றும் ஏனைய அதிகாரிகளினதும் உதவியுடன் இலங்கை ஊழியர்களுக்கு பாதுகாப்பும், நிவாரணமும் வழங்குதல்**

வெளிநாட்டு உறவு பிரிவு (1) மற்றும் வெளிநாட்டு உறவு பிரிவு (11) மூலமாகப் பணியகத்தினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:

இலங்கைத் தொழிலாளர்கள் கடமையாற்றும் நாடுகளிலுள்ள இலங்கை தூதுவர் அலுவலகங்களில் தொழிலாளர் பிரிவுகளின் நடவடிக்கைகளை கூட்டிணைத்தல் மற்றும் செயற்திறன் மீளாய்வினை மேற்கொள்ளும் நோக்கில் வெளிநாட்டு நிருவாகம் மற்றும் வெளிநாட்டு உறவு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது.

தற்போது வெளிநாட்டு உறவுப் பிரிவானது மேலதிக பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் முகாமையாளர் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகிறது. இப்பிரிவில் இரண்டு உதவி முகாமையாளர்கள், நான்கு நிறைவேற்று உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட இருபது பணியார்கள் கடமையாற்றுகிறார்கள்.

**<u>வெளிநாட்டு நிருவாகம் மற்றும் வெளிநாட்டு உறவு பிரிவின் பிரதான நடவடிக்கைகள்</u>**

1. இலங்கை ஊழியர்கள் சம்பந்தமாக வெளிநாட்டுக் கொள்கைகளைத் தயார்செய்வதற்கு உதவுவதும் வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகங்கள் ஊடாக மேற்படி கொள்கைகளை அமுல்படுத்தல்

2. வெளிநாட்டு தொழிலாளர் நலன்புரி நிதியத்தினை மேற்பார்வை செய்தலும் கட்டுப்படுத்தலும்.

| **விபரம்** | **தொகை (ரூபா- மில்லியன்)** |
|---|---|
| வருவாய் சேகரிப்பு | 788.172 (2014 ஓக்டோபர் வரை) |
| செலவினம் | 753.442 (2014 ஓக்டோபர் வரை) |

ஆய்வில் உள்ள ஆண்டின்போது பன்னிரண்டு (12) தொழிலாளர் நலன்புரி நிதிய குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

3. **வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் தொழிலாளர் பிரிவுகளை வலுவூட்டுதலும் செயலாற்றலைக் கட்டியெழுப்புதலும்**

2014 ஆம் ஆண்டில் இலங்கைத் தூதரகங்களின் தொழில் பிரிவுகளது முதலாம் நிலைச் செயலாளர், இரண்டாம் நிலைச் செயலாளர், மூன்றாம் நிலைச் செயலாளர், தொழில் எழுதுநர்கள் மற்றும் சிற்றூழியர்கள் மற்றும் பல்வேறு பதவிகளுக்கென 47 அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர். 27 உத்தியோகத்தர்களுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

4. **தூதரகங்களில் இலங்கை வெளிநாட்டு வேலைவாயப்புப் பணியகத்தின் பதிவுகளை மேற்பார்வை செய்து அறிவித்தல்**

ஆய்வில் உள்ள ஆண்டின்போது இலங்கை தூதரகங்களினால் 6810 மீளப் புதுப்பித்தல்களும் முதலாவது பதிவுகளும் செய்யப்பட்டன.

**5. வெளிநாடுகளில் அநாதவான நிலைக்கு ஆளான இலங்கையர்களை மீண்டும் இலங்கைக்குக் கொண்டுவருவது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

| | திருப்பி அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை | ஏற்பட்ட செலவினம் (ரூபா.மில்) |
|---|---|---|
| காப்புறுதித் திட்டத்தின் கீழ் | 850 | 25.198 |
| தொ.ந.நியத்தின் கீழ் | 242 | 9.29 |
| **மொத்தம்** | **1092** | **34.488** |

**6. புலம்பெயர்ந்து பிறநாடுகளில் பணியாற்றும் இலங்கைத் தொழிலாளர்களின் மரண விடயங்களைக் கவனித்தலும் அவர்களின் சடலங்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு உதவி புரிதலும்**

பிறநாடுகளில் பணிபுரியும்போது மரணமடைந்த இலங்கையர்கள் சார்பாக மரண நட்டஈடுகள், வேதன நிலுவைகள் மற்றும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஏனைய கொடுப்பனவுகள், குருதிக் கூலி ஆகியனவற்றை பெறுவதற்கு உதவுதல்.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட சடலங்களுக்கு சொந்தமான உறவினர்களுக்கு மரணச் சடங்கு செலவினமாக ரூபா.10,000 அல்லது ரூபா.30,000 வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| • உதவி வழங்கியதன் மூலம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட மனித சடலங்களின் எண்ணிக்கை<br>• மொத்தச் செலவினம் (இலங்கை ரூபா மில்லியன்) | 22 | 4.95 |
| • தொழிலாளர் நலன்புரி நிலையத்தின் கீழ் வழங்கப்பட்ட பணத்தொகைகள் (இறப்புக்களின் எண்ணிக்கை)<br>• மொத்தச் செலவினம் (இலங்கை ரூபா மில்லியன்) | 247 | 5.025 |

**7. தொழில்வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் புலம்பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்களின் நலன்களைக் கவனிப்பதற்கும் தற்போது இலங்கைத் தொழிலாளர்கள் பணியாற்றும் நாடுகளுக்கும், இலங்கைத் தொழில்களைப் பெறுவதற்கு எதிர்பார்க்கும் நாடுகளுக்கும் பிரதிநிதிகளை அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளல்**

| பிரதிநிதிகள் | எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | செலவு (இலங்கைரூ-மில்) |
|---|---|---|---|
| அனுப்பப்பட்டது | 36 | 190 | 20.062 |
| வருகை தந்தது | 11 | 127 | 2.208 |
| **மொத்தம்** | **47** | **317** | **22.27** |

**8. ஓமானில் பணிபுரியும் இலங்கையர்களின் நலன் கருதி ஓமானுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.**

**பிறநாட்டு உறவுபிரிவின்(II) செயல் நிறைவேற்றம் பின்வருமாறு:**

| நடவடிக்கை | முன்னேற்றம் | மொத்தச் செலவு |
|---|---|---|
| பெறப்பட்ட நம்பகத்தன்மை வாய்ந்த அறிக்கைகளின் எண்ணிக்கை | 11 | |
| உதவிகோரி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு வருகை தந்தவர்களுக்குப் பேரூந்துக் கட்டணங்களைக் கொடுத்தல் | 90 | 68,500 |
| மிக அண்மிய உறவினர்களுக்கு உணவு வழங்கியமை | 824 | 137,110 |
| கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் | 1,320 | |
| முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகள் (சுயமாக பதிவு செய்த தொழிலாளர்கள்) | 369 | |
| முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகள் (உள்ளூர் முகவர்களினால் ஆட்சேர்க்கப்பட்டவர்கள்) | 1,264 | |
| பணிபுரிந்த நாடுகளிலிருந்து இலங்கை திரும்பியவர்களுக்கான மீளளிப்பு வைப்புப்பணம் அமெரிக்கன் டொலர் 1000 | 693 | 83,134,000 |

- **முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளலும் தீர்த்து வைத்தலும்**

பணியகத்தின் இணக்கப் பிரிவு முறைப்பாடுகளை ஏற்றலையும் தீர்த்து வைத்தலையும் கையாளுகின்றது. இப்பிரிவின் செயல்நிறைவேற்றம் பின்வருமாறு:

**முறைப்பாடுகளைத் தீர்த்துவைத்தல்**

| | ***வருடம் 2014*** | ***வருடம் 2013*** |
|---|---|---|
| கிடைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 7,213 | 9,231 |
| தீர்த்து வைக்கப்பட்ட /முடிவுறுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 6,577 | 8,447 |
| நட்டஈடு வழங்கப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை | 434 | 447 |
| நட்டஈடாகச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை (ரூபா) | 20,677,805 | 21,608,238 |

- **ஏனைய நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்**

**பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பாக பங்குதாரர்களுக்கும்/ இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அலுவலர்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்**

பொதுமக்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல் (வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சேவைகள், மற்றும் தொழில் கருதிய பாதுகாப்பான புலம்பெயர்வு)

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 01 | 0 | 09 | 02 | 12 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0.60 | 0 | 0.58 | 0.021 | 1.201 |

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்களுக்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சேவைகள், மற்றும் தொழில் கருதிய பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பாக விழிப்புணர்வு/திறன் உருவாக்கம் பற்றிய நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 03 | 05 | 10 | 07 | 25 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0.02 | 0.10 | 0.005 | 0.042 | 0.167 |

அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகள் தொடர்பாக மேற்பார்வை செய்தலும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதலும்

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 03 | 24 | 14 | 20 | 61 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0.06 | 0.02 | 0.84 | 0.05 | 0.97 |

**தொழிலாளர் நலன்புரி நிதியத்தின் கீழ் புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு உதவி அளித்தல்**

புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சிகளுக்காக புலமைப் பரிசில்கள் / நிதி உதவி வழங்குதல்

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பயனடைந்தவர்களின் எண்ணிக்கை | 0 | 0 | 0 | 02 | 02 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0 | 0 | 0 | 0.015 | 0.015 |

**புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்**

தேவையைக் கருத்திற் கொண்டு "ரட்ட விருவோ" அமைப்புக்களுக்கு வலுவூட்டலும், கிராம சேவகர் மட்டத்தில் அல்லது சமுர்த்தி பிராந்திய மட்டத்தில் கழகங்களை ஸ்தாபித்தல் (செயல்திறனைக் கட்டி எழுப்பலும் பொருள் வகை உதவி அளித்தல், பயிற்சி அளித்தல் ஆலோசனை வழங்குதல் மற்றும் பொருட்கள் வழங்குதல்

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 40 | 36 | 226 | 94 | 396 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0.51 | 0.088 | 3.394 | 0 | 3.992 |

ரட்டவிரு குடும்பங்களின் அபிவிருத்திக்கு விழிப்புணர்வூட்டும் மற்றும் வாதிடும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் (கிராம சேவகர்கள் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்)

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 05 | 11 | 41 | 349 | 406 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0.049 | 0.11 | 0.90 | 10.351 | 11.41 |

ரட்டவிரு குடும்ப நலன் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகத் தகவல், கல்வி, மற்றும் தொடர்பாடல் பொருட்களை விருத்தி செய்தல்

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பொருட்களின் எண்ணிக்கை | 40,000 | 0 | 0 | 0 | 40,000 |
| செலவினம் (ரூபா மில்லியன்) | 0.158 | 0 | 0 | 0 | 0.158 |

புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வித் தரத்தை முன்னேற்றும் முகமாக (பாடசாலை மட்டத்தில்) பிள்ளைகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 04 | 06 | 18 | 14 | 42 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0.08 | 0.048 | 0.102 | 0 | 0.23 |

"ரட்டவிரு பியஸ" செய்திட்டத்தின் கீழ் ரட்டவிருவோக்களுக்கு வீடுகளை நிர்மானித்துக் கொடுத்தல் (சமூர்த்தி அதிகார சபையுடன் இணைந்து) "ரட்டவிரு பியஸ" பயனாளிகளுடன் இணைந்த அணிதிரட்டல் மற்றும் விரைவான கடன் வசூல் பற்றிய நிகழ்ச்சி

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | 1,161 | 2,542 | 2,624 | 1,929 | 8,256 |
| பூர்த்தியாக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | | 448 | 914 | 1,921 | 3,283 |
| செலவினம் (ரூபா.மில்) (சமூர்த்தி அதிகார சபையினால் கடன் வழங்கப்பட்டது) | | | | | |

குடும்பப் பின்னணி அறிக்கைகளுடன் குடும்பப் பிரச்சினைகளை ஆராய்ந்து விதந்துரைத்தல்

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பயனாளிகளின் எண்ணிக்கை (பிரதேச செயலாளர்களின் பிரயாணச் செலவுகள் ) | | | 32 | 32 | 64 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | | | 0.74 | 0.114 | 0.854 |

அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கையடக்கத் தொலைபேசிப் பட்டியல்களின் கொடுப்பனவு

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 837 | 993 | 0 | 993 | 2,823 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 1.28 | 1.03 | 0 | 0.65 | 2.96 |

**புலம்பெயர் தொழிலாளர்களின் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களிடையே STD , HIV/AIDS நோய்கள் தொற்றுவதைத் தடுத்தல்**

ரட்டவிருவோ சங்க உறுப்பினர்களுக்கு கிராம மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதுல் ( ஒவ்வொரு அபிவிருத்தி உத்தியோகத்தரும் கிராம மட்டத்தில் தடுப்புப் பிரசாரங்களை நடாத்துதல

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 0 | 0 | 37 | 10 | 47 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0 | 0 | 0.047 | 0 | 0.047 |

புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் நலன்களை மேம்படுத்தும் பொருட்டு நலன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் ( மதுபானம் / புகையிலை பாவனையைத் தடுப்பது உள்ளிட்ட மகிழ்ச்சிகரமான குடும்பப் பண்புகளைத் தெளிவுபடுத்தும் குடும்ப நல நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், குடும்ப தினத்தன்று நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்)

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 623 | 431 | 3,552 | 0 | 4,606 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0 | 0 | 0 | 0 | 0 |

**வெற்றியடைந்த புலம்பெயர் தொழிலாளரை / குடும்பங்களை ஊக்குவித்தல், கௌரவித்தல் மற்றும் அங்கீகரித்தல்**

ஆட்களை இனங்காணுதல்

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஆட்களின் எண்ணிக்கை | 23 | 0 | 17 | 330 | 370 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0 | 0 | 0 | 0 | 0 |

ஆவணப்பபடுத்தப்பட்ட வெற்றிக் கதைகள்

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வெற்றிக் கதைகளின் எண்ணிக்கை | 23 | 0 | 17 | 330 | 370 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0 | 0 | 0 | 0 | |

புலம்பெயர் தொழிலாளர்களுக்கு சமூகமயப்படுத்தலுக்கு உதவுதல்

வெளிநாட்டிலிருந்து திரும்பி வருபவர்களுக்கு சுயதொழிலொன்றினை ஆரம்பிப்பதற்கு உதவுதல்

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பயனாளிகளின் எண்ணிக்கை | 100 | 334 | 1,405 | 232 | 2,071 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0 | 0 | 0.027 | 0 | 0 |

வெளிநாட்டிலிருந்து திரும்பி வருபவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்/ வாய்ப்புள்ள விண்ணப்பதாரர்களை பயிற்றுவித்தல்

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பயனாளிகளின் எண்ணிக்கை | 100 | 334 | 1,405 | 232 | 2,071 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0 | 0 | 0.027 | 0 | 0 |

வழங்கப்பட்ட உதவிகள் பற்றிய பின்னாய்வு

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 0 | 334 | 65 | 39 | 438 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0 | 0 | 0 | 0 | 0 |

நாடு திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களுக்கு சமூர்த்தி அதிகாரசபை ஊடாக சுயதொழில் கடன்களை வழங்குதல் (கள விஜயம் உள்ளிட்ட)

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 43 | 1,213 | 1,322 | 594 | 3,172 |
| ஆரம்பிக்கப்பட்ட செய்திட்டங்கள் | 43 | 132 | 346 | 59 | 580 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0 | 0 | 0 | 0 | 0 |

தங்களது வேலைத்தளங்கலில் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நலன் மேம்பாட்டு முன்னேற்றத் திட்டங்களை நடாத்துதல் ( பாரிய பிரச்சினைகளுடன் நாடு திரும்பியவர்களுக்கு வீடு, சுயதொழில் வசதி மற்றும் சமூகமயப்படுத்தல்)

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 01 | 01 | 0 | 0 | 02 |
| செலவினம் (ரூபா- மில்லியன்) | 0.025 | 0.35 | 0 | 0 | 0.375 |

## ❖ புலம்பெயர்தலும் அபிவிருத்தியும்

- **தென்கொரியாவிற்கான இலங்கையர் ஆட்சேர்ப்பு**

தொழில் அனுமதி முறைமையின் கீழ் தொழிலாளர்களை அனுப்புவதற்கு இலங்கை அரசாங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை தென்கொரியக் குடியரசுடன் செய்துகொண்டுள்ளது.

ஆட்சேர்ப்புப் பிரிவின் செயல் நிறைவேற்றம்

அதற்கிணங்க, ஆட்சேர்ப்புப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன:

தொழில் அனுமதிப்பத்திர முறைமையின் கீழ் ஆட்சேர்ப்பு பிரிவின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு

- தொழில் விரும்பிகளின் தெரிவு
- கொரியன் மொழி பயிற்சியினை நடாத்துதல்
- கொரியன் மொழிப் பரீட்சைக்கான தயாரிப்பு
- தென்கொரியாவுக்கு தொழிலாளர்களை அனுப்புதல்

| | *ஆண்டு 2014* | *ஆண்டு 2013* |
|---|---|---|
| தென்கொரியாவிலிருந்து பெறப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | 4,416 | 4,891 |
| தென்கொரியாவிலிருந்து பெறப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை - மறுநுழைவு | 115 | 524 |
| தொழில் விரும்பிகளால் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கைகள் (சாதாரணம்) | 3,625 | 4,002 |
| கையொப்பமிடுவதற்கு மறுக்கப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை (சாதாரணம்) | 130, | 120 |
| தொழில் விரும்பிகளால் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கைகள் (மறுநுழைவு) | 127 | 507 |
| கையொப்பமிடுவதற்கு மறுக்கப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை (மறுநுழைவு) | 09 | 25 |
| தொழில் விரும்பிகளால் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கைகள் (விசேட) | 648 | 749 |
| கையொப்பமிடுவதற்கு மறுக்கப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை (விசேட) | 07 | 15 |
| புறப்படுவதற்கு முன்னதாக பயிற்சி அளிக்கப்பட்ட தொழில் விரும்பிகளின் எண்ணிக்கை | 3,505 | 3,903 |
| அங்கீகரிக்கப்பட்ட வங்கிக் கடன்களின் எண்ணிக்கை | 1,147 | 1,141 |
| தென்கொரியாவுக்கு தொழில் பெற்றுச் சென்றவர்களின் எண்ணிக்கை | 4,120 | 4,323 |
| தென்கொரியாவுக்கு தொழில் கிடைக்கப்பெற்று சென்றவர்களின் எண்ணிக்கை - மீளப் பிரவேசித்தல் | 185 | 522 |

- **தொழில் கிடைக்கப்பெறும் வாய்ப்பினையுடைய புலம்பெயர் தொழிலாளர்களுக்கான பயிற்சி**

| *வீட்டைப் பராமரித்தலும் கவனித்துப் பேணுதலுக்குமான பயிற்சி* | *2014 இல் பயிற்சியளிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை* | *2013 இல் பயிற்சியளிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| மத்திய கிழக்கு (சிங்களம்) – வீட்டுப் பராமரிப்பு | 11,225 | 18,054 |

| | | |
|---|---|---|
| எழுத்தறிவு | 712 | 1,993 |
| இஸ்ரேல் | 1,186 | 1,597 |
| சிங்கப்பூர் | 359 | 563 |
| சைப்பிரஸ் | 538 | 593 |
| TOT நிகழ்ச்சித்திட்டம் | 06 | 06 |
| நிறைவுசெய்யப்பட்ட தேசிய தொழிற் தகைமைச் சான்றிதல் மதிப்பீடுகள் | 7,985 | 4,101 |
| ஐந்து நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | | |
| ➢ வகுப்புகளின் எண்ணிக்கை | 1,430 | 1,400 |
| ➢ பங்குபற்றியோரின் எண்ணிக்கை | 42,810 | 45,565 |

- **திட்டமிடல் பிரிவு**

பிரிவின் விடயப்பரப்பு

கூட்டுத்திட்டத்தையும் வருடாந்த செயல் ரீதியான திட்டத்தையும் தயாரித்தல், திட்டமிடப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றங்களை காலாண்டுக்கு ஒருமுறையும், வருடாந்தமும் மேற்பார்வை செய்தல் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினுள் தரஉறுதித்திட்டத்தினை மேற்பார்வை செய்தல்

பணிகள் / நடவடிக்கைகளும் அவற்றின் செயல் நிறைவேற்றங்களும்:

| | நடவடிக்கை | முன்னேற்றம் |
|---|---|---|
| அ. | ISO 9001:2008 தர முகாமைத்துவ முறைமையினை மேற்பார்வை செய்தல் | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக வாடிக்கையாளர்களுக்கு உயர்தரமான சேவையை வழங்கும் நோக்கத்துடன் தலைமை அலுவலகத்துக்கும் சகல கிளைகளுக்கும் 2012.11.06 ஆம் திகதி தொடக்கம் 2015.11.05 ஆம் திகதிவரை ISO 9001: 2008 தரச்சான்றிதழ் வருடாந்த தணிக்கை அடிப்படையில் வழங்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் கணக்காய்வு அடிப்படையில் புதுப்பிக்கப்படலாகும். |
| | • இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக ஊழியர்களுக்கு தொடர்ச்சியான மேம்பாடு சம்பந்தமாக வழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை- 33 |
| | | தலைமை அலுவலகத்தில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை -01 |
| | | முகாமைத்துவ மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை -2 |
| | • பணியாளர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை -3 |
| | • தலைமை அலுவலகம் | உள்ளகக் கணக்காய்வு – 26 (தலைமை |

| | | |
|---|---|---|
| | மற்றும் கிளை அலுவலகங்களில ISO 9001:2008 மீதான வருடாந்த கணக்காய்வினை மேற்கொள்ளல் | அலுவலகம் 2- கிளை அலுவலகங்கள் - 24)<br>மூன்றாம் தரப்புக் கணக்காய்வு -1 |
| ஆ. | **உற்பத்தித்திறன், முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலை வருடாந்தம் மேறபார்வை செய்தல் (5 S கோட்பாடு)** | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக பத்தரமுல்ல அலுவலகம், விமான நிலையப்பிரிவு, சஹன பியஸ மற்றும் 07 பிராந்திய அலுவலகங்கள், 12 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் 5 S கோட்பாட்டினை தொடர்ந்து அமுலாக்குதல். |
| | • உற்பத்தித் திறன் மேம்பாடு தொடர்பான பணியாளர் பயிற்சி | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை - 4 |
| | • 5 S நிகழ்ச்சித்திட்டங்களின் அமுலாக்கத்தினை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் | சகல பிரிவுகளுக்கும் உற்பத்தித்திறன், தர வட்டங்களைத் ஸ்தாபித்தமை,<br>கள விஜயம் - 30 |
| | | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் சிறிய அளவு சேவைத்துறைக்கான 2012 / 2013 தேசிய உற்பத்தித்திறன் விருது இரத்தினபுரி மாகாண அலுவலகத்திற்கு வழங்கப்பட்டது. |
| இ. | **நிறுவனத்தின் திட்டங்களை அமுலாக்கலும் கண்காணித்தலும்** | |
| | • வருடாந்த செயற் திட்டத்தினை தயார் செய்வதற்கான கூட்டங்களை நடாத்துதல் | 2015 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயற் திட்டத்தினை தயாரித்தல் |
| | • வருடாந்த செயற் திட்டத்திற்கு எதிரான செயல் நிறைவேற்றத்தினை மீளாய்வு செய்வதற்கான கூட்டங்களை நடாத்துதல் | செயல் நிறைவேற்ற மதிப்பீட்டினை ஆராய்வதற்காக உயர் முகாமைத்துவ அலுவலர்கள், ஏனைய பிரிவுகளின் பொறுப்பதிகாரிகளின் பங்கு பற்றுதலுடன் செயல் நிறைவேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன - 03 |
| ஈ. | **மாதாந்த முன்னேற்ற அறிக்கை தொடர்பான மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துவதற்கு உதவியமை** | |
| | • முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்காக கூட்டங்களை நடாத்துதல் | அமைச்சினதும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உயர்மட்ட முகாமைத்துவ அலுவலர்களின் பங்குபற்றுதலுடன் அறிக்கையில் / குறிப்புக்களில் கூறப்பட்டுள்ள செயற் பாடுகளின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்காக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன - 07 |

- **வர்த்தக மூலோபாயங்களுக்கு உதவும் பொருட்டு நிறுவனத்தின் வளங்களைப் பயன்படுத்திக்கொள்ளல்**

2014 ஆம் ஆண்டின் நிறுவன இலக்குகளைப் பூர்த்தி செய்ய உதவுகின்ற பிரிவுகளாக நிர்வாகம், மனிதவளம், நிதி, கொள்வனவு, பராமரிப்பு, போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், உள்ளகக் கணக்காய்வு மற்றும் ஆராய்ச்சி ஆகிய பிரிவுகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. மேற்படி பிரிவுகளின் செயலாற்றுகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- **நிருவாகம் மற்றும் மனிதவள அபிவிருத்திப் பணியாளர்களின் விபரங்கள்**

| | *பதவியணி விபரங்கள்* | *நிரந்தர* | *ஒப்பந்த* | *விடுகைபெற்று பணியாற்றுபவர்* | *வகுத்து ஒதுக்குதல்* |
|---|---|---|---|---|---|
| ஆண்டு2013 | எண்ணிக்கை | 821 | 248 | 16 | 03 |
| ஆண்டு 2014 | எண்ணிக்கை | 1,026 | 70 | 16 | 05 |

**ஆட்சேர்ப்புகள்**

2014 இல் செய்யப்பட்ட ஆட்சேர்ப்புகள்

| வகுப்பு | பதவி | ஆட்சேர்பபுகளின் அடிப்படை | ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | நிதி முகாமைத்துவ ஆலோசகர் | ஒப்பந்த | 01 |
| M-VI | பத்திரிகை உத்தியோகத்தர் | நிரந்தர | 01 |
| M-VI | இணைப்பு உத்தியோகத்தர் | நிரந்தர | 01 |
| - | அரபுமொழி மொழிபெர்ப்பாளர் | ஒப்பந்த | 01 |
| S-IV | பொது உதவியாளர்கள் | ஒப்பந்த | 17 |
| | வீட்டுப் பராமரிப்பு பயிற்றுவிப்பாளர்கள் | ஒப்பந்த | 03 |
| | கற்பிப்பாளர்கள் | ஒதுக்கீடு | 03 |
| S-IV | சாரதிகள் | ஒப்பந்த | 04 |
| S-VI | சாரதி உதவியாளர் | ஒப்பந்த | 01 |
| S-VI | அலுவலக முதலுதவியாளர் | ஒப்பந்த | 21 |

**நிரந்தர பதவியணியில் உள்வாங்கப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலாள ஊழியர்கள் - 2014**

- பொது உதவியாளர் - 135
- கள உதவியாளர் - 22
- சாரதிகள் - 38
- சாரதி உதவியாளர் - 01
- அலுவலக முதலுதவியாளர்கள் - 16

- மின் தொழில்நுட்பவியலாளர்கள் - 02
- A/C தொழில்நுட்பவியலாளர்கள் - 02

**பதவியணியினர் வெளியேறுகை பற்றிய விபரங்கள் - இராஜினாமா 2014**

| வகுப்பு | பதவி | ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| M-VI | இணைப்பதிகாரி | 01 |
| M-VI | அரபுமொழி மொழிபெர்ப்பாளர் | 02 |
| S-IV | பொது உதவியாளர்கள் | 06 |
| S-IV | நலனோம்புகை உதவியாளர் | 01 |
| S-IV (A)I | கள உதவியாளர் | 01 |

**ஏனைய பதவியணியினர் வெளியேறுகை 2014**

| வகுப்பு | பதவி | காரணம் |
|---|---|---|
| M-II | மேலதிக பொது முகாமையாளர் | ஓய்வு |
| M-VI | முகாமையாளர் | ஓய்வு |
| M-VI | நிருவாக உத்தியோகத்தர் | ஓய்வு |
| M-VI | முறைமை பகுப்பாய்வாளர் | பதவி ஒழிவு |
| - | அரபுமொழி மொழிபெர்ப்பாளர் | ஓப்பந்தம் முடிவு |
| S-II | பொது உதவியாளர் | முறிவுறல் |
| S-IV | பொது உதவியாளர்கள் | ஓப்பந்தம் முடிவு |
| S-IV | நலனோம்புகை உதவியாளர் | மரணம் |
| S-IV (A)I | கள உதவியாளர் | முறிவுறல் |
| S-VI | அலுவலக முதலுதவியாளர் | ஓப்பந்தம் முடிவு |

**உள்ளக பதவி உயர்வுகள் -2014**

| இராஜினாமா | வகுப்பு | பதவி உயர்த்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| முகாமைத்துவ பயிற்சியாளர் | S-I | 14 |
| பதவிநிலை உதவியாளர் | S-I | 29 |

| | | |
|---|---|---|
| தரவுப் பதிவுநர் | S-II | 08 |
| நலனோம்புகை உதவியாளர் | S-II | 25 |
| பொது உதவியாளர் | S-II | 26 |

**ஒப்பந்த காலம் நீடிப்பு - 2014**

| | |
|---|---|
| ஆலோசகர்கள் | 02 |
| கூட்டிணைப்பாளர்கள் | 01 |
| மொழிபெயர்ப்பாளர்கள் | 09 |
| விமான பிரயாண நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | 02 |
| பொது உதவியாளர்கள் | 137 |
| கள உதவியாளர்கள் | 20 |
| விமானப் பயணச்சீட்டு உதவியாளர் | 01 |
| வீட்டு பராமரிப்பு பயிற்றுவிப்பாளர் | 01 |
| சாரதிகள் | 14 |
| அலுவலக முதலுதவியாளர்கள் | 09 |
| மின் பொறியியலாளர்/ குழாய் பழுதுபார்ப்பவர் | 02 |
| AC தொழினுட்பவியலாளர்கள் | 02 |

**பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் விபரங்கள் / செயலமர்வுகள்**

| | பங்குபற்றியோர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,513 |
| செயலமர்வுகள் | 28 |

2014 ஆம் ஆண்டில் ஊழியர்களின் பயிற்சி வசதிகளுக்கான செலவு ரூபா.5,052,030/-.

* கலாநிதி மட்டத்திற்கு கல்விப்படிப்பினை மெற்கோள்வதற்கு ஊழியர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கான ஏற்பாடு

* வருடாந்த பயிற்சித் திட்டத்தைத் தயார் செய்தல்.

* இலங்கைத் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தும் நாடுகளுக்கு நிலைமைகளை அறிந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட வழமையான பிரயாணங்கள்.

❖ **மருத்துவச் செலவினத்தின் மீளளிப்பு**

2014 ஆம் ஆண்டு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட மருத்துவச் செலவினத்தின் மீளளிப்புத் தொகை ரூபா. 27,460,862.51

❖ **பதவியணியினர் கடன் திட்டம்**

2014 ஆம் ஆண்டில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் விபரங்கள்

| | அங்கீகரிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| இடர் கடன் | 393 | 69,814,229.00 |
| வாகன கடன் | 63 | 30,804,000.00 |
| வீட்டுக் கடன்களுக்கான வட்டி மீளளிப்பு (கோரிக்கைகளின் எண்ணிக்கை) | 704 | 7,113,141.87 |
| உடனடிக் கடன்கள் | 94 | 2,995,383.00 |
| பண்டிகை முற்பணம் | 758 | 3,790,000.00 |

❖ **பதவியணியினர் போக்குவரத்து**

05 இடங்களுக்கு போக்குவரத்து வசதிகள் அளிக்கப்பட்டன. (மத்துகம, இரத்தினபுரி, நிட்டம்புவ, கோட்டை, ஹொரணை). 2014 ஆம் ஆண்டில் போக்குவரத்துக்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூபா.11,664,288/-

❖ **தினப்பராமரிப்பு கட்டணங்களை மீளளித்தல்**

2014 ஆம் ஆண்டில் பணியாளர் நலன்புரித் திட்டத்தின் கீழ் தினப்பராமரிப்பு கட்டணமாக ரூபா. 202,050/- ஊழியர்களுக்கு மீளளிக்கப்பட்டது.

**கொள்முதல் பிரிவு**

2014 ஆம் ஆண்டில் கொள்முதல் பிரிவு பின்வரும் சேவைகளை ஆற்றியுள்ளது:

- பொருட்களையும் சேவைகளையும் உரிய காலத்தில் கொள்முதல் செய்தல்
- வழங்குநர்களின் வருடாந்த பதிவு
- விமான நிலையக் கருமபீடங்கள் தொடர்பான விடயங்கள்
- பயன்படுத்தப்பட்ட சொத்துக்களை அகற்றுதல்
- பொருத்தமான காப்புறுதி காப்பீட்டின் மூலம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புக் பணியகத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல்
- வழங்குநர்களுக்கான நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல்
- பணியாளர்களுக்கான சீருடை மற்றும் ஏனைய பயன்பாட்டு பொருட்களை ஏற்பாடு செய்தல்

- பயிற்சி நிலையங்களுக்கும் பிராந்திய அலுவலகங்களுக்கும் கட்டடங்களை வாடகைக்கு அமர்த்தல் தொடர்பான நடவடிக்கைகள்.
- இ.வெ.வே.பணியகத்திற்குத் தேவையான சொத்துக்களைக் கையகப்படுத்தல்

**பராமரிப்புப் பிரிவு**

2014 ஆம் ஆண்டில் பராமரிப்புப் பிரிவானது பணியகத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் பயன்பாட்டு சேவைகளைப் பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதுடன் பயன்பாட்டு பற்றுச்சீட்டுக்களைத் தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை

**நிதிப் பிரிவு**

வருவாய் சேகரித்தல், பற்றுச்சீட்டுக்களைத் தீர்த்தல், நிதி முதலீடுகள், வளைகுடா போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு பகிரந்தளித்தல் போன்ற பொறுப்புகள் பணியகத்தின் நிதிப் பிரிவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளன.

- **<u>தகவல் தொழில்நுட்பப் பிரிவு</u>**

**தகவல் தொழில்நுட்பப் பிரிவு**

**நிகழ்ச்சி திட்ட அபிவிருத்திப் பிரிவு**

இந்தப் பிரிவானது கட்டமைப்புப் பகுப்பாய்வாளரின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வருவதுடன் 7 கணினி நிகழ்வரைவாளர்களை கொண்டுள்ளது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஏனைய பிரிவுகளின் பல்வேறுபட்ட தேவைகளின் பிரகாரம் கணனி நிகழ்வரைகளை வடிவமைத்துப் பேணுவது இப்பிரிவின் பொறுப்பாகும். கட்டுப்படுத்தப்பட்ட தொடர்பு வலைப்பின்னல், வலையமைப்பு சார்ந்த முறைமை, உள்ளூர் பரப்பு வலையமைப்பு தொடர்பான கணனி நிகழ்வரைகள், நிகழ்வரை அபிவிருத்திப் பிரிவினால் வடிவமைக்கப்பட்டு விருத்தி செய்யப்படுகிறது. இலங்கை வெ்ளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இணையத்தளம் இப்பிரிவினால் பேணப்பட்டு வருகிறது. (www.slbfe.lk)

தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப முறைமை, பிராந்திய அலுவலகங்களுடனும், தீவுபூராகவுமுள்ள பயிற்சி நிலையங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளதுடன் வெளிநாடுகளிலுள்ள 16 இலங்கை தூதரகங்களின் தொழில் பிரிவுகளுடனும் இணைக்கப்பட்டுள்ளது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சகல சேவைகளும் அனேகமாக தகவல் தொழில்நுட்ப முறைமையின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

**வன்பொருள் கூறு**

பணியகத்தின் வன்பொருள் பிரிவானது 5 தொழில்நுட்பவியளாலர்களை கொண்டுள்ளதுடன், பணியகத்தின் கணினிகள் மற்றும் வலையமைப்பினைப் பராமரிக்கும் கடமைகளை மேற்கொண்டு வருகிறது.

பணியகத்தின் வலயமைப்பின் முறையான செயற்பாட்டிற்கும் கணினி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின் போது உடனடி தீர்வு வழங்குவதற்கும் இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது. இப்பிரிவின் வினைத்திறன் மிக்க சேவையினால், கணினிகளில் ஏற்படும் பழுதுபார்த்தல் போன்ற தேவைகளுக்கு வெளிநபர்களுக்கு வழங்கும் பணத்தை மீதப்படுத்த முடிந்துள்ளதுடன் அனாவசியமாக ஏற்படும் கால தாமதங்களை தவிர்க்க முடிந்துள்ளது.

### தகவல் தொழில்நுட்பப்பிரிவின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி

தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள பிரதான கணினி வழங்கியுடன் பணியகத்தின் சகல பயிற்சி நிலையங்களும் பிராந்திய அலுவலகங்களும் இணைக்கப்பட்டுள்ளன. IP/VPN இணைப்பினூடாக பணியகத்தின் சகல பயிற்சி நிலையங்களையும், பிராந்திய அலுவலகங்களையும் தலைமையகத்துடன் இணைப்பதற்கு கணினி நேரடி தொடர்பு முறைமை செயற்படுத்தப்பட்டது. தூதரகங்களிலுள்ள தொழில் பிரிவுகள் சர்வதேச வலையமைப்பு மூலமாக தலைமை அலுவலகத்திலுள்ள கணினி வழங்கியுடன் இணைக்கப்படுவதற்கு கணினி நேரடி தொடர்பு வலைப்பின்னல் முறைமை செயற்படுத்தப்பட்டது. இதனை விருத்தி செய்வதற்காக இக்கணினி நேரடி தொடர்பு வலைப்பின்னல் முறைமையில் பிரவேசித்து அதனூடே ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனுமதி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் முகவர் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வெளியே ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள இலங்கை பணியாளர்களை அடையாளம் காணுவதற்காக இலகுவில் பரிசீலிக்கக்கூடியவாறான அளவிடக்கூடிய உடல் பண்புகளை பதிப்பதற்கான கணினி விண்ணப்பம் செயற்படுத்தப்பட்டது.

பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களின் வெளிநாட்டு பிரயாண நகர்வுகளைக் கண்டுபிடிக்கக்கூடியவாறு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துடன் தரவுகளைப் பகிர்ந்து கொள்ளும் முறைமை செயற்படுத்தப்பட்டது.

### <u>உள்ளக கணக்காய்வுப் பிரிவு</u>

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது, முகாமைத்துவக் கட்டுப்பாடுகளையும் செயற்பாட்டு நிறைவேற்றங்களையும், சட்டங்கள், ஒழுங்குவிதிகள், முகாமைத்துவக் கொள்கைகள், பொறுப்புக் கூறும் நடவடிக்கைகள், ஒழுக்க நெறி மற்றும் ஒப்பந்தக் கட்டுப்பாடுகள் ஆகியனவற்றுக்கு எந்த அளவில் இணங்கிச் செயற்படுகிறார்கள் என்பதனையும் மதிப்பீடு செய்கிறது. அத்துடன் இப்பிரிவானது பணியகத்தின் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவக் கட்டுப்பாடுகள் சம்பந்தமான விடயங்கள் தொடர்பில் பரிந்துரைகளை வழங்குவதற்காக நிறுவனத் திட்டத்தின் மதிப்பீடு சகல கூட்டிணைக்கப்பட்ட முறைமைகள், அளவீடுகளிலும் ஈடுபடுகிறது.

உள்ளகக் கணக்காய்வானது உள்ளகக் கட்டுப்பாட்டில், ஒரு தனியான பகுதியாகவுள்ளதுடன், உள்ளகக் கட்டுப்பாடு முறையாக வடிவமைக்கப்பட்டு, ஒழுங்காக செயற்படுத்தப்படுகின்றதா என்பதை உறுதிசெய்வதற்காக நிறுவப்பட்டுள்ளது.

இணக்க கணக்காய்வு, முகாமைத்துவக் கணக்காய்வு, செயற்பாட்டுக் கணக்காய்வு என்பன உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் நடாத்தப்படும் கணக்காய்வுகளாகும்.

நிறுவனத்தின் சட்டங்கள், ஒழுங்கு விதிகள், முகாமைத்துவக் கொள்கைகள், செயற்பாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பொறுப்புக் கூறும் நடவடிக்கைகள், ஒழுக்க நெறி மற்றும் ஒப்பந்தக் கட்டுப்பாடுகள் போன்றவற்றின் இணக்கப்பாடு பற்றி மதிப்பீடு செய்தல் இணக்கக் கணக்காய்வாகும்.

முகாமைத்துவ கணக்காய்வானது, ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் அல்லது குறிப்பிட்டதொரு திகதியில் கட்டுப்பாட்டு நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டனவா என்பதனை தீர்மானிப்பதற்கு, செயற்பாட்டு மற்றும் உதவி வழங்கும் சேவைப் பிரிவுகள்/ முறைமைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறனை மதிப்பீடு செய்யும் பிறிதொரு கணக்காய்வாகும். சட்டங்கள், ஒழுங்குவிதிகள், முகாமைத்துவக் கொள்கைகள், பொறுப்புக் கூறும் நடவடிக்கைகள் , ஒழுக்கநெறி, ஓப்பந்தக் கட்டுப்பாடுகள் ஆகியன குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் எந்தளவிற்கு இணங்கிச் செயலாற்றப்படுகின்றதென்பதை தீர்மானித்தலும் முகாமைத்துவக் கணக்காய்வில் உள்ளடக்கப்படுகிறது.

செயற்பாட்டு கணக்காய்வானது வெளியீடு, உள்ளீட்டு முறைமை சட்டங்கள், விதிமுறைகள், முகாமைத்துவ கொள்கைகள், பொறுப்புக் கூறும் நடவடிக்கைகள் மற்றும் ஒப்பந்தக் கட்டுப்பாடுகள் இணக்கப்பாடுகள் உள்ளிட்ட அரசாங்க செயற்பாடுகள், பயனுள்ள நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்கள், வினைத்திறன், நன்னெறி மற்றும் பொருளாதாரம் போன்றவற்றினை தீர்மானிக்கும் செயற்பாட்டு விளைவினை மதிப்பீடு செய்யும் மற்றுமொரு கணக்காய்வாகும்.

பணியகச் செயற்பாடுகளின் பயன், வினைத்திறன், சிக்கனம், ஒழுக்கம் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதன் முக்கியத்துவமானது சிறந்த அரச சேவையினை வழங்குவதற்கும், பொறுப்புக் கூறலுக்கும், நல்லாட்சி செய்வதற்கும் வழிவகுக்கும். மதிப்பீட்டின் நோக்கம் விளைவுகளை, உற்பத்தி அளவுகளை, நடைமுறைகளை கணிப்பீடு செய்வதாகும்.

உள்ளகக் கட்டுப்பாட்டின் ஒரு கருவியாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் சகல உறுப்பினர்களும் செயற்பட்டு தங்களின் பொறுப்புக்களை நிறைவேற்றுகையில் பின்வரும் ஆறு பிரதான கோட்பாடுகளைப் பின்பற்றி, தரமான கணக்காய்வினை மேற்கொண்டுள்ளார்கள்.

1. அக்கறை முரண்பாடு
2. நோக்கமும் பக்கச்சார்பின்மையும்
3. தொழில்சார் திறமை
4. அதிகாரமும் இரகசியமும்
5. ஒழுக்கமும் நடத்தையும்
6. உள்ளக கணக்காய்வு தரங்களையும் நடைமுறைகளையும் பிரயோகித்தல்

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் விடயப்பரப்பு கீழ்வருமாறு :

அ. பணியகத்தின் நோக்கங்கள் நிறைவேற்றம் பற்றி கண்காணித்தலும் ஸ்தாபித்தலும்

ஆ. வளங்களைச் சிக்கனமாகவும் பயனுள்ளதாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்தல்

| மீள் நுளைவு கொரிய கட்டணம்- ஆவனப்படுத்தல் மற்றும் முறைமைப் பராமரிப்பு | 3,294,503 | | 3,294,503 | 9,295,840 |
| பயிற்சிக் கட்டணங்கள் | | 159,807,926 | 159,807,926 | 180,857,021 |
| கொரிய பயிற்சிக் கட்டணங்கள் | | 62,733,861 | 62,733,861 | 57,412,419 |
| **மொத்தம்** | **1,385,360,415** | **463,732,937** | **1,849,093,352** | **1,541,310,327** |
| **கூட்டுக: ஏனைய வருவாய்** | | | | |
| வெளிநாட்டு உதவிகளும் மானியங்களும் | - | - | - | 214,959 |
| சர்வதேச தொழிலாளர் அமைப்பிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பங்களிப்பு | - | - | - | - |
| **விமானப்பயணச்சீட்டுப் பிரிவிற்கு கிடைத்த தரகு** | 4,750,132 | | 4,750,132 | 7,043,486 |
| முதலீடுகளின் வட்டி | 268,666,048 | 183,857,269 | 452,523,316 | 361,105,699 |
| வெளிநாட்டு பணியாளர் நலன்புரி நிதியத்திற்கான செலவு மீள் நிரப்பல் | - | **707,232,003** | **707,232,003** | 617,550,479 |
| ஊழியர் கடன்களுக்கான வட்டி | 13,300,164 | - | 13,300,164 | 11,182,279 |
| இ வெ. வே. ப முகவர் நிலைய பங்கிலாபம் | 0 | - | - | 750,000 |
| நிலையான சொத்து விற்பனை இலாபம் | | - | - | - |
| சில்லறை வருமானம் | 422,522,113 | 11,916,902 | 434,439,015 | 332,029,966 |
| **தொ.ந.நிதியத்திற்கான பங்களிப்பு (பணியகம்)** | **(290,000,000)** | **290,000,000** | | |
| | **419,238,458** | **1,193,006,173** | **1,612,244,631** | **1,329,876,868** |
| **மொத்த வருமானம்** | **1,804,598,873** | **1,656,739,111** | **3,461,337,983** | **2,871,187,195** |
| **கழி: செலவினம்** | | | | |
| **ஊழியர் செலவுகள்** | **772,447,395** | **47,017,022** | **819,464,418** | **670,992,410** |
| **தாபனச் செலவுகள்** | **193,782,939** | **99,764,412** | **293,547,351** | **244,483,733** |
| **தொழிற்பாட்டுச் செலவினம்** | **233,447,869** | **26,378,744** | **259,826,613** | **245,020,772** |
| **விளம்பரங்களும் அறிவித்தல்களும்** | **92,909,843** | **108,223,494** | **201,133,337** | **82,030,721** |
| **வியாபார ஊக்குவிப்பு செலவுகள்** | **98,677,993** | - | **98,677,993** | **45,648,305** |
| **பணியாளர் நலன்புரி நிதியச் செலவுகள்** | - | **1,372,116,594** | **1,372,116,594** | **1,273,294,305** |
| **மொத்தச் செலவினம்** | **1,391,266,040** | **1,653,500,266** | **3,044,766,306** | **2,561,470,246** |
| **செலவினம் மீதான வருமான மிகை** | **413,332,833** | **3,238,844** | **416,571,678** | **309,716,949** |
| **கழி: வரிவிதிப்பிற்கான ஏற்பாடு** | **115,733,193** | **906,876** | **116,640,070** | **86,720,746** |
| **திரண்டநிதியத்திறகான மன் கொண்டுசெல்லப்பட்ட மீதி** | **297,599,640** | **2,331,968** | **299,931,608** | **222,996,203** |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | | |
| வெளிநாட்டு தொழிற்பாடு மாற்றுதலில் நாணய பெறுகை/இழப்பு. | | 35,520,118 | 35,520,118 | 11,649,013 |
| பணிக்கொடை மீதான ஏற்பாடு | 9,638,178 | | 9,638,178 | 8,503,555 |
| மீள் விலை மதிப்பீட்டு மிகை | | | | |
| ஓய்வூதிய திட்டம் மீதான காப்பீட்டுக் கணிப்பு பெறுகை / இழப்பு | | | | |
| **ஏனைய விரிவான வருமானம்** | **9,638,178** | **35,520,118** | **45,158,296** | **20,152,568** |
| **மொத்த விரிவான வருமானம்** | **307,237,818** | **37,852,086** | **345,089,904** | **243,148,771** |

பணியகத்தின் தனிப்பட்டவர்களின் ஆட்சேர்ப்புகள்மீது சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் மீதான மொத்தப் பெறுகைகளும் வசதிக் கட்டணங்கள் மற்றும் ஆட்சேர்ப்புக் கட்டணங்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளன.

பதிவுக் கட்டணங்கள் (தனிப்பட்ட), பதிவுக் கட்டணங்கள் (முகவர் நிலையம்), உத்தரவுச்சீட்டுக் கட்டணங்கள், பயிற்சியளித்தல் கட்டணங்கள் , செஸ்வரி வருமானம், முதலீட்டு வருமானம் மற்றும் பிற வருமானம் ஆகியன இயல்பாகச் சேர்தல் அடிப்படையில் நிருணயிக்கப்படுகின்றன.

| 20. தொழில்படு வருமானம் | குழு<br>2014 - ரூபா | பணியகம்<br>2014 - ரூபா | குழு<br>2013 - ரூபா | பணியகம்<br>2013 - ரூபா |
|---|---|---|---|---|
| ஆட்சேர்ப்புக் கட்டணங்கள் - முகவர் நிலையம் | 527,321,250 | 527,321,250 | 511,056,500 | 511,056,500 |
| ஆட்சேர்ப்புக் கட்டணங்கள் - தனிப்பட்ட | 654,174,000 | 654,174,000 | 600,521,500 | 600,521,500 |
| வசதிகள் கட்டணங்கள் | 58,804,400 | 58,804,400 | 58,311,200 | 58,311,200 |
| உத்தரவுச்சீட்டுக் கட்டணங்கள் | 70,000,000 | 70,050,000 | 80,209,500 | 80,209,500 |
| செஸ் வருமானம் | 292,213,827 | 292,226,077 | 21,951,865 | 21,951,865 |
| கொரியா நிருவாகக் கட்டணங்கள் | 20,681,335 | 20,681,335 | 21,694,482 | 21,694,482 |
| மீள் நுழைவு கொரியா கட்டணம் - ஆவணமிடல் மற்றும் முறைமை பராமரிப்பு | 3,294,503 | 3,294,503 | 9,295,840 | 9,295,840 |
| கொரியா பயிற்சிக் கட்டணங்கள் | 62,733,861 | 62,733,861 | 57,412,419 | 57,412,419 |
| விளம்பரத்துக்கான அங்கீகாரம் | 101,965 | | 79,265 | |
| பயிற்சி வருமானம் | 159,807,926 | 159,807,926 | 180,857,021 | 180,857,021 |
| ஆட்சேர்ப்புச் செய்தல் வருமானம் | 17,668,677 | | 10,103,863 | |
| முகவர் நிலைய உரிமைக் கோரிக்கை | 3,668,000 | | 3,129,000 | |
| மேலதிக காப்புறுதி நிதியம் | 9,435,065 | | | |
| காப்புறுதித் தரகு | 25,136,369 | | | |
| வைத்திய நிலைய வருமானம் | 2,198,363 | | | |
| ஏனைய வருமானம் | 17,236 | | 33,843,068 | |
| **மொத்தம்** | **1,907,256,776** | **1,849,093,352** | **1,588,465,523** | **1,541,310,327** |

## இலங்கை வெளிநாட்டு வேலைவவாய்ப்பு பணியகம்
### 2014.12.31 ஆந் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான விரிவான செலவினக் கூற்று

| விபரம் | குழு 2014 ரூபா | "2014 பணியகம் ரூபா | ப.ந. நிதியம் ரூபா | பணியகம் 2014 ரூபா | குழு 2013 ரூபா | பணியகம் 2013 ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 22 ஊழியர் செலவினம் | | | | | | |
| சம்பளங்களும் கூலிகளும் | 421,172,890 | 387,645,983 | 20,487,876 | 408,133,859 | 347,652,343 | 336,152,897 |
| ஊழியர் நலனோம்புகை | 110,330,313 | 103,185,020 | 6,123,495 | 109,308,515 | 81,981,502 | 80,902,867 |
| ஊ.சே.நி மற்றும் ஊ ந. நி | 51,716,198 | 48,089,625 | 2,531,033 | 50,620,658 | 59,305,085 | 58,288,631 |
| வீடமைப்புக் கடன் மீதான வட்டி மீள் நிரப்பல் | 7,887,594 | 7,493,214 | 394,380 | 7,887,594 | 6,730,235 | 6,730,235 |
| மிகை ஊதியம் | 90,807,525 | 84,717,608 | 4,458,821 | 89,176,430 | 70,039,233 | 68,463,288 |
| மேலதிக நேரம் | 68,388,558 | 64,264,150 | 3,382,324 | 67,646,474 | 73,772,296 | 72,903,434 |
| பிரயாணம் | 24,348,233 | 17,777,013 | 6,571,220 | 24,348,233 | 16,449,044 | 16,414,633 |
| பணிக்கொடை | 57,381,846 | 53,748,250 | 2,777,004 | 56,525,254 | 25,488,012 | 25,097,342 |
| ஊழியர் பயிற்சி | 5,891,403 | 5,526,532 | 290,870 | 5,817,403 | 6,055,273 | 6,039,083 |
| | **837,924,560** | **772,447,396** | **47,017,023** | **819,464,419** | **687,473,024** | **670,992,410** |
| தாபனச் செலவுகள் | | | | | | |
| அச்சிடல், காகிதாதிகள் மற்றும் பயன்படு பொருட்க | 47,705,444 | 42,202,088 | 4,194,324 | 46,396,413 | 40,493,196 | 39,587,769 |
| தொலைபேசியும் தபாற் செலவும் | 48,279,085 | 42,948,378 | 4,363,588 | 47,311,966 | 45,613,547 | 44,594,454 |
| வாடகை | 68,031,573 | 30,148,453 | 37,883,120 | 68,031,573 | 47,809,672 | 47,809,672 |
| வளாகப் பராமரிப்பு | 22,185,705 | 10,352,988 | 10,342,297 | 20,695,285 | 15,910,284 | 14,522,747 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 795,271 | 566,065 | 29,206 | 595,271 | 708,768 | 533,768 |
| மினசாரம் | 48,729,717 | 38,144,765 | 9,921,017 | 48,065,782 | 44,283,196 | 43,719,693 |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | 48,410,309 | 19,879,560 | 27,897,650 | 47,777,210 | 42,293,903 | 41,672,022 |
| துண்டுவிகித அடிப்படையிலான பணியாளர் செலவு | 30,390 | 28,871 | 1,520 | 30,390 | 31,175 | 31,175 |
| பணிப்பாளர் கட்டணங்களும் பிரயாணமும் | 1,157,630 | 579,719 | 30,512 | 610,230 | - | 643,500 |
| நீர் | 6,479,689 | 2,731,054 | 3,625,920 | 6,356,974 | 6,942,870 | 6,804,183 |
| மெதுவாக நகருகின்ற பொருடகளுக்கான செலவு | 9,960,857 | - | - | - | - | - |
| ஆலோசனை மற்றும் சட்டக்கட்டணங்கள் | 301,765,670 | 6,200,998 | 1,475,259 | 7,676,257 | 5,591,617 | 4,564,751 |
| | **603,531,340** | **193,782,939** | **99,764,412** | **293,547,351** | **249,678,228** | **244,483,733** |
| தொழிற்பாட்டு செலவுகள் | | | | | | |
| நிலையான நொத்துகளின் பெறுமானத் தேய்வு | 158,212,816 | 131,898,461 | 19,412,578 | 151,311,039 | 162,510,196 | 158,364,034 |
| மோட்டார் வாகன இயக்கச் செலவுகள் | 61,439,159 | 55,190,131 | 3,630,578 | 58,820,710 | 63,492,974 | 58,460,658 |
| வாகன வாடகை | 23,920,791 | 22,724,751 | 1,196,040 | 23,920,791 | 11,581,887 | 11,315,495 |
| பொருளாதார சேவைக் கட்டணங்கள் | 3,757,661 | 3,707,438 | 50,223 | 3,757,661 | - | - |
| கணனி இயக்கச் செலவுகள் | 4,730,387 | 4,527,996 | 202,391 | 4,730,387 | 4,251,246 | 4,162,104 |
| அலுவலக உபகரண பராமரிப்பு | 10,156,178 | 8,597,484 | 1,387,889 | 9,985,373 | 8,942,520 | 8,731,282 |
| நிதிக்கட்டணங்கள்( கடன்வட்டி, குத்தகைக் கட்டணங்கள்,கோரப்படாத பெ.சே.வசெலவுகள், அரசாங்க வரி,தே.க.வ) | 5,998,945 | 1,625,264 | 95,257 | 1,720,521 | 2,182,141 | 1,721,228 |
| புதினப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் | 1,575,644 | 1,346,225 | 194,209 | 1,540,434 | 1,389,434 | 1,353,334 |
| பெற முடியாக் கடன் | 374,348 | 355,631 | 18,717 | 374,348 | 144,112 | 144,112 |
| நிலையான சொத்துகளின் விற்பனை நட்டம் | - | - | - | - | - | - |
| பொதுச் செலவுகள் | 4,185,478 | 3,474,487 | 190,862 | 3,665,350 | 1,191,909 | 768,525 |
| | **274,351,406** | **233,447,869** | **26,378,744** | **259,826,613** | **255,686,419** | **245,020,772** |
| விளம்பரங்களும் அறிவித்தல்களும் | | | | | | |
| விளம்பரங்கள் | 48,116,197 | 26,992,392 | 20,809,479 | 47,801,872 | 42,911,684 | 40,776,572 |
| தொலைக் காட்சி நிகழ்ச்சி செலவு | 86,494,758 | 28,474,089 | 58,020,670 | 86,494,758 | 8,646,606 | 8,646,606 |
| வானொலி நிகழ்ச்சி செலவு | 44,907,110 | 19,173,629 | 25,733,481 | 44,907,110 | 7,280,446 | 7,280,446 |
| விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 21,929,597 | 18,269,734 | 3,659,864 | 21,929,597 | 25,463,753 | 25,327,097 |
| | **201,447,662** | **92,909,843** | **108,223,494** | **201,133,337** | **84,302,488** | **82,030,721** |
| வியாபார ஊக்குவிப்புச் செலவுகள் | | | | | | |
| வியாபார ஊக்குவிப்பு பணி | 20,464,297 | 20,464,297 | - | 20,464,297 | 26,983,037 | 25,905,405 |
| சந்தை ஊக்குவிப்புச் செயற்பாடுகள் | 64,008,956 | 56,944,653 | - | 56,944,653 | 14,701,564 | 11,526,883 |
| கொரிய கருத்திட்ட செலவுகளும் ஆட்சேர்ப்புச் செலவுகளும் | 20,349,740 | 20,349,740 | - | 20,349,740 | 8,973,804 | 6,725,831 |
| விமானப்ப பயணச் சீட்டு அலகிற்கான நேரடிச் செலவுகள் | 6,214 | 6,214 | - | 6,214 | 6,214 | 6,214 |
| கருத்தரங்குகளும் செயலமர்வுகளும் | 902,493 | 902,493 | - | 902,493 | 1,483,972 | 1,483,972 |
| | **105,742,296** | **98,677,993** | **-** | **98,677,993** | **52,148,591** | **45,648,305** |

| விபரம் | குழு 2014 ரூபா | '2014 பணியகம் ரூபா | '2014 தொ.ந. நிதியம் ரூபா | பணியகம் 2014 ரூபா | குழு 2013 ரூபா | பணியகம் 2013 ரூபா |
|---|---|---|---|---|---|---|
| **பணியாளர் நலனோம்புகை நிதியம்** | | | | | | |
| பயிறசி செயற்பாடுகள் | 148,317,736 | | 148,317,736 | 148,317,736 | 163,881,622 | 159,841,808 |
| தொ.ந.நி. மீதான செலவினம் | 707,232,003 | - | **707,232,003** | **707,232,003** | 617,550,479 | 617,550,479 |
| குடிபெயர் பணியாளர் காப்புறுதிச் செலவு | 223,694,803 | - | 239,515,737 | 239,515,737 | 249,472,235 | 249,472,235 |
| குடிபெயர் தொழிலாளரகளின் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில்கள் | 88,121,526 | - | 88,121,526 | 88,121,526 | 1,737,061 | 1,737,061 |
| பாடசாலைப் புத்தகங்கள் விநியோகம் | 1,184,414 | - | 1,184,414 | 1,184,414 | 18,235,657 | 18,235,657 |
| வங்கிக் கடன்கள் மீதான வட்டி மானியம் | 515,295 | - | 515,295 | 515,295 | 531,118 | 531,118 |
| நலன்புரி நிலையம்- சீதுவை | 14,556,386 | - | 14,556,386 | 14,556,386 | 21,678,950 | 21,678,950 |
| குடிபெயர் தொழிலாளர்களின் பங்களிப்புகள் மீதான வட்டி | 461,925 | - | 461,925 | 461,925 | 553,446 | 553,446 |
| நல்லிணக்கமும் ஏனைய உள்நாட்டு வெளிநாட்டு நலனோம்புகை பணியும் | 982,557 | - | 982,557 | 982,557 | 575,569 | 575,569 |
| மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டமும் | 260 | - | 260 | 260 | 479,000 | 479,000 |
| குடிபெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு கருத்திட்ட செலவு | - | - | | - | - | - |
| குடிபெயர் பணியாளர்களுக்கான சமூக நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டம் | 5,121,680 | - | 5,121,680 | 5,121,680 | 6,201,753 | 6,201,753 |
| குறைந்த வருமானமுடைய குடிபெயர் பணியாளர்களுக்கான வீடமைப்புத்திட்டம் | 39,009 | | 39,009 | 39,009 | - | - |
| வலது குறைந்த குடிபெயர் பணியாளர் களுக்கான வீடமைப்புக் கருத்திட்டம் | 2,556,180 | - | 2,556,180 | 2,556,180 | 5,268,642 | 5,268,642 |
| புறப்படுவதற்கு முன்னர் அறிமுகப் பயிற்சி நிலைய நிலைய செலவுகள் | - | - | - | - | - | - |
| குடிபெயர் பணியாளர்களுக்கான நலனோம்புகை வசதிகள் | 629,613 | - | 629,613 | 629,613 | 169,282 | 169,282 |
| குடிபெயர் பணியாளர்களுக்கான சட்ட உதவி | 604,485 | - | 604,485 | 604,485 | - | - |
| வெளிநாட்டு கணக்காய்வு மீதான வெளிநாட்டுப் பிரயாணம் | 3,315,498 | | 3,315,498 | 3,315,498 | 1,572,458 | 1,572,458 |
| மரணச் செலவு விசேட அளிப்புத்திட்டம் | 5,105,600 | - | 5,105,600 | 5,105,600 | 1,290,500 | 1,290,500 |
| தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ளும் நாடுகளுக்கான ஆய்வுப் பயணங்கள் | 10,235,862 | - | 10,235,862 | 10,235,862 | 4,407,854 | 4,407,854 |
| குடிபெயர் பணியாளர்களுக்கான மருத்துவசெலவுகள | 1,225,087 | - | 1,225,087 | 1,225,087 | 4,401,232 | 4,401,232 |
| இ.வெ.வே.பணியக செயற்பாடுகள் பற்றிய பயிலுநர்களுக்கான பயிற்சி | - | | - | - | - | - |
| பணியக பதிவுக்கட்டணங்கள் மீதான VAT&NBT | 16,867,594 | | 16,867,594 | 16,867,594 | 10,962,285 | 10,962,285 |
| தறு திரிய நிகழ்சிசத் திட்ட செலவுகள் | 5,299,928 | | 5,299,928 | 5,299,928 | 12,987,904 | 12,987,904 |
| சிறுவர் பாதுகாப்பினை தரப்படுத்தும் நிகழ்ச்சி | 142,593 | | 142,593 | 142,593 | 901,000 | 901,000 |
| முறைப்பாடுதாரர்களுக்காக பஸ் கட்டணங்கள் மற்றும் சிற்றுண்டிகள் வழங்குதல் | 381,380 | | 381,380 | 381,380 | 502,166 | 502,166 |
| எதிர்கால சபீட்சத்திற்காக சிறுவர்களைப் பாதுகாப்போம் நிகழ்ச்சித்திட்டம். | 4,900 | | 4,900 | 4,900 | - | - |
| குடிபெயர் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கான மருத்துவ முகாம். | 31,642 | | 31,642 | 31,642 | 94,599 | 94,599 |
| சர்வதேச குடிபெயர் தின செலவுகள் | 175 | | 175 | 175 | 8,094,700 | 8,094,700 |
| ரட்டவிரு கருத்திட்டச் செலவுகள் | 84,577,052 | | 84,577,052 | 84,577,052 | 37,817,875 | 37,817,875 |
| புறப்படு முன்னர் அறிமுகப் பயிற்சி செலவுகள் | 185,415 | | 185,415 | 185,415 | 499,805 | 499,805 |
| கொரிய ஆட்சேர்பு நலனோம்புகைச் செலவுகள் | 190,230 | | 190,230 | 190,230 | 7,685,900 | 7,685,900 |
| சஹன பியச - மத்தள | 8,236 | | 8,236 | 8,236 | | |
| ரட்டவிரு சங்சிகை செலவுகள் | 3,190 | | 3,190 | 3,190 | | |
| ரட்டவிரு டெலன்ட் ஸ்டார் | 34,703,406 | | 34,703,406 | 34,703,406 | 105,174,143 | 99,781,027 |
| | **1,356,295,660** | **-** | **1,372,116,594** | **1,372,116,594** | **1,282,727,235** | **1,273,294,305** |

**21.**

| ஏனைய தொழிற்படு வருமானம் | குழு 2014 - ரூபா | பணியகம் 2014 - ரூபா | குழு 2013 - ரூபா | பணியகம் 2013 - ரூபா |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு உதவிகளும் மானியங்களும் | | | 214,959 | 214,959 |
| விமானச் சீட்டுப் பிரிவினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தரகு | 4,750,132 | 4,750,132 | 7,043,486 | 7,043,486 |
| முதலீடுகளிலிருந்து கிடைத்த வட்டி | 465,978,238 | 452,523,316 | 361,105,699 | 361,105,699 |
| வெளிநாட்டில் தொழில்புரிவோர்களின் நலன்புரி நிதியச் செலவுகளின் மீள்நிரப்பல் | 707,232,003 | 707,232,003 | 617,550,479 | 617,550,479 |
| பதவியினர் கடன்களின் வட்டி | 13,344,892 | 13,300,164 | 11,182,279 | 11,182,279 |
| சில்லறை வருமானம் | 435,085,959 | 434,439,015 | 332,029,966 | 332,029,966 |
| சேமிப்புகளின் மீதான வட்டி | | | 949,109 | - |
| நிலையான வைப்புகளின் மீதான வட்டி | | | 15,268,113 | - |
| வாகன அகற்றல் மூலம் கிடைக்கப்பெற்ற இலாபம் | 3,853,869 | | | |
| ஏனைய வருமானம் | | | 5,840,742 | 750,000 |
| **மொத்தம்** | **1,630,245,094** | **1,612,244,631** | **1,351,184,832** | **1,329,876,868** |

## 22. செலவினம்

நேரடியாகக் கண்டறியப்பட முடியாத தொழிலாளர்களின் நலனோம்பல்கள் மீது மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பொதுத் திறைசேரியின் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்டதன் பிரகாரம் பின்வருமாறு குறித்தொதுக்கப்படுகின்றன:

வீதம்

| | |
|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | 5% |
| மேலதிக நேரம் | 5% |
| ஊ.சே.நிதியமும் வேதனமும் | 5% |
| மிகையூதியம் | 5% |
| பிரயாணச் செலவும் உதவிப் பணமும் | 5% |
| பணிக்கொடை | 5% |
| பதவியினரின் நலனோம்பலும் பயிற்சியும் | 5% |

| | |
|---|---|
| ஊழியருக்கான நட்டஈடு | 5% |
| அச்சு காகிதாதிகளும் நுகர்பொருட்களும் | 5% |
| தொலைபேசி மற்றும் தபால் | 5% |
| கட்டட வாடகை | 5% |
| கட்டிட தொகுதிகளின் பராமரிப்பு | 5% |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 5% |
| நீர் மற்றும் மின்சாரம் | 5% |
| பாதுகாப்புச் செலவுகள் | 5% |
| துண்டு வீத தொழிலாளர்களின் செலவு | 5% |
| பணிப்பாளர் கட்டணங்களும் போக்குவரத்தும் | 5% |
| ஆலோசனை மற்றும் சட்டக் கட்டணங்கள் | 5% |
| மோட்டார் வாகன பராமரிப்புச் செலவுகள் | 5% |
| வாகனங்களைக் குத்தகைக்குவிடல் | 5% |
| பற்று வரி | 5% |
| சிக்கனச் சேவைக் கட்டணங்கள் | 5% |
| கணினி பராமரிப்புச் செலவு | 5% |
| உபகரணங்களின் பராமரிப்பு | 5% |
| நிதிக் கட்டணங்கள் | 5% |
| பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் | 5% |
| திருப்பிச் செலுத்தமுடியாத கடன்களுக்கான ஏற்பாடு | 5% |
| பொதுச் செலவுகள் | 5% |
| சொத்துக்களின் விற்பனை மீதான நட்டம் | 5% |
| விளம்பரங்கள் | 5% |

| | |
|---|---|
| தொலைக்காட்சி மற்றும் ரேடியோ நிகழ்ச்சித்திட்டம் | 5% |
| விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 5% |

**பிற்போடப்பட்ட செலவினம்**

ஒன்றுக்கு மேற்பட்ட நிதி ஆண்டுகளுக்கு நன்மையை அல்லது தொடர்பை ஏற்படுத்துமெனக் கருதப்படும் செலவினமானது பிற்போடப்பட்ட செலவினமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய செலவினமானது அது சம்பந்தப்பட்டுள்ள கால்பகுதிக்கு நேர்கோட்டு அடிப்படையொன்றில் பதிவழிக்கப்படுகின்றது.

**தீர்க்கப்படாத பற்றுச்சீட்டு**

2014ஆம் ஆண்டு தொடர்பிலான கொடுப்பனவு உறுதிச் சீட்டுகள் தகுந்த அங்கீகாரங்கள் இல்லாமலிருந்தமை மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் குறிக்கோளுக்கு இயைபில்லாமலிருந்த பல்வேறு காரணங்கள் ஆகியவற்றின் நிமித்தம் தீர்வு செய்யப்படவில்லை. குறிப்பிட்ட சேவைகள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளதுடன் இப்பற்றுச்சீட்டுகள் மீதான பொறுப்பு எழலாம். கடன் வழங்குபவர்களின் விவரங்களும் செலவினத்தின் தன்மையும் பின்வருமாறு:

| **விநியோகத்தரின் பெயர்** | **செலவினத் தன்மை** | **தொகை ரூபா** |
|---|---|---|
| அசோசியேட்டட் நியூஸ்பேர்ப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் | விளம்பரங்கள் | 649,799 |
| ஆசியன் மீடியா பப்பிளிகேசன் | விளம்பரங்கள் | 206,727 |
| எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் | விளம்பரங்கள் | 100,000 |
| குடிவரவுத் திணைக்களத்தின் நலன்புரி சங்கம் | விளம்பரங்கள் | 200,000 |
| லும்பினி கொலிஜ் CRI | ரேடியோ நிகழ்ச்சித்தொகுப்பாளர் | 250,000 |
| லக்விரு ரேடியோ | ரேடியோ நிகழ்ச்சித்தொகுப்பாளர் | 125,000 |
| ஏ.எம்.உமாரத் | ரட்டவிரு கருத்திட்டம் | 10,335 |
| அதுல குமார | ரட்டவிரு கருத்திட்டம் | 60,917 |

| | | |
|---|---|---|
| CFC பயிற்சி நிலையம் | ரட்டவிரு கருத்திட்டம் | 173,600 |
| றிவர் சைட் ஹொலிடே | ரட்டவிரு கருத்திட்டம் | 12,430 |
| பேன்லி கிறியேசன் | அச்சிடல் | 88,000 |
| அமல் பிறின்டிங் | அச்சிடல் | 357,665 |
| ஹோமாகம MPCS | அச்சிடல் | 65,250 |
| சிறி லங்கா ரெலிகொம் | தொலைபேசி பற்றுச்சீட்டு | 18,986.19 |
| சுரேஸ் குமார் | தொலைபேசி பற்றுச்சீட்டு | 10,240 |
| எக்ஸ்பிரஸ் ஹொலிடே கம்பனி | வாகனம் கூலிக்கமர்த்தல் | 5,043,881 |
| **மொத்தம்** | | **7,372,830** |

## 23. தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

(i) 2014ஆம் ஆண்டில் இப்பணியகத்திடமிருந்து வரையறுக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு (பிறைவேட்) முகவர் நிலையமானது முகவர் நிலையத்தின் தரகாக 3,983,000/-ரூபாவைக் கொண்ட 70 சதவீதத் தரகை வழங்குமாறு உரிமைக்கோரிக்கை செய்துள்ளது.

(ii) 2014ஆம் ஆண்டில் பின்வரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் உத்தரவு பெற்றவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியத்தின் சபை உறுப்பினர்களாகச் சேவையாற்றியுள்ளனர். ஆட்சேர்ப்புக் கட்டணத்தின் 70 சதவீதம் 2014ஆம் ஆண்டில் அவர்களுக்கு பின்வருமாறு மீளளிப்புச் செய்யப்பட்டது.

| *பணிப்பாளரின் பெயர்* | *முகவராண்மை* | *மீளளிக்கப்பட்ட தொகை- (ரூபா)* |
|---|---|---|
| திரு. பீ.பி. நியன்தாதுபொல | தேசக்தி லங்கா என்டபிறைசஸ் (L.L. NO.1534) | 7,616,000 |
| திரு.ஏ.ஆா.பீ. நிஹமத்தீன் | கியுபீ எம்பிளோய்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட் (L.L.1316) | 18,142,250 |
| திரு.எம்.எம்.மன்சூர் | பா என்ரபிறய்சஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (L.L.428) | 2,723,000 |

| | | |
|---|---|---|
| திரு.எல்.ஏ. பெரேரா | லகோடான் (பிறைவேட்) லிமிட்டெட் | 5,061,000 |
| திரு. எஸ்.ஈ.டி. ரத்நாயக்க | அஸ்லிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மை | 140,000 |

**24. உள்நாட்டுத்துறையினால் செலுத்தப்பட வேண்டியுள்ள பதிவுக் கட்டணங்களுக்கான NBT மற்றும் பெறுமதி சேர்ரஙீக்கப்பட்ட (VAT) வரிச் சலுகை வழங்கல்**

பணியகத்தின் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய தமது தனிப்பட்ட தொடர்புகளுடாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ள வீட்டுத்துறைசார் இலங்கை ஊழியர்கள் செலுத்துகின்ற பதிவுக்கட்டணத்திற்கு தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் வட் வரி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது 2014 ஆம் ஆண்டில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமானது இப்பணியகத்தினால் வழங்கப்படும் ஓர் நலனோம்பல் நடவடிக்கையாக 16,867,594/- ரூபாவைக் கொண்ட தொகையைச் செலவழித்துள்ளது.

**25. ஏனைய கொடுக்கல்வாங்கல்கள்**

விதேச ரெக்கியா லொத்தர் வெற்றியாளர்களுக்காக தேசிய சேமிப்பு வங்கியில் திறக்கப்பட்ட 07 நிலையான வைப்புக்கணக்குகளும் இறுதிக் கணக்கறிக்கைகளில் காட்டப்படவில்லை.

**<u>நிலையான வைப்புக் கணக்குகள்</u>**

20001-90-14730

20001-90-14985

20001-90-15027

20001-90-15051

20001-90-15078

20001-90-15094

20001-90-15892

**வங்கியின் இனங்காணப்படாத வரவுகள் க/இ. 1650**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரண்ட காசோலைகளில் காணப்படுகின்ற பெறுமதிகள் இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையிலுள்ள 1650 ஆம் இலக்க எமது நடைமுறைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு காசோலைகள் திருடப்பட்டு, போலிக் கைச்சாத்திடப்பட்டு வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

| காசோலை இல. | வரவு வைக்கப்பட்ட திகதி | பெறுமதி ரூபா |
|---|---|---:|
| 239481 | 11.09.2009 | 400,000.00 |
| 239482 | 12.10.2009 | 400,000.00 |

இந்த விடயம் மீது நாம் மீரிஹான பொலிஸ் நிலையத்திலுள்ள மோசடி புலனாய்வுப் பிரிவிற்கு முறைப்பாடொன்றைச் செய்துள்ளதுடன் அதற்கமைய இவ்விடயம் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்விடயம் தொடர்பாக கடுவெல நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு இன்னும் முடிவுறாத நிலையில் உள்ளது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்
Auditor General's Department

මගේ අංකය
எனது இல.
My No. YS/G/SLBFE/1/14/04

මබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2015 திசெம்பர் 08

தலைவர்,

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த விரிவான வருமானக் கூற்று, நிதியம் மற்றும் ஒதுக்கங்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று பணியகத்தின் தலைவருக்கு 2015 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்த ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

விගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்
Auditor General's Department
AGDSL

ii

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

iii

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

### 2.1.1 தொகுதியின் அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.2 பணியகத்தின் அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி

1996 ஏப்ரல் 18 ஆந் திகதிய குறிப்பின் படி அமைச்சரவைக் குறிப்பு இலக்கம் 96/1019/107/028 இன் மூலம் 1996 ஒக்தோபர் 06 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட மூலதனமான ரூபா 100 மில்லியனுடன், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (தனியார்) கம்பனி கூட்டிணைக்கப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட பங்கு மூலதனமான ரூபா 5,000,040 தொகையில் ரூபா 5 மில்லியன் பணியகத்தின் முதலீடாகப் பெறப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரச்சட்டத்தின் 15(உ) பிரிவின் படி பணியகத்திற்கு இலங்கையிலிருந்து வெளியே வேலைவாய்ப்புக்களுக்காக வெளியேறுகின்ற இலங்கையர்களை சேர்த்துக்கொள்வதற்கான அதிகாரம் கிடைத்திருந்ததுடன் பணியகத்துடன் இணைந்ததாக உருவாக்கப்பட்டிருந்த துணைக்கம்பனியின் மூலம் அதன் கூட்டிணைக்கப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும் கம்பனியொன்று உருவாக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஒரே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பணியகத்திற்கு மேலதிகமாக கம்பனியொன்றை உருவாக்கியதன் தேவை தொடர்பில் கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஆ) அந்த துணைக்கம்பனியிலிருந்து 2009 ஆம் ஆண்டின் பின்னர் எந்த வித இலாபப் பங்கும் கிடைத்திருக்காததுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 3,510,033 இலாபப் பங்கு கிடைக்க வேண்டியிருந்தது. மீளாய்வாண்டிற்காக இலாபப் பங்கொன்று அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) காப்புறுதி செய்யும் அனுபவமொன்று இல்லாதிருக்கும் போது துணைக்கம்பனிக்கு குடியகல்வோர்களை காப்புறுதி செய்யும் நடவடிக்கைகளில் முகவர் நிறுவனமாக செயற்படுவதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பணியகத்தினால் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 20 மில்லியன் கடன்தொகை கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் பணியகத்தினால் சேகரிக்கும் கம்பனிக்கு செலுத்தப்படுகின்ற காப்புறுதி தவணைப் பணத்தில் அந்தக் கடன் பணம் தீர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை வரித்தொகையைச் செலுத்துவதற்காக மேலதிக கடன்

தொகையொன்றை வழங்குமாறு கோரப்பட்ட விண்ணப்பத்தின் படி 2014 ஆகஸ்ட் 19 ஆந் திகதி ரூபா 20 மில்லியன் கடன்தொகை கம்பனிக்கு பணியகத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.1 தொடர்புடைய தரப்பினருடன் உள்ள கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை

வீட்டு வேலை தவிர்ந்த ஏனைய சேவைகளுக்காக வெளிநாடு செல்கின்ற ஊழியர்களுக்கு தேவையான வைத்திய அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரினால் வைத்திய நிலையமொன்றுடன் உடன்படிக்கை செய்யப்பட்டு, அதனை நடாத்துவதற்காக தேவையான கட்டிடம், தளபாடங்களை உள்ளடக்கிய ஏனைய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் குறித்த வைத்திய நிலையத்தின் மொத்த வருமானத்தில் 30 சதவீதம் முகவருக்கு வழங்கப்படுகின்றது. மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் இலங்கைக் கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - பணியகம்

### 2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01

நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய அடிப்படைத் தகவல்கள் மற்றும் பின்பற்றப்படுகின்ற முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்பாக போதியவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 07

உரிய படிவத்தின்படி காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. முன்னைய ஆண்டின் சீராக்கம் காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கும் போது ரூபா 36,609 தொகை அதிகரித்து குறிப்பிடப்பட்டிருந்தது.

vi

ii. தொழிற்படு மூலதன அசைவுகளை சீராக்கும் போது ரூபா 36,735,785 தொகையான நீண்ட கால ஊழியர்கடன் உரித்தாக்கப்பட்டிருந்தது.

iii. மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றின்படி பணிக்கொடைக் கொடுப்பனவுகள் ரூபா 9,711,794 ஆக இருந்த போதிலும், பேரேட்டின் படி ரூபா 9,168,874 தொகை பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி நிதி செயற்பாடுகளிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 542,920 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 08

---

முன்னைய ஆண்டுகளுக்குரிய தவறுகளைச் சீராக்குதல் பின்னோக்கி சீராக்கம் செய்து முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காது ரூபா 71,586,550 தொகை தவறுகளின் சீராக்கங்கள் நடப்பாட்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 12

---

பிற்போட்ட வரி மற்றும் வருமான வரி தொடர்பாக போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16

---

ஏதேனுமொரு சொத்தொன்று எதிர்பார்க்கப்பட்ட நிலைக்கு முன்னுள்ள மதிப்பீடுகளுடன் ஒப்பிடும் போது வேறுபடுமாயின் சொத்தின் இழிவுப்பெறுமதி, பயன்படு ஆயுட்காலம், பெறுமானத்தேய்வு முறைமை ஆகக் குறைந்தது ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 2,029,472,463 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 19

---

மீளாய்வாண்டில் ஆயுட்கால மதிப்பீட்டின் அடிப்படையில் இலாபத்தைக் கணிப்பிடும் போது (Gain on activation) பணிக்கொடைக்காக கொடுப்பனவுகள் ரூபா 9,711,794 தொகை கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்
Auditor General's Department
AGDSL



(எ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 20

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் பிற்போட்ட வெளிநாட்டுதவி மற்றும் மானியத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 777,591 மானியத்தின் தன்மை மற்றும் அளவுகள் தொடர்பாக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 36

குறிப்பிடப்பட்ட காலத்திற்கு ஒரு தடவை சொத்துக்களில் இழப்பீட்டுத் தன்மையைக் காண்பிக்குமாயின் அச்சொத்துக்களின் புத்தகப் பெறுமதியையும் சந்தைப் பெறுமதியையும் ஒப்பீடு செய்து ஏட்டுப்பெறுமதி சந்தைப் பெறுமதியை விட குறைவாயின் அவ்வேறுபாட்டின் அளவு பதிவழிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 38

அருவச் சொத்துக்கள் தொடர்பாக தேவையான போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 39

முதலீடுகளின் பெறுமதி காலக்கழிவு செய்யப்பட்ட பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 8,559,105,769 தொகையான முதலீடுகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 3,899,535 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அபூதாபி தூதுவர் அலுவலகத்தில் தொழிலாளர் நலன்புரிப் பிரிவில் ஏற்பட்ட எமிரேட்ஸ் திர்ஹம் 29,295 தொகையான (அண்ணளவாக ரூபா 1,058,276) பண மோசடி தொடர்பாக செய்யப்பட வேண்டிய சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் 05 சொத்துக் கணக்குகளிலும் 02 பொறுப்புக் கணக்குகளிலும் முறையே ரூபா 8,108,532 தொகை மற்றும் ரூபா 2,534,377 ஆன இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டதுடன் அவற்றை இனங்கண்டு தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய குவைத் இழப்பீட்டு நிதியத்தின் பெறுமதி ரூபா 2,975,504,815 ஆக இருந்த போதிலும் அந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,829,570,793 ஆக இருந்தது. அந்நிதியத்திற்கும் சொத்துக்களுக்குமிடையே ரூபா 145,934,022 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகங்களில் தாபிக்கப்பட்டுள்ள ஊழியர் நலன்புரி பிரிவுகளுக்குரிய காசு மீதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 81,987,794 தொகையாக இருந்த போதிலும் உயர்ஸ்தானிகர் அலுவலகங்களினால் உறுதிப்படுத்தப்பட்ட காசேட்டின் படி மீதி ரூபா 84,728,193 ஆகும். இந்த வேறுபாடு நாட்குறிப்புக்களை பிரதி செய்யும் போது ஏற்பட்டிருந்த போதிலும் அந்த பிழையினைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 150,219,284 பெறுமதியான 06 மீதிகளை பரீட்சிப்பதற்கான பட்டோலைகள் மற்றும் உறுதிப்படுத்தும் பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2003 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை வெளிநாட்டு தூதரகங்களின் நலன்புரி பிரிவுகளினால் அறவிட்டு பொதுத் திறைசேரியின் ஊடாக பணியகத்திற்கு அனுப்பப்பட்ட தொழிலாளர் ஒப்பந்த உடன்படிக்கை கட்டணங்களிலிருந்து ரூபா 1,185,548,646 தொகை இன்னும் பொதுத் திறைசேரிக்குக் கிடைக்க வேண்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் 02 வருடங்களை விஞ்சிய மீளச்செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்கள் ரூபா 583,680 தொகையினை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 144 வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 368,750 தொகையொன்று 2015 யூன் வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தினால் பதிவு செய்வதற்காக விண்ணப்பிப்பதற்கு 2008 - 2013 காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட ரூபா 4,930,000 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(உ) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரினால் 2006 யூன் முதல் 2007 சனவரி வரை கொரியாவிற்கு குடியகல்வோருக்கு மீளச் செலுத்த வேண்டிய ரூபா 18,350,000 தொகையான மீதியை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஒன்றிணைந்த ஐந்தொகையின் படி பணியகத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூபா 1,210,968 தொகையான வைப்புக்கள் தொடர்பாக எவ்வித பின்தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் 6 வருட காலமாக குடியகல்வோரின் முறைப்பாடுகள் / பிணக்குகளை சமரசத்திற்குக் கொண்டுவருவதற்காக முகவர் நிறுவனத்தினால் ரூபா 19,886,101 கூட்டுத்தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு 2015 யூன் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2009 முதல் 2013 வரை காப்புறுதி இழப்பீடாக காப்புறுதி நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட பணத்தில் ரூபா 3,455,474 தொகை உரிய குடியகல்வோருக்குச் செலுத்துவதற்கு பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1985 இன் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரச்சட்டத்தின் 15 ஆவது பிரிவு | இலக்கிடப்படாத செயற்திட்டத்திற்காக 2013 மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 134,484,433 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2) | செயல்நிமித்த உப கட்டுநிதி உரிய செயற்பாடுகள் நிறைவுபெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 3,698,704 தொகை தீர்க்கப்படாத மீதியாகக் காணப்பட்டதுடன் அந்த அளவில் ரூபா 1,999,500 தொகை 2015 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 395(ஈ) | பணியகத்திலும் வெளிநாட்டு தூதரகங்களிலும் தொழிலாளர் நலன்புரி பிரிவுகளில் பேணப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (iii) நிதிப்பிரமாணம் 757 | i. வெளிநாட்டு தூதரங்களில் பேணப்படுகின்ற பணியகத்தின் 12 தொழிலாளர் நலன்புரிப் பிரிவுகள் மற்றும் பணியகத்தின் பயிற்சி நிலையங்கள் மற்றும் மாகாண அலுவலகங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.<br><br>ii. பயிற்சி நிலையங்களில் காணப்பட்ட பாவனைக்கு எடுக்க முடியாத 521 பொருட்பதிவேட்டு அலகுகளைக் கைதவிர்ப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் 2.11 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது 51 வாகனங்கள் பணியகத்தின் ஓட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) 1999 பெப்ரவரி 26 திகதிய 02/99 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் 04 ஆம் பந்தி | வரிசை அமைச்சின் செயலாளரின் சிபாரிசின்றி 2013, 2014 மற்றும் 2015 பெப்ரவரி வரை பணியகத்தின் உத்தியோகத்தர்களுக்காக ரூபா 854,611 தொகையான 101 கையடக்கத் தொலைபேசிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (உ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 (viii) பந்தி | முகாமைத்துவ பதவியொன்றில் ஏற்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புதல் பதிலீட்டு திட்டத்தின் படி மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பணியகத்தில் அவ்வாறான திட்டமொன்று காணப்படாமையின் காரணமாக, வெற்றிடமான பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க முடியாதிருந்தது. |

| | | |
|---|---|---|
| | 8.3.9 ஆம் பந்தி | பொது முயற்சியினால் வரிசை அமைச்சிற்கோ அல்லது ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கோ செலவினங்கள் மேற்கொள்ளப்பட்ட முடியாதிருந்தமைக்கான ஆலோசனை வழங்கப்பட்டிருக்கும் போது அமைச்சின் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 04 உத்தியோகத்தர்களின் ரூபா 88,790 தொகையான கையடக்கத் தொலைபேசிக் கட்டணங்கள் தீர்க்கப்பட்டிருந்தன. |
| (ஊ) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ/57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் (iii) ஆம் உப பிரிவு | நிதி அமைச்சரின் முன் அங்கீகாரமின்றி பணியகத்தினால் சங்கீத செயலமர்விற்காக ரூபா 1,000,000 தொகையொன்று அனுசரணையாகச் செலுத்துப்பட்டிருந்ததுடன் பாடசாலையொன்றின் பழைய மாணவர் சங்கத்திற்கு ரூபா 1,000,000 தொகை நன்கொடையளிக்கப்பட்டிருந்தது. |
| (எ) | 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் பந்தி | பெறுமதி சேர் வரியை வெளிப்படுத்துவதற்காக பணம் செலுத்தியதன் பின்னர் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு முன் அக்கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் கைநூல் இல. 19 | பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 200,000 இற்கு மேற்படுமாயின் அதற்காக வரிசை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 06 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,536,646 தொகையான பழுதுபார்த்தலுக்காக உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஐ) | 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய பீஎப்/எப்எஸ்/05(viii) ஆம இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி | இணைய தள வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் உபபாகங்களைக் கொள்வனவு செய்வதற்கான கிரயங்கள் உத்தியோகத்தரினால் தனிப்பட்ட வகையில் செலவிடப்பட வேண்டியிருந்த போதிலும் பணியகத்தின் 66 உத்தியோகத்தர்களுக்காக டொங்கல்கள் பணியகத்தின் பணத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| | 2.3.2 (ii) ஆம் பந்தி | அரசின் செலவினத்தில் பட்டியல்கள் தீர்க்கப்படுகின்ற கையடக்கத் தொலைபேசிகளின் இலக்கம், நிறுவனத்தின் உள்ளகத் தொலைபேசி பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்பட வேண்டியமைக்காக ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், பணியகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் கையடக்கத் தொலைபேசி இலக்கங்கள் மாத்திரம் தொலைபேசி பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (ஒ) | அமைச்சரவைக் குறிப்பு இலக்கம் 04/0427/020/002 மற்றும் 2004 மே 12 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் | தெரிவுப் பரிசோதனையின்படி மீளாய்வாண்டின் போது விளம்பர மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக ரூபா 30,909,020 தொகை அரச சார்பற்ற ஊடக நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஓ) | 2014 நவம்பர் 22 ஆந் திகதிய பீஆர்ஈ/2015/43 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் கடிதத்தின் பந்தி இலக்கம் 05(ii) | i. பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் 2014 திசெம்பர் 01 முதல் 2015 சனவரி 31 வரை ரட்டவிறு அமைப்பினைப் பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக பணியத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 116 உத்தியோகத்தர்களுக்கு பதுளை மாகாண அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்ட வாடகை அடிப்படையிலான 10 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் காலத்திற்காக உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 4,314,111 |

தொகையும், வாகன வாடகைக் கட்டணமாக ரூபா 5,125,824 தொகையுமாக ரூபா 9,439,935 கூட்டுத்தொகை தேர்தல்கள் ஆணையாளரின் கடிதத்திற்கு முர்ணாகச் செலுத்தப்பட்டிருந்தது.

ii. சுற்றறிக்கைக்கு முரணாக சனாதிபதித் தேர்தல் காலத்தின் போது பணியகத்தின் நலன்புரிப் பிரிவினால் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்துடன் 02 இணைந்த சந்தர்ப்பங்களின் போது நாட்டிற்காக உழைத்த 43 பேரின் வீடமைப்புக் கடன் விண்ணப்பங்கள் கொழும்பு மாவட்ட உதவி சமூர்த்தி ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

பந்தி இலக்கம் 07(i)

சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக சனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனு கோரப்பட்ட கால எல்லையில் பணியகத்திற்கு 13 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

ஜப்பானின் தொழிலாளர் நலன்புரிப் பிரிவில் தொழிலாளர் நலன்புரி உத்தியோகத்தர் பதவி அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் 2012 முதல் 2014 வரை அங்கீகரிக்கப்படாத பதவிக்காக ரூபா 10,521,835 கூட்டுத்தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவு

மீளாய்வாண்டில் பணியகத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் வரிக்கு முன்னரான நிதி விளைவுகள் ரூபா 459,974,615 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 326,198,141 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 133,776,474 தொகை அல்லது 41 சதவீத அதிகரிப்பைக் காண்பித்தது. இந்த முன்னேற்றத்திற்கு வருமானத்தின் அதிகரிப்பு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3.2 பணியகத்திற்கு எதிராக அல்லது பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு எதிராக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு வெளித்தரப்பினராலும் பணியகத்தின் உத்தியோகத்தர்களினாலும் 15 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் 04 வழக்குகளுக்காக பணியகத்தினால் பொறுப்பொன்றாக இனங்காணப்பட்ட பெறுமதி ரூபா 1,348,596 ஆகும். அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பணியகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி 7 செயற்திட்டங்களின் நிதிசார் செயல்முன்னேற்றம் 46 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டதுடன் 08 செயற்திட்டங்கள் பணியகத்தினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 05 செயற்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டுச் செலவினத்தை விட உள்ளபடியான செலவினத்தின் அதிகரிப்பு 82 சதவீதத்திற்கும் 170 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) வெளிநாட்டு நலன்புரிப் பிரிவில் மீளாய்வாண்டின் செலினப் பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவின வகை | தொகை | சதவீதம் |
|---|---|---|
| | ரூபா | |
| வெளிநாட்டுத் தூதரகங்களில் இருக்கின்ற பணியகத்தின் பதவியணயினரின் நேர்ச் செலவினம் | 419,300,801 | 57.63 |
| குடியகல்வோருக்காகச் செலவிடப்பட்ட நேர்ச் செலவினம் | 232,978,562 | 32.02 |
| ஏனைய பதவியணியினர் நலன்புரி நடவடிக்கைகள் | 75,281,190 | 10.35 |
| | 727,560,553 | 100.00 |

ஒன்றிணைந்த வெளிநாட்டு ஊழியர் நலன்புரிப் பிரிவினால் அதன் குடியகல்வோர் ஊழிய நலன்புரிக்காக 32 சதவீத அளவைவிடக் குறைவான கிரயமமொன்று செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்கப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை 7,556 ஆகவும், பாதுகாப்பு வீடுகளில் தரித்து வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 431 ஆகவும் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 315 ஆகவும், சிறைச்சாலைகளில் இடப்பட்ட, பொலிஸ் கைது மற்றும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் 75 ஆக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இந்த காரணத்தினால் அந்த குடியல்வோர் சமூகத்தின் பிரச்சினைகளுக்காக பணியகத்தின் பங்களிப்பு மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) ஜப்பானின் தொழிலாளர் நலன்புரிப் பிரிவிற்கு மீளாய்வாண்டில் ரூபா 6,342,582 தொகையான கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 5,385,002 தொகை செலவிடப்பட்டிருந்தது. அது பணியகத்தின் பதவியணியினருக்காக ரூபா 5,098,056 தொகையும், குடியகல்வு ஊழியர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ரூபா 286,946 தொகையும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி குடியகல்வு ஊழியர்களின் நலன்புரிக்காக 4 சதவீதத்திற்கும் 6 சதவீதத்திற்கும் இடையிலான அளவில் செலவிடப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ஜப்பானுக்குச் சென்ற பதிவு செய்யப்பட்ட ஊழியர்கள் 337 பேராக இருந்ததுடன் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 30 ஆக இருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின்படி அபூதாபி மற்றும் லெபனான் தூதரங்களில் தொழிலாளர் நலன்புரிப் பிரிவுகளின் செயற்பாடுகளில் நிதிக்கட்டுப்பாடு நலிவான நிலையில் காணப்படுகின்றமை பௌதீக சொத்துப் பயன்பாடு மற்றும் செயலாற்றல் போதியளவாக இல்லாதிருந்தமையும் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) 31 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,352,771 தொகையான கடன் 11 மாதங்கள் முதல் 110 மாதங்கள் வரை நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 3,757,661 தொகை பொருளாதார சேவைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகை ஆண்டின் செலவினமாக இனங்காணப்பட்டிருந்த போதும் அந்தக் கொடுப்பனவுகள்

வருமான வரிக் கணிப்பீட்டின் போது வரிப் பொறுப்பின் குறைவொன்றாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) 10 வெளிநாடு சென்ற ஊழியர்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 2,065,000 தொகைக்காக காப்புறுதி இழப்பீட்டுப் பணம் இலங்கை வெளிநாட்டு முகவருக்கு 2013 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த போதிலும், பணியகத்தினால் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்தப் பணம் உரிய இழப்பீட்டாளர்களுக்கு விடுவிப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1990 ஆம் ஆண்டின் போது ஈராக்கினால் குவைத் ஆக்கிரமிக்கப்பட்டதனால் அதில் வேலையிழந்த இலங்கையர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் இழப்பீட்டு ஆணைக்குழுவிற்குக் கிடைத்து எஞ்சியிருந்த ரூபா 2,975,504,815 தொகையை உரிய ஊழியர்களுக்குச் செலுத்தித் தீர்ப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று பணியகத்தினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 95 மில்லியன் தொகையான வ/ப கஹகொல்ல பொறியியல் சேவைக் கம்பனிக்குரிய காணியொன்று 99 வருட குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக பணியகத்தினால் 2013 ஆம் ஆண்டில் ரூபா 20 மில்லியன் முற்பணமொன்று வ/ப அரசாங்க வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. 2013 சனவரி 17 ஆந் திகதிய 10/2013 (M-01) ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின்படி ரூபா 20 மில்லியன் செலுத்தி கட்டிடங்களினதும் காணிகளினதும் உரித்தைக் கையேற்குமாறு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வெளிநாடு சென்ற ஊழியர்களுக்காக பணியகத்தினால் பேணப்பட்ட சேமலாப நிதிய உத்தேசத்திட்டம் தற்போது செயற்பாடற்ற நிலையில் காணப்படுவதுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பணியகத்தினால் நிறுத்தி வைக்கப்பட்ட 1620 குடியகல்வோருக்குரிய ரூபா 6,572,054 தொகையான பங்களிப்புப் பணத்தை விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 நோக்கத்திற்கு முரணான கொடுப்பனவுகள்

பணியகத்தினால் ரட்டவிறு செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 84,527,351 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேர்தல் நடாத்தப்பட்ட கால எல்லையான ஏப்ரல் மற்றும் திசெம்பர் மாதங்களில் செலவினம் முறையே ரூபா 17,731,248 மற்றும் ரூபா 17,148,865 தொகை 151.7 சதவீதத்தினாலும், 143 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்ததுடன் மே மற்றும் நவம்பர் மாதங்களின் போது செலவினத்தை சராசரிச் செலவினத்திற்கு ஒப்பாக 46 சதவீதத்தினாலும் 43 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. மொத்த செலவினத்தில் 10 உறுதிச்சீட்டுக்களுக்குரிய ரூபா 10,800,750 தொகையான 13 சதவீதம் செயற்திட்டத்திற்குரித்தற்ற விளம்பர நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக தனக்கு அறிவிக்காதிருந்ததாக பிரதி பொது முகாமையாளரினால் (விளம்பர மற்றும் வெளிநாட்டு தொடர்பு) அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரட்டவிறு பக்மஹ விழாவிற்கான போஸ்டர், காட்சிப் பதாதைகள், பெனர் என்பவற்றை அச்சிடுவதற்கு கேள்வி நடைமுறைகளுக்குப் புறம்பாக ரூபா 6,014,450 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,399,975 பெறுமதியான போஸ்டர்கள் பணியகத்தின் தலைவரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு முன் அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. மேலும் அதனை நேரடி தொலைக்காட்சி ஒளிப்பரப்பிற்காக கூறுவிலை கோராமல் ரூபா 1,399,975 தொகையில் தனியார் ஊடக நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மாத்தறை மாவட்ட ரட்டவிறு பலப்படுத்தும் நிகழ்சித்திட்டத்திற்காக ரூபா 4,844,000 கிரய மதிப்பீடொன்று பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கிரய மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத ரூபா 2,048,850 தொகையான குடை மற்றும் 1,600 ரீ சேர்ட் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் பகிர்ந்தளித்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2014 ஏப்ரல் 08 ஆந் திகதி தென் மாகாண சபை தேர்தல் நடைபெற்ற காலத்தை அண்மித்தாக குடை மற்றும் ரீ சேர்ட் அந்தப் பிரதேசத்தால் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் பணியகத்தின் நோக்கங்களுக்கு முரணான கொடுப்பனவாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பணியகத்தின் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 5,301,873 தொகையான செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்தக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் சர்ச்சைக்குரிய நிலைமையொன்று காணப்படுகின்றமையினால் அந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய காசோலை கையளித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 4,667,368 தொகையான செலவினம் தேர்தல்கள் ஆணையாளாரின் சுற்றறிக்கையின் படி நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்குரியதாகக் காணப்பட்டமையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) லெபனானில் அமைந்துள்ள இலங்கை தூதரகத்தில் தொழிலாளர் நலன்புரிப் பிரிவில் மதிப்புரையாளராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவருக்கு நியமனக் கடிதத்தின்படி மாதமொன்றிற்கு போக்குவரத்துப்படியாக ஐ.அ.டொலர் 350 உரித்தாக இருந்த போதிலும் அதற்கு மேலதிகமாக ஐ.அ.டொலர் 2,793.32 தொகையான வாடகை வாகனக் கட்டணமாக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. மேலும் குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கும் குடும்பத்திலுள்ளவர்களுக்கும் கூறுவிலை கோரப்படாமல் ஆகக்கூடியது 14 நாட்கள் ஹோட்டலொன்றில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த கால எல்லைக்கு மேலதிகமாக 14 நாட்கள் ஹோட்டலில் தங்கியமையின் காரணமாக அமெரிக்க டொலர் 2,450 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. 2014 பெப்ரவரி 10 ஆந் திகதிய முன்னாள் தொழிலாளர் பிரிவுத்தலைவரின் கடிதத்தின் படி அமெரிக்க டொலர் 1,500 தொகையான மாதாந்த வாடகையில் வீடொன்றை வழங்குவதற்கு இணங்கியிருந்த போது, மேலதிகமாக 14 நாட்கள் ஹோட்டலில் தங்கியிருந்தனர். இந்த தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக டொலர் 5,050 தொகையான காசோலையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், ஹோட்டலின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டின்படி, லெபனான் பவுண்களால் பணம் செலுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

## 4.6 வெளிப்படையான மோசடிகள்

------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பணியகத்தின் இலக்கிடப்பட்ட பணியல்லாத ஊடகவியலாளர்களுக்கு அறிவிப்பதற்காக நடாத்தப்பட்ட 02 செயலமர்வுகளுக்கு பங்குபற்றிய ஊடகவியலாளர்களுக்கு பரிசாக கையளிப்பதற்காக ரூபா 479,000 தொகையான 175 டொங்கல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2014 ஏப்ரல் 27 மற்றும் 29 ஆந் திகதிகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பாக அறிவூட்டும் பாத யாத்திரை கம்பஹா மற்றும் கொழும்பில் நடாத்திய போது அதில் பங்குபற்றிய 5,200 பேருக்கு உணவு வழங்குவதற்காக ரூபா 2,854,000 தொகையும், ரீசேர்ட் மற்றும் தொப்பிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,627,000 தொகையும், கேஸ் நிரப்பிய 3000 பலூன்கள் மற்றும் 30 பெனர்களைக் கொள்வனவு செய்வதற்காக செய்வதற்காக ரூபா 925,304 தொகையுமாக ரூபா 7,406,304 தொகை தனியார் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக அங்கீகரிக்கப்பட்ட வேலை அட்டவணை மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெறப்படாதிருந்ததுடன் முறையாக கொள்வனவு வழிகாட்டிக் கோவையும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கூறப்பட்ட கொடுப்பனவுகளுக்கு உரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகள் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் கொள்வனவுகள் முறையான பிரகாரம் பணியகத்தின் களஞ்சியம் ஊடாக மேற்கொள்ளப்படாமையினால் அந்த பொருள்கள் பணியகத்திற்கு கிடைத்தமைக்கும் சான்றுகள் காணப்படவில்லை.

(இ) 2014 மே 09 ஆந் திகதி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்பை எதிர்பார்ப்பவர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கான விளம்பரச் செயற்பாடுகளுக்காக ரூபா 1,713,600 தொகை செலசினே நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டமைக்கான உறுதிப்படுத்தும் எந்த ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஹாலி எல குடியகல்வு வள நிலையத்திற்கு அடிக்கல் நாட்டும் விழாவின் செலவினத்திற்காக தலைவரின் நிதி அதிகார எல்லையை விஞ்சி ரூபா 12,612,500 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த தொகையிலிருந்து ரூபா 9,157,060 தொகை செலவிடப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த

போதிலும் அதில் ரூபா 8,048,648 தொகை மேற்கூறப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(உ) குடியகன்றோர் தின விழாவிற்காக வடக்கு, கிழக்கு, சப்ரகமுவ மற்றும் மத்திய என்ற 04 மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட 9375 நாட்டிற்காக உழைத்த குடும்பங்களின் 11,000 பாடசாலைப் பிள்ளைகளுக்கு பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் உபகரணத் தொகுதிகளை பகிர்ந்தளிக்கும் உதவி நிகழ்ச்சித்திட்டத்திற்கான வழங்கல் ஒப்பந்தத்தின் மொத்தப் பெறுமதி ரூபா 16,550,100 தொகை 04 மாகாணங்களுக்கான 04 கொள்வனவுகளின் கீழ் பகுதிகளாக்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டமையினால் அமைச்சின் கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) மண்சரிவினால் அழிவுக்குட்பட்ட மீரியபெத்த, கொஸ்லந்த பிரதேசத்தில் நாட்டிற்காக உழைத்த குடும்பங்களுக்கு உதவி வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரமின்றி ரூபா 1,000,000 தொகை பதுளை குடியல்வோர் வள நிலையத்தில் நிலையப்பொறுப்பு உத்தியோகத்தருக்கு வங்கிப் பிணையொன்றின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) கொழும்பு மாவட்டத்தில் ஆபத்து மற்றும் இயலுமைகளைக் கணிப்பிடல் மற்றும் பயிற்சியளித்தல் செயலமர்வுகளுக்காகப் பெறப்பட்ட 1,985,100 தொகையான முற்பணத்தைத் தீர்ப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட நாட்குறிப்பு உறுதிச்சீட்டின் மூலம் பிழையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பணியகத்தின் பணம் முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டமை உள்ளகக் கணக்காய்வு பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. மேலும் 2014 நவம்பர் 22 ஆந் திகதிய பீஆர்/2015/43 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் கடிதத்தின் பந்தி இலக்கம் 05(i) இற்கு முரணாக 2015 இன் சனாதிபதித் தேர்தல் கால எல்லையில் இந்தச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.7 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2004 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட ரூபா 60,831,694 பெறுமதியான மலம் அகற்றும் முறைமைக்காக மீண்டும் 2009 ஆம் ஆண்டில் ரூபா 492,796 தொகையான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அது பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பாதுகாப்பற்ற வகையில் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1999 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட 05 வாகனங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் 2009 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 02 வாகனங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டது.

## 4.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பணியகத்தினால் காலி மாவட்ட பயிற்சி நிலையத்திற்காக நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத கட்டிடமொன்று ரூபா 300,000 தொகையான மாதாந்த வாடகையில் பெறப்பட்டிருந்தது. அந்த வாடகையாளர் கட்டிட நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் அரசாங்க மதிப்பீட்டாளரின் பெறுமதியான ரூப 400,000 தொகையாக மாதாந்த வாடகை அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் பணியகத்தினால் கொள்வனவு நடைமுறையில் இணங்கப்பட்ட தீர்மானத்தை மீறி மாதாந்த வாடகையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) தகவல் தொழில்நுட்ப மதியுரையாளரையும் 24 உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்ப பிரிவொன்று பணியகத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் போது திறந்த சந்தை விலை கோரி பணியகத்தின் இணையதளத்தை மீள வடிவமைப்பதற்காக ரூபா 780,000 தொகை தனியார் நிறுவனமொன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ரட்டவிறு டெலன்ட் ஸ்டார் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 27,545,985 தொகைக்குரிய செயற்திட்டம் கைவிடப்பட்டமையின் காரணமாக சிக்கனமற்ற செலவினமொன்றாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஈ) உடன்படிக்கையில் கையொப்பமிடல் அலுவலக வளாகத்திற்காக கட்டிடமொன்றை வாடகைக்கு எடுக்கும் நட்வடிக்கைகளின் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாது நடவடிக்கை எடுத்தமையின் காரணமாக இரண்டு கட்டிடங்களுக்காக 2014 திசெம்பர் மாதம் முதல் 2015 மார்ச் 13 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் முறையே ரூபா 2,625,000 தொகை மற்றும் ரூபா 1,926,000 தொகையான வாடகை செலுத்துவதற்கு பயணிகத்திற்கு ஏற்பட்டிருந்தது.

## 4.9 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய தேசிய காப்புறுதி நிதியப் பொறுப்பிற்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மைக்கும் காப்புறுதித் தவணைப் பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 218,681,760 தொகையில் உள்ளடங்கியுள்ள ரூபா 23,430,210 தொகையான உள்ளீட்டு வரி மற்றும் தங்காலை குடியகல்வோர் பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 58,549,800 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,635,915 தொகையான வற்வரி, உள்ளீட்டு வரியாக கழித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் பணியகத்திற்கு ரூபா 29,066,125 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) அபூதாபியில் இலங்கை தூதரகத்தில் பேணப்பட்டு வந்த பணியகத்தின் தொழிலாளர் நலன்புரிப் பிரிவில் பெண் எழுதுவினைஞர் உத்தியோகத்தரினால் 2014 யூன் 03 முதல் 09 ஆந் திகதி வரையான காலத்தில் சேகரிக்கப்பட்ட எமிரேட்ஸ் திர்ஹம் 29,295 தொகையான (அண்ணளவாக ரூபா 1,058,276) பணம், நிதிப்பிரமாணம் 187(3) இன் படி தாமதமின்றி வங்கியிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் அந்த அளவினால் தொழிலாளர் நலன்புரிப் பிரிவில் காசு நிலுவையொன்று காணப்பட்டமை தொடர்பாக முறையாக நடவடிக்கையொன்று பணியகத்தினால் எடுக்கப்படாதிருந்ததுடன் மேற்கூறிய உத்தியோகத்தர் பணியகத்தின் சேவையிலிருந்தும் விடுவிக்கப்பட்டிருந்தார்.

## 4.10 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பணியகத்தின் வளங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக பணியகத்திற்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்ட 04 வாகனங்கள் உரிய அமைச்சிற்கும் ஏனைய அரசாங்க நிறுவனமொன்றிற்கும் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 4,126,716 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பணியகத்தின் 10 உத்தியோகத்தர்கள் அமைச்சிலும் அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 5,425,814 தொகை மற்றும் ரூபா 5,637,205 தொகை சம்பளம் மற்றும் வேதனங்களாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 4.11 பதவியணியினர் நிர்வாகம்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பணியகத்திற்குரிய பதவியணியினர் விபரம் பின்வருமாறு இருந்தது.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பணியகத்தில் 22 பதவிகளுக்காக 1216 பேர் நிரந்தர பதவியணியினராக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான நிரந்தர பதவியணியினர் 1116 ஆனமையால் 100 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது ஒப்பந்த மற்றும் இரண்டாம் அடிப்படையில் முறையே 70 மற்றும் 21 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) அங்கீகரிக்கப்படாத 08 பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் 167 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 60,188,791 தொகையொன்று 2014 ஆம் ஆண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

XXV

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

பணியகத்தால் 2011-2015 காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2007 திசெம்பர் 18 ஆந் திகதிய பீஈடீ/47 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் திருத்தப்பட்ட 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம், அந்தந்த வருடங்களின் இறுதியில் கூட்டிணைந்த திட்டத்தின் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான செயல்முன்னேற்றம் மற்றும் அமுல்படுத்தப்படாத மற்றும் மந்தகதியிலுள்ள பிரிவுகள் தொடர்பாக மதிப்பீட்டைச் செய்து எஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிராததுடன் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கும் உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 செப்தெம்பர் முதல் 2014 செப்தெம்பர் காலப்பகுதியில் தெற்காசிய வேலைவாய்ப்பு மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக குடியகல்வோர்களுக்கு ரீ சேர்ட் மற்றும் குளிர் உடைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 20 மில்லியன் தொகையை பணிப்பாளர் சபை அங்கீகரித்திருந்த போதிலும் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3 ஆம் அத்தியாயத்தின் படி இந்த செலவினத்திற்கான மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு கோவைக்கான மேலதிக இலக்கம் 28 மற்றும் 2014 யூலை 04 ஆந் திகதிய வழிகாட்டியின் தொடர்பு 2.14.1 இன் படி சந்தை விலை தளம்பல் முறைமை பின்பற்றக்கூடிய எல்லை ரூபா 5 மில்லியனாக இருந்த போதிலும், ரூபா 6,840,000 தொகையான மேற்கூறப்பட்ட கொள்வனவுகளுக்காக அந்த முறைமை பின்பற்றப்பட்டிருந்தது. மேலும், கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.12 ஆம் அத்தியாயத்தின் படி கேள்விதாரர்களின் முழுமையான தகைமைகள் பரீட்சிக்கப்படாமையின் காரணமாக குளிர் உடைகளின் கொள்வனவுக்கான கட்டளையை வழங்குவதற்கு கேள்விதாரர் தவறியிருந்தார்.

(ஆ) பணியகத்தால் உத்தியோகத்தர்களின் சீருடைக்காக சேலைகளைக் கொள்வனவு செய்யும் போது ரூபா 20,563 தொகை செலவில் சேவை மாதிரியொன்றைத் தயாரித்திருக்கும் போது திணைக்களத்தின் கொள்வனவுக் குழுவினால் அதற்குப் புறம்பாக கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.12 ஆம் பந்திக்கு முரணாக வேறு நிறுவனமான பதுளை மாவட்ட ரட்டவிறு முயற்சியாளர்களுக்கும் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் அதன் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட சேலை மாதிரிக்குப் பதிலாக வேறொரு மாதிரியுடன் சேலை கொள்வனவு செய்யப்பட்டமையின் காரணமாக அந்தச் செலவினங்கள் பயனற்ற செலவினமாக இருந்ததுடன் மாதிரியை மாற்றியமையின் காரணமாக சேலைகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,279,200 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2013 மார்ச் முதல் 2014 மார்ச் வரை கொரிய வதிவிடப் பயிற்சியாளர்களுக்கு உணவு பானங்களை வழங்குவதற்காக கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கான மேலதிக இலக்கம் 21 மற்றும் 2012 பெப்ரவரி 23 ஆந் திகதிய வழிகாட்டியின் 3.4 ஆம் பிரிவிற்கு முரணாக ரூபா 38,306,628 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2014 மார்ச் முதல் 2014 யூன் வரையில் 28 நிகழ்ச்சித்திட்டங்கள் 1,244 பயிற்சிாளர்களுக்காக ரூபா 9,526,603 தொகையான உணவுகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் உடன்படிக்கையோ அல்லது கொள்வனவுக் குழுவின் அங்கீகாரமோ இன்றி வழங்கப்பட்டிருந்தது.

(உ) ரூபா 10 மில்லியன் வரையான 03 மாத காலப்பகுதிக்காக உணவு வழங்கும் ஒப்பந்தத்திற்குரிய உடன்படிக்கையில் கைச்சாத்திடும் போது அது வருடமொன்றிற்குரிய காலப்பகுதியாக வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 யூலை 04 ஆந் திகதிய கொள்வனவு செயற்கோவைக்கான மேலதிக 28 இன் வழிகாட்டியின் 2.14.1 இன் படி மொத்தக் கிரய மதிப்பீடு கவனத்தில் கொள்ளப்படாமல், அலகு விலை மாத்திரம் கவனத்தில் கொள்ளப்படாது வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(ஊ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.3 இற்கு முரணாக வழங்குனருடன் உடன்படிக்கைக்கு உட்படாமல் ரூபா 2,127,655 தொகை உணவு வழங்குவதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்
Auditor General's Department
AGDSL



## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பணியகத்தின் பாதிடப்பட்ட மதிப்பீடுகளின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் பணியகத்தின் விளம்பரச் செலவினங்களில் உள்ளடக்கப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினம் 900 சதவீதத்தினாலும் வானொலி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினம் 517 சதவீதத்தினாலும் உயர்வடைந்திருந்தது. மேலும் முயற்சிகள் மேம்படுத்தல் செலவினங்களில் சந்தை மேம்படுத்தல் செயற்பாடுகளுக்கான செலவினம் 394 சதவீதத்தினாலும் கொரிய செயற்திட்ட செலவினம் 203 சதவீதத்தினாலும் உயர்வடைந்திருந்ததுடன் பாதீடு நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.4 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் இலக்கம் 371(2) இ பந்திக்கு முரணாக 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் 10 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 129,500 தொகையான முற்பணம் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 செப்தெம்பர் மாதத்தின் போது போலியாக கையொப்பமிட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 400,000 தொகையான 2 காசோலைகள் இனங்காணப்படாத வரவு மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மோசடி தொடர்பாக தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் கொரியாவிற்கு ஊழியர்களை வெளிநாட்டிற்கு அனுப்பும் போது வெளிநாட்டிற்குச் செல்லாத 62 ஊழியர்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட விமானப் பயணச் சீட்டுக்கள் மீண்டும் அவர்களுக்கு கையளிக்கப்படாமையின் காரணமாக ஏற்பட்ட ரூபா 2,264,660 தொகையான நிதி நட்டம் தொடர்பாக பணியத்தினால் முறையான நடவடிக்கையொன்று தாமதமின்றி எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சகல மாவட்டங்களையும் மேவுகை செய்யும் வகையில் குடியகல்வோர் பயிற்சி நிலையத்தை தாபிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன்படி, கதிர்காமம், ஹோமாகம, கஹகொல்ல மற்றும் தம்புள்ள குடியகல்வோர் வள நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 2007 ஆம் ஆண்டு முதல் 2010 வரையான காலத்தில் ரூபா 50,372,816 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிர்மாண செயற்திட்டங்களின் வேலை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக காலத்துக்குக் காலம் பணியகத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கொள்வனவு நடைமுறை

(இ) வாகன நிர்வாகம்

(ஈ) வெளிநாட்டு தூதரகங்கள் மூலம் உழைக்கப்படுகின்ற வருமானமும் சேவை வழங்கலும்

(உ) வெளிநாட்டு வேலை முகவர் நிறுவனங்களின் நடவடிக்கைகள்

(ஊ) சொத்துப் பயன்பாடு

ஒப்பம்:- எச்.எம்.காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான பணியகத்தின் அவதானிப்புகளும் விளக்கங்களும்

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை | பணியகத்தின் அவதானிப்புகள் |
|---|---|
| **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**<br><br>**2. நிதிக்கூற்றுக்கள்**<br><br>**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**<br><br>**2.1.1 தொகுதியின் அபிப்பிராயம்**<br><br>இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினதும் அதன் துணைக்கம்பனியினதும் 20014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்க்ளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.<br><br>**2.1.2 பணியகத்தின் அபிப்பிராயம்**<br><br>இந்த அறிக்கையின் 2.3 ஆம் பத்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உணமையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும். | |

## 2. 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி

1996 ஏப்ரல் 18 ஆந் திகதிய குறிப்பின் படி அமைச்சரவைக் குறிப்பு இலக்கம் 96/1019/107/028 இன் மூலம் 1996 ஒக்தோம்பர் 06 ஆந் தகதி அங்கீகரிக்கப்பட்ட மூலதனமான ரூபா 100 மில்லியனுடன், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (தனியார்) கம்பனி கூட்டிணைக்கப்பட்டிருப்பதுடன் வழங்கப்பட்ட பங்கு மூலதனமான ரூபா 5,000,040 தொகையில் ரூபா 5 மில்லியன் பணியகத்தின் முதலீடாகப் பெறப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

அ) 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரச்சட்டத்தின் 15(உ) பிரிவின் படி பணியகத்திற்கு இலங்கையிலிருந்து வெளியே வேலைவாய்ப்புக்களுக்காக வெளியேறுகின்ற இலங்கையர்களை சேர்த்துக் கொள்வதற்கான அதிகாரம் கிடைத்திருந்ததுடன் பணியகத்துடன் இணைந்ததாக உருவாக்கப்பட்டிருந்த துணைக்கம்பனியின் மூலம் அதன் கூட்டிணைக்கப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும் கம்பனியொன்று உருவாக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஒரே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பணியகத்திற்கு மேலதிகமாக கம்பனியொன்று உருவாக்கியதன் தேவை தொடர்பில் கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

இலக்கம் அமப/96/1019/107/028 உடைய அமைச்சரவை பத்திரம் மூலம் 1996.06.10 ஆந் திகதி அமைச்சரவையின் அனுமதியினை பெற்றுக் கொண்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (தனியார்) நிறுவனம் என்வீ 22504/மிஷ்ற/96/5 மூலம் கம்பனிகள் பதிவு செய்தலின் கீழ் மேற்கொண்டுள்ள பதிவிற்கிணங்க ஸ்தாபிக்கப்பட்டதன் காரணம் நடைமுறையிலுள்ள மற்றும் ஏற்கனவே நடைமுயையிலிருந்த சட்டவிதிமுறைகளுக்கு இணங்கவேயாகும்.

| | |
|---|---|
| ஆ) அந்த துணைக்கம்பனியிலிருந்து 2009 ஆண்டின் பின்னர் எந்த வித இலாபப் பங்கும் கிடைத்திருக்காததுடன் 2014 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 3,510,033 இலாபப் பங்கு கிடைக்க வேண்டியிருந்தது. மீளாய்வாண்டிற்காக இலாபப் பங்கொன்று அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | இதனை பணியகத்திற்கு செலுத்தாமல் துணைக்கம்பனியின் அபிவிருத்திற்காக உபயோகிப்பதற்கு 2016 ஆம் ஆண்டில் பணியப்பாளர் சபை அனுமதி வழங்கியுள்ளது. |
| இ) காப்புறுதி செய்யும் அனுபவமொன்று இல்லாதிருக்கும் போது துணைக்கம்பனிக்கு குடியகல்வோர்களை காப்புறுதி செய்யும் நடவடிக்கைகளில் முகவர் நிறுவனமாக செயற்படுவதற்கு சந்தரப்பமளிக்கப்பட்டிருந்தது. | இவ்விதமாக நடவடிக்கை மேற்கொள்ளல் 2015 மார்ச் மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதுடன், நடைமுறையில் புலம்பெயர் தொழிலாளர்களை காப்புறுதி செய்யும் நடவடிக்கைகள் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| ஈ) பணியகத்தினால் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 20 மில்லியன் கடன் தொகை கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் பணியகத்தினால் சேகரிக்கும் கம்பனிக்கு செலுத்தப்படுகின்ற காப்புறுதி தவணைப் பணத்தில் அந்தக் கடன் பணம் தீர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை வரித்தொகையைச் செலுத்துவதற்காக மேலதிக கடன் தொகையொன்றை வழங்குமாறு கோரப்பட்ட விண்ணப்பத்தின் படி 2014 ஆகஸ்ட் 19 ஆந் திகதி ரூபா 20 மில்லியன் கடன்தொகை கம்பனிக்கு பணியகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நிலுவை வரித்தொகையினை குறித்த திகதியில் செலுத்தாவிடில் அந்நிறுவனத்தினர் பாரிய தண்டப்பணத்தினை செலுத்த வேண்டியேற்படும் என அறியத் தந்ததற்கிணங்க பொறுப்பான அமைச்சரின் செயலாளரின் வேண்டுகோளுக்கிணங்க பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் ரூபா 20 மில்லியன் பெறுமதியான இரண்டாவது கடன் தொகையொன்றை குறிப்பிட்ட நிலுவவை வரித்தொகையினை தீர்ப்பதற்கு துணைக்கம்பனிக்கு வழங்கியதோடு அதற்காக 5% படி வருடாந்த வட்டி பணியகத்தினால் அறவிடப்படும். நடைமுறையில் இக்கடன் தொகை குறிப்பிட்ட வட்டியுடன் 36 தவணைகளில் செலுத்தி முடிப்பதற்கு பணிப்பாள் சபை அனுமதியினை பெற்றக் கொண்டு அறவிடுவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறது. |

| | |
|---|---|
| **2.2.1. தொடர்புடைய தரப்பினருடன் உள்ள கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை** | |
| வீட்டு வேலை தவிர்ந்த ஏனைய சேவைகளுக்காக வெளிநாடு செல்கின்ற ஊழியர்களுக்கு தேவையான வைத்திய அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரினால் வைத்திய நிலையமொன்று டன் உடன்படிக்கை செய்யப்பட்டு, அதனை நடாத்துவதற்காக தேவையான கட்டிடம், தளபாடங்களை உள்ளடக்கிய ஏனைய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் குறித்த வைத்திய நிலையத்தின் மொத்த வருமானத்தில் 30 சதவீதம் முகவருக்கு வழங்கப்படுகின்றது. மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் இலங்கைக் கணக்கீட்டு நியமம் 24இன் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இதற்குரிய வெளிப்படுத்தல்கள் 2015 கணக்கு அறிக்கைகளுடன் சமர்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| **2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்- பணியகம்** | |
| **2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்** | |
| பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |
| அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 01 | |
| நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய அடிப்படைத் தகவல்கள் மற்றும் பின்பற்றப்படுகின்ற முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்பாக போதியவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இதனை திருத்தம் செய்து 2016 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களை சமர்பிக்கும் மாதிரிப்படிவத்தையும் திருத்தம் செய்வதற்கு எதிர்பார்க்கிறேன். |

| | |
|---|---|
| ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 07<br>------------------------------------------<br>உரிய படிவத்தின்படி காசுப்பாய்ச்சல் கூற்று சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |
| i. முன்னைய ஆண்டின் சீராக்கம் காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கும் போது ரூபா 36,609 தொகை அதிகரித்து குறிப்பிடப்பட்டிருந்தது. | 2015 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்ட சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. |
| ii. தோழிற்படு மூலதன அசைவுகளை சீராக்கும் போது ரூபா 36,735,785 தொகையான நீண்ட கால ஊழியர்கடன் உரித்தாக்கப்பட்டிருந்தது. | 2015 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்ட சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. |
| iii. மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றின்படி பணிக்கொடைக் கொடுப்பனவுகள் ரூபா 9,711,794 ஆக இருந்த போதிலும், பேரேட்டின் படி ரூபா 9,168,874 தொகை பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி நிதி செயற்பாடுகளிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 542,920 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2015 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்ட சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. |
| இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 08<br>-------------------------------------------<br>முன்னைய ஆண்டுகளுக்குரிய தவறுகளைச் சீராக்குதல் பின்னோக்கி சீராக்கம் செய்து முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காது ரூபா 71,586,550 தொகை தவறுகளின் சீராக்கங்கள் நடப்பாண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்தது. | 2015 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்ட சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. |

| | |
|---|---|
| ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 12<br>---------------------------------------------<br>பிற்போடப்பட்ட வரி மற்றும் வருமான வரி தொடர்பாக போதியவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்ட சீராக்கங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கிறேன். |
| உ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16<br>---------------------------------------------<br>ஏதேனுமொரு சொத்தொன்று எதிர்பார்க்கப்பட்ட நிலைக்கு முன்னுள்ள மதிப்பீடுகளுடன் ஒப்பிடும் போது வேறுபடுமாயின் சொத்தின் இழிவுப் பெறுமதி, பயன்பாடு ஆயட்காலம், பெறுமானத்தேய்வு முறைமை ஆகக் குறைந்தது ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட்ட வேண்டிய போதிலும் ரூபா 2,029,472,463 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 2016 ஆண்டில் குறிப்பிட்ட நியமத்திற்கு ஏற்ப நிதிக் கூற்றுக்களை சமர்பிப்பதற்கு எதிர்பார்க்கிறேன். |
| ஊ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 19<br>---------------------------------------------<br>மீளாய்வாண்டில் ஆயட்கால மதிப்பீட்டின் அடிப்படையில் இலாபத்தைக் கணிப்பிடும் போது (Gain on activation) பணிக்கொடைக்காக கொடுப்பனவுகள் ரூபா 9,711,794 தொகை கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இற்கு இணங்க Projected Unit Credit Method முறைமைக்கிணங்க பணிக்கொடைக்கான ஏற்பாடு கணக்கிடப்பட்டுள்ளதுடன் திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களில் இந்தக் கொடுப்பனவு அவதானத்தில் கொள்ளப்பட்டது. |

| | |
|---|---|
| ஏ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 20<br>--------------------------------------------<br>2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் பிற்போடப்பட்ட வெளிநாட்டுதவி மற்றும் மானியத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 777,591 மானியத்தின் தன்மை மற்றும் அளவுகள் தொடர்பாக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பல்வேறுபட்ட சர்வதேச நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள தேய்மானமடையும் சொத்துக்களின் பெறுமதியானது தொங்கல் நிலை வெளிநாட்டுதவி மற்றும் மானியத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் குறிப்பிட்ட இணக்கப்பாடுகள் 2015 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| ஏ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 36<br>--------------------------------------------<br>குறிப்பிடப்பட்ட காலத்திற்கு ஒரு தடவை சொத்துக்களில் இழப்பீட்டுத் தன்மையைக் காண்பிக்குமாயின் அச்சொத்துக்களின் புத்தகப் பெறுமதியையும் சந்தைப் பெறுமதியையும் ஒப்பீடு செய்து ஏட்டுப்பெறுமதி சந்தைப் பெறுமதியை விட குறைவாயின் அவ்வேறுபாட்டின் அளவு பதிவழிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டில் இது பற்றி பகுப்பாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்ட இணக்கப்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| ஐ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 38<br>--------------------------------------------<br>அருவச் சொத்ததுக்கள் தொடர்பாக தேவையான போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்தச் சொத்தானது திருத்தப்பட்ட நிதி நிலைமைகூற்றில் அருவச் சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| ஒ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 39<br>----------------------------------------------<br>முதலீடுகளின் பெறுமதி காலக்கழிவு செய்யப்பட்ட பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 8,559,105,769 தொகையான முதலீடுகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டில் நிதி அறிக்கைகளில் குறிப்பிட்ட இணக்கங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கிறேன். |
| **2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**<br>----------------------------------<br>பின்வரும் விடயங்கள் அவதானிககப்பட்டன.<br>அ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 3,899,535 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2015 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்ட சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. |
| ஆ) அபுதாபி தூதுவர் அலுவலகத்தில் தொழிலாளர் நலன்புரிப் பிரிவில் ஏற்பட்ட எமிரேட்ஸ் திர்ஹம் 29,295 தொகையான (அண்ணளவாக ரூபா 1,058,276) பண மோசடி தொடர்பாக செய்யப்பட வேண்டிய சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த பண மோசடி தொடர்பான கணக்குகளுக்கான குறிப்புகள் 2014 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நிதிக்கூற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளது. 2015 ஆண்டில் குறிப்பிட்ட இணக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| **2.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**<br>--------------------------------------------------------------<br>நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனுடன் சமர்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் 05 சொத்துக் கணக்குகளிலும் 02 பொறுப்புக கணக்குகளிலும் முறையே ரூபா 8,108,532 தொகை மற்றும் ரூபா 2,534,377 ஆன இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டதுடன் அவற்றை இனங்கண்டு தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கு தேவையான இணக்கங்களை தயார் செய்வதற்கு பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனமொன்றின் உதவி பெறப்பட்டுள்ளது. அவர்களினால் சமர்பிக்கப்படும் பரிந்துரைகளுக்கிணங்க அவசியமான இணக்கங்களை 2016 ஆண்டில் மேற்கொண்டு முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | |
|---|---|
| **2.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**<br>--------------------------------------------<br>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |
| அ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய குவைத் இழப்பீட்டு நிதியத்தின் பெறுமதி ரூபா 2,975,504,815 ஆக இருந்த போதிலும் அந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,829,570,793 ஆக இருந்தது. அந்நிதியத்திற்கும் சொத்துக்களுக்குமிடையே ரூபா 145,934,022 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | மாற்றத்திற்கான காரணம் குறிப்பிட்ட வட்டி வருமானம் பெறும் போது அந்தத் தொகைக்கு சமனாக சொத்துக்களில் முதலீடுகள் செய்யப்படாமையே ஆகும். எனினும் பணியகத்திடமுள்ள இப்பணம் வேறு முதலீடுகளில் ஈடுபடுத்தியுள்ளமை உறுதியாகிறது. |
| ஆ) வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகங்களில் தாபிக்கப்பட்டுள்ள ஊழியர் நலன்புரி பிரிவுகளுக்குரிய காசு மீதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 81,987,794 தொகையாக இருந்த போதிலும் உயர்ஸதானிகர் அலுவலகங்களினால் உறுதிப்படுத்தப்பட்ட காசேட்டின் படி மீதி ரூபா 84,728,193 ஆகும். இந்த வேறுபாடு நாட்குறிப்புக்களை பிரதி செய்யும் போது ஏற்பட்டிருந்த போதிலும் அந்த பிழையினைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்நியச் செலாவணி பரிமாற்றம் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட இணக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| **2.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**<br>--------------------------------------------<br>ரூபா 150,219,284 பெறுமதியான 06 மீதிகளை பரீட்சிப்பதற்கான பட்டோலைகள் மற்றும் உறுதிப்படுத்தும் பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கு தேவையான இணக்கங்களை தயார் செய்வதற்கு பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனமொன்றின் உதவி பெறப்பட்டுள்ளது. அவர்களினால் சமர்பிக்கப்படும் பரிந்துரைகளுக்கிணங்க அவசியமான இணக்கங்கள் 2016 ஆண்டில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | |
|---|---|
| **2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**<br>---------------------------------------------------------------<br>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |
| அ) 2003 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை வெளிநாட்டு தூதரகங்களின் நலன்புரி பிரிவுகளினால் அறவிட்டு பொதுத் திறைசேரியின் ஊடாக பணியகத்திற்கு அனுப்பப்பட்ட தொழிலாளர் ஒப்பந்த உடன்படிக்கை கட்டணங்களிலிருந்து ரூபா 1,185,548,646 தொகை இன்னும் பொதுத் திறைசேரிக்குக் கிடைக்க வேண்டியிருந்தது. | இந்த பணத்தினை அறவிடுவதற்கு பணியகம் திறைசேரியிடம் தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தப் பணத்தினை விடுவிப்பதற்காக திறைசேரி வருடாந்தம் ஒதுக்கீடு செய்த பணம் ரூபா 175 மில்லியன் ஆகும். 2015.12.31 திகதிக்கு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 1,010,548,646 ஆகும். |
| ஆ) மீளாய்வாண்டின் இறுதயில் 02 வருடங்களை விஞ்சிய மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்கள் ரூபா 583,680 தொகையினை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தத் தொகை சம்பந்தமாக வைப்பாளர்களை அறிவுறுத்தி மேலதிக நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| இ) 144 வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 368,750 தொகையொன்று 2015 யூன் வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருககவில்லை. | இத்தொகையானது தொழில் முகவர் நிலையங்களினால் சமர்பிக்கப்படும் 70% ஏஜன்சி மீளளிப்பினை கோரும் போது செலுத்தப்படும் கட்டணங்களின் மூலம் செலுத்தப்படுவதுடன், ஏதேனுமொரு தொழில் முகவர் நிலையமொன்று இந்த உரிமை கோரிக்கையை விடுக்காதவிடத்து குறிப்பிட்ட செஸ் வரித்தொகையின அறவிடுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காது. 70% உரிமை கோரிக்கைகள் பணியகத்திற்கு கிடைக்கப்பெறும் விதத்திற்கிணங்க, செஸ் வரிப்பணம் பணியகத்திற்கு அறவிடப்படுவதுடன் 2015.12.31 திகதிக்கு ரூபா 328,750 தொகையில் ரூபா 50,250 பெறுமதி அறவிடப்பட்டுள்ளது. அந்த பெறுமதியில் மேலும் அறவிடப்படவுள்ள பெறுமதி ரூபா .278,500 ஆகும். |

| | |
|---|---|
| ஈ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தினால் பதிவு செய்வதற்காக விண்ணப்பிப்பதற்கு 2008 - 2013 காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட ரூபா 4,930,000 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. | கணக்கியலில் ஏற்பட்ட பலவீனங்கள் காரணமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களினால் பதிவுச்செய்தல் விண்ணப்பிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 2,320,000/= தொகைப் பணம் வருமானத்திற்கு மாற்றப்படவில்லை. சம்பந்தப்பட்ட குறிப்பின் மூலம் குறிப்பிடுவது என்னவெனில் அதனை வருமானமாகக் கொள்வதே ஆகும். மேலும் அந்தத் தொகையானது மீளளிப்புச் செய்யப்படாத ஒரு கொடுப்பனவாகும். |
| உ) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரினால் 2006 யூன் முதல் 2007 சனவரி வரை கொரியாவிற்கு குடியகல்வோருக்கு மீளச் செலுத்த வேண்டிய ரூபா 18,350,000 தொகையான மீதியை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. | இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ள சகல கோரிக்கைகள் சம்பந்தமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தினால் குறிப்பிட்ட மாதத்தினுள்ளேயே கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். இதுவரையில் கோரிக்கை விடுக்காத புலம்பெயர் தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்காததன் காரணம் அவர்கள் இதுவரையில் இலங்கை திரும்பவில்லை அல்லது அவர்கள் அனுமதியின்றி கொரியாவில் தங்கியிருக்கிறார்கள் என ஊகிக்கப்படுகிறது. தற்போது எவ்வித தாமதமுமின்றி குறிப்பிட்ட கொடுப்பனவுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| ஊ) ஒன்றிணைந்த ஐந்தொகையின் படி பணியகத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூபா 1,210,968 தொகையான வைப்புக்கள் தொடர்பாக எவ்வித பின்தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான அறிவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| எ) மீளாய்வாணடின் இறுதியில் 6 வருட காலமாக குடியகல்வோரின் முறைப்பாடுகள் / பிணக்குகளை சமசரத்திற்குக் கொண்டு வருவதற்காக முகவர் நிறுவனத்தினால் ரூபா 19,886,101 கூட்டுத்தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு 2015 யூன் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015.12.31 திகதிக்கு குறிப்பிட்ட தொகையில் ரூபா 6,564,979/- மீதியொன்று கொடுப்பனவு செய்ய வேண்டியிருப்பதுடன், மூல ஆவணங்களில் குறைபாடுகள் நிலவுவதன் காரணமாக கொடுப்பனவு மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. |

ஏ) 2009 முதல் 2013 வரை காப்புறுதி இழப்பீடாக காப்புறுதி நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட பணத்தில் ரூபா 3,455,477 தொகை உரிய குடியகல்வோருக்குச் செலுத்துவதற்கு பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2015.12.31 ஆந் திகதிக்கு குறிப்பிட்ட நிதியில் ரூபா 1,001,735/- மீதியொன்று செலுத்த வேண்டியிருப்பதுடன், இதற்கு தேவையான மூல ஆவணங்களில் குறைபாடுகள் நிலவுவதன் காரணமாக கொடுப்பனவு மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணங்காமை |
|---|---|
| அ) 1985 இன் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரச்சட்டத்தின் 15 ஆவது பிரிவு | இலக்கிடப்படாத செயற்திட்டத்திற்காக 2013 மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 134,484,433 தொகை செலவிடப்பட்டிருந்தது. |

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 14.1 பிரிவின் பிரகாரம் பணியகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் பற்றி அமைச்சரினால் பணியகத்திற்கு எழுத்து மூலம் கட்டளையிட முடியுமாவதுடன், பணியகத்தினால் அக்கட்டளையினை செயற்படுத்துதல் வேண்டும்.
அதற்கிணங்க, ரட்டவிரு டெலன்ட் ஸ்டார் நிகழ்ச்சி சம்பந்தமாக அப்பேதைய அமைச்சரின் அறிவுறுத்தலுக்கிணங்க, பணியகத்தின் பணிப்பாளர் சபையினரை இது பற்றி அறிவுறுத்தி அவர்களின் அனுமதியுடன் அதனை செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நடைமுறையில் இந்த வேலைத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமானம் | | |
| i. | நிதிப்பிரமானம் 371(2) | செயல்நிமித்த உப கட்டுநிதி உரிய செயற்பாடுகள் நிறைவுபெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 3,698,704 தொகை தீர்க்கப்படாத மீதியாகக் காணப்பட்டதுடன் அந்த அளவில் ரூபா 1,999,500 தொகை 2015 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் விசாரணையொன்று நடைபெற்று பெற்று வருகிறது. அதன் மூலம் பெறப்படுகின்ற அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| ii. | நிதிப்பிரமானம் 395(ஈ) | பணியகத்திலும் வெளிநாட்டு தூதரகங்களிலும் தொழிலாளர் நன்புரி பிரிவுகளில் பேணப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரித்து சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | நடைமுறையில் தூதுவராலயங்களில் வங்கி கணக்கிணக்கங்கள் அடுத்த மாதம் 15ஆந் திகதிக்கு முன்னர் e-mail மூலம் அனுப்பி வைக்கப்படும். இதனை எதிர்காலத்தில் சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | |
|---|---|
| iii. நிதிப்பிரமானம் 757<br>i. வெளிநாட்டு தூதரகங்களில் பேணப்படுகின்ற பணியகத்தின் 12 தொழிலாளர் நன்புரி பிரிவுகள் மற்றும் பணியகத்தின் பயிற்சி நிலையங்கள் மற்றும் மாகாண அலுவலகங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆண்டில் சகல பௌதீக வளங்களின் கண்காணிப்பு அறிக்கை கணக்காய்விற்கு சமர்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| ii. பயிற்சி நிலையங்களில் காணப்பட்ட பாவனைக்கு எடுக்க முடியாத 521 பொருட்பதிவேட்டு அலகுகளைக் கைத்தவிர்ப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 31ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணியக அகற்றும் குழுவானது பரிந்துரைக்கப்பட்ட பொருட்களின் அகற்றுதலை 2015 ஆம் ஆண்டில் அவ்வப்போது மேற்கொண்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| இ) | 1990 ஒக்டோபர் 10 திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் 2.11 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது 51 வாகனங்கள் பணியகத்தின் ஓட்டத்திற்காக பயன்படுத்தப் பட்டிருந்த போதிலும், 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரிசோதனையொன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது எரிபொருள் எரிப்பு பரிசோதித்தல் தொடர்பாக லங்கா ஒட்டோமொபயில் எசோசியேட்ஸ் நிறுவனத்திடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த நிறுவனம் அவ்வாறு எரிபொருள் எரிப்பு சம்பந்தமாக பரிசோதித்தல் கடமைகளில் ஈடுபடுவதில்லை என அறிவித்துள்ளது. எனவே, வேறொரு நிறுவனத்தின் மூலம் இந்தப் பரிசோதனையை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| ஈ) | 1999 பெப்ரவரி 26 ஆந் திகதிய 02/99 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் 4 ஆம் பந்தி | வரிசை அமைச்சின் செயலாளரின் சிபாரிசின்றி 2013,2014 மற்றும் 2015 பெப்ரவரி வரை பணியகத்தின் உத்தியோகத்தர்களுக்கான ரூபா 854,611 தொகையான 101 கையடக்கத் தொலை பேசிகள் கொள்வனவு செய்யப் பட்டிருந்தன. | நடைமுறையில் பணியக உத்தியோகத்தர்களுக்கு கையடக்கத் தொலைபேசி வழங்குவது தடைசெய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 (viii) பந்தி | முகாமைத்துவ பதவியொன்றில் ஏற்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புதல் பதிலீட்டு திட்டத்தின் படி மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பணியகத்தில் அவ்வாறான திட்டமொன்று காணப் படாமையின் காரணமாக, வெற்றிடமான பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க முடியாதிருந்தது. | 2015.11.26 திருத்தப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதனால் அதற்கிணங்க, ஊழியர் தர பதவிகளில் இடம்பெறும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு வருங்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எதிர்வரும் காலங்களில் பதில் திட்டமொன்றை தயார் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| | 8.3.9 ஆம் பந்தி | பொது முயற்சியினால் வரிசை அமைச்சிற்கோ அல்லது ஏனய அரசாங்க நிறுவனங்களுக்கோ செலவினங்கள் மேற்கொள்ளப் பட முடியாதிருந்தமைக்கான ஆலோசனை வழங்கப்பட்டிருக்கும் போது அமைச்சின் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 04 உத்தியோகத்தர்களின் ரூபா 88,790 தொகையான கையடக்கத் தொலைபேசிக் கட்டணங்கள் தீர்க்கப் பட்டிருந்தன. | புலம்பெயர் தொழிலாளர்களின் நலனோம்பல் நடவடிக்கைகளுக்காக செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபடுத்துவதற்காக இந்தச் சாரதிகள் அமைச்சிற்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், தேவைக்கிணங்க, அவர்களின் கையடக்கத் தொலைபேசிகளின் கட்டண ரசீதுகள் ரூபா 500.00 வரை மாத்திரம் மாதாந்தம் பணியகத்தினால் ஏற்கப்பட்டிருந்ததுடன், அதற்கும் மேலான மிகுதித் தொகை அவர்களின் சம்பளத்தில் அறவிடப்பட்டுள்ளது. நடைமுறையில் தொலைபேசி கட்டணங்கள் மீளளிப்பு செய்யப்படுவதில்லை. |

| | | | |
|---|---|---|---|
| ஊ) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ/57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் (iii) ஆம் உப பிரிவு | நிதி அமைச்சரின் முன் அங்கீகாரமின்றி பணியகத்தினால் சங்கீத செயலமர்விற்காக ரூபா 1,000,000 தொகையொன்று அனுசரணையாகச் செலுத்தப்பட்டதுடன் பாடசாலையொன்றின் பழைய மாணவர் சங்கத்திற்கு ரூபா 1,000,000 தொகை நன்கொடையளிக்கப்பட்டிருந்தது | விளம்பரங்கள் மற்றும் பிரச்சார செலவினங்களுக்காக பணியகத்தின் நிதி முகாமைத்துவத்திற்கிணங்க, பணிப்பாளர் சபையினால் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கொடுப்பனவானது பாடசாலை அபிவிருத்தி சம்பந்தப்பட்ட வேலைத்திட்டமொன்றிற்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| எ) | 2006 இன் கொள்வனவு வழிகாட்டி கோவையின் 5.4.12 ஆம் பந்தி | பெறுமதி சேர் வரியை வெளிப்படுத்துவதற்காக பணம் செலுத்தியதன் பின்னர் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு முன் அக்கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வெட் வரி கொடுப்பனவு பற்றிய அறிக்கை காலாண்டின்படி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு பற்றிய அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| ஏ) | கொள்வனவு வழிகாட்டி கோவையின் கைநூல் இல. 19 | பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 200,000 இற்கு மேற்படுமாயின் அதற்காக வரிசை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 06 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,536,646 தொகையான பழுதுபார்த்தலுக்காக உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பணியகத்தின் நிதி முகாமைத்துவத்திற்கு இணங்க, பணிப்பாளர் சபையினால் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடைமுறையில் குறிப்பிட்ட செலவினம் வரிசை அமைச்சின் செயலாளரின் அனுமதியின் கீழ் மேற்கொள்ளப்படும். |
| ஐ) | 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய பீஎப்/எப்எஸ்/50(viii) ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி | இணைய தள வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் உபபாகங்களை கொள்வனவு செய்வதற்கான கிரயங்கள் உத்தியோகத்தரினால் தனிப் பட்ட வகையில் செலவிடப்பட வேண்டியிருந்த போதிலும் பணியகத்தின் 66 உத்தியோகத்தர்களுக்காக டொங்கல்கள் பணியகத்தின் பணத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | புதிய தொழிற்நுட்பம் சார்ந்த வினைத்திறன்மிக்க மற்றும் பயன்மிக்கதாக பணியகத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. நடைமுறையில் பணியக உத்தியோகத்தர்களுக்காக டொங்கல் வழங்கப்படுவது 2015.09.09 திகதியிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | 2.3.2 (ii) ஆம் பந்தி | அரசின் செலவினத்தில் படடியல்கள் தீர்க்கப்படுகின்ற கையடக்க தொலைபேசிகளின் இலக்கம், நிறுவனத்தின் உள்ளகத் தொலைபேசி பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப் பட வேண்டியமைக்காக ஆலோசனை வழங்கப் பட்டிருந்த போதிலும், பணியகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் கையடக்கத் தொலைபேசி இலக்கங்கள் மாத்திரம் தொலைபேசி பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | பணியகத்தின் உள்ளக தொலைபேசி விபரக்கொத்தில் தொலைபேசி இலக்கங்களை உள்ளடக்கும் போது அந்தந்த பிரிவுகளின் நேரடி தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கங்களுடன் முகாமையாளர், உதவி முகாமையாளர்களின் கையடக்கத் தொலைபேசி இலக்கங்களும் தொழில் நுட்ப மற்றும் விஷேட கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலாக பணியகத்தின் உள்ளக இணையத்தளத்தில் பணியகத்தினால் கையடக்கத் தொலைபேசி வழங்கப்பட்டுள்ள சகல சாரதிகளினதும் கையடக்கத் தொலைபேசி இலக்கங்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>பணியகத்தின் உள்ளக தொலைபேசி விபரக்கொத்தினை தயார் செய்யும் பொது இவ்வாறு வரையறைக்குட்பட்டு தொலைபேசி இலக்கங்களை உள்ளடக்கக் காரணம் அச்சிடல் செலவினத்தை குறைப்பதற்கே ஆகும். |
| ஒ | அமைச்சரவைக் குறிப்பு இலக்கம் 04/0427/ 020/002 மற்றும் 2004 மே 12 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் | தெரிவுப் பரிசோதனையின்படி மீளாய்வாண்டின் போது விளம்பர மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக ரூபா 30,909,020 தொகை அரச சார்பற்ற ஊடக நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. | பணியகம் பற்றிய தகவல்களை மத்திய கிழக்கு உள்ளிட்ட வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்வதற்கு செட்டலயிட் தொழிற்நுட்பத்தினூடாக பிரச்சாரம் செய்யும் ஒளிபரப்பு சேவையொன்று உபயோகப்படுத்தப்பட்டது.<br>அவ்வாறே பணியகத்தின் விளம்பரங்கள் அரச ஒளிபரப்பு சேவைகளான தேசிய தொலைகாட்சி, சுயாதீன தொலைக்காட்சி, ஐ தொலைக்காட்சி, வசந்தம் ஆகிய தொலைக்காட்சி சேவைகளில் பிரச்சாரம் செய்யப்பட்டது. இலங்கையில் மின்னியல் பிரச்சார ஊடக அமைப்பிலுள்ள சிறப்பம்சமானது சகல ஒளிபரப்பு/ஒலிபரப்பு சேவைகளினதும் நேயர்கள், பார்வையாளர்களைக் கொண்ட ஏனைய தனியார் ஊடகங்கள் பயன்படுத்தப்பட்ட காரணம் ஒரே நேரத்தில் பெரும்பாலானோருக்கு பணியகத்தின் செயற்படுகளை பற்றி பிரச்சாரம் செய்யும் நோக்குடனேயாகும். |

| | | |
|---|---|---|
| ஓ) நவம்பர் 22 ஆந் திகதிய பீஆர்ஈ/2015/43 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் கடிதத்தின் பந்தி இலக்கம் 05 (ii) | i. பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் 2014 திசெம்பர் 01 முதல் 2015 சனவரி 31 வரை ரட்டவிறு அமைப்பினைப் பலப் படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்து வதற்காக பணியத்தில் சேவையில் ஈடுபட்டிருக் கின்ற 116 உத்தியோகத்தர களுக்கு பதுளை மாகாண அலுவலகத்திற்கு கையளிக் கப்பட்ட வாடகை அடிப்படை யிலான 10 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த காலத்திற்காக உத்தியோ கத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 4,314,111 தொகையும், வாகன வாடகைக் கட்டணமாக ரூபா 5,125,824 தொகையுமாக ரூபா 9,439,935 கூட்டுத்தொகை தேர்தல்கள் ஆணையாளரின் கடிதத்திற்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது. | 2014 ஜுன் மாதத்திலிருந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட சமூக சேவை நிகழ்ச்சிகளில் பணியகத்திற்குரிய விடயக் கோப்புக்கிணங்க கள நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் பணியகத்தின் சமூகவியல் பிரிவினால் செயற்படுத்தப்பட்ட கள நிகழ்ச்சிகளுக்காக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை சேவையில் ஈடபடுத்துதல் மற்றும் கூலி வண்டிகள் உபயோகப்படுத்தப்படுத்தப்பட்டது.<br><br>இல. 154/2014 (எம்10) உடைய 2014 நவம்பர் 18 ஆந் திகதிய பணியப்பாளர் சபைப்பத்திரத்தின் மூலம் இதற்கான அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியானது, தேர்தல்கள் ஆணையாளரின் பீஆர்ஈ/2015/43 மற்றும் 2014 நவம்பர் 22 ஆந் திகதிய கடிதத்தினை சமர்பிப்பதற்கு முன்னர் இடம்பெற்ற ஒரு சம்பவம் என்றபடியால் அந்த வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ii. சுற்றறிக்கைக்கு முரணாக சனாதிபதி தேர்தல் காலத்தின் போது பணியகத்தின் நலன்புரிப் பிரிவினால் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்துடன் 02 இணைந்த சந்தர்ப்பங்களின் போது நாட்டுக்காக உழைத்த 43 பேரின் வீடமைப்புக் கடன் விண்ணப்பங்கள் கொழும்பு மாவட்ட உதவி சமுர்த்தி ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | குறிப்பிட்ட வேலைத்திட்டமானது வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலன்புரி அமைச்சினதும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினதும் ஒருங்கிணைந்ததொரு வேலைத்திட்டமாகும். 01/2013 இலக்கத்தியுடைய அமைச்சரவை குறிப்பு 2013.01.16 ஆந் திகதிய அமைச்சரவைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 2013.01.24 ஆந் திகதி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டம் 2013 ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்து வந்துள்ளதுடன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினூடே வீட்டுக்கடன் வழங்கப்படாததுடன் பணியகத்தில் பதிவு செய்து கொண்டு வெளிநாடு செல்லும் புலம்பெயர் தொழிலாளர் மத்தியில் வீடொன்றினை நிர்மானிப்பதற்கு யோசிப்பவர்களின் தகவல்கள் திவிநெகும திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் மாத்திரம் இடம்பெறுவதுடன் அதன் பின்னரான சகல நடவடிக்கைகளும் அந்நிறுவனங்களினாலேய மேற்கொள்ளப்படும்.<br>ஜனாதிபதி தேர்தல் அறிவித்தலுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டம் ஆகையாலும் எமது சமூகத்தில் மிகவும் விஷேடமான ஒரு குழுவினருக்கு இதன் மூலம் பயன் கிடைப்பதாலும் இந்த வேலைத்திட்டத்தினை முன்னோக்கி செயற்படுத்தப்பட்டது என்பதனை அறியத்தருகிறேன். |
| பந்தி இலக்கம் 07 (i) | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரனாக சனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனு கோரப்பட்ட கால எல்லையில் பணியகத்திற்கு 13 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர். | அவர்கள் பணியகத்தின் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை 2014 ஆகஸ்ட் மற்றும் ஒக்டோபர் காலப்பகுதியில் நடாத்தப்பட்டு அவர்களின் நியமனக்கடிதங்கள் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதித் தேர்தல் அறிவித்தலுக்கு முன்னர் பணிப்பாளருக்கு (பரிபாலனம்) வழங்கபபட்டிருந்தது. அவர்கள் வேைக்கு சமூகமளித்தல் மாத்திரம் டிசம்பர் மாத முதல் வாரத்தில் இடம் பெற்றது. |

| | |
|---|---|
| **2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**<br>ஜப்பானின் தொழிலாளர் நலன்புரிப் பிரிவில் தொழிலாளர் நலன்புர உத்தியோகத்தர் பதவி அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் 2012 முதல் 2014 வரை அங்கீகரிக்கப்படாத பதவிக்காக ரூபா 10,521,835 கூட்டுத்தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தன. | ஜப்பான் நாட்டின் தூதுவராலயத்திற்கு தொழிலாளர் நலன்புரி உத்தியோகத்தர் ஒருவரை நியமித்ததற்கான நோக்கம், அந்நாட்டினுள் இலங்கையர்களுக்கு தொழில்வாய்ப்பினை மேம்படுத்துவதற்காகவே ஆகும். அதற்கென அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையினுள் ஏற்பாடுகள் இல்லாவிடினும், உத்தியோகத்தர் ஒருவரை நியமித்ததன் காரணம், பணியகத்தின் பணிப்பாளர் சபையின் அனுமதியினுடனேயாகும். இந்த உத்தியோகத்தரின் சேவைக்காலம் 2015.04.12 ஆந் திகதியுடன் முடிவுறுத்தப்பட்டுள்ளது. |
| **3. நிதி மீளாய்வு**<br>**3.1. நிதி விளைவு**<br>மீளாய்வாண்டில் பணியகத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் வரிக்கு முன்னரான நிதி விளைவுகள் ரூபா 459,974,615 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னய ஆண்டின் மிகை ரூபா 326,198,141 ஆனமையால் முன்னய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 133,776,474 தொகை அல்லது 41 சதவீத அதிகரிப்பைக் காண்பித்தது. இந்த முன்னேற்றத்திற்கு வருமானத்தின் அதிகரிப்பு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது. | |
| **3.2. பணியகத்திற்கு எதிராக அல்லது பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்**<br>வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு எதிராக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு வெளித்தரப்பினராலும் பணியகத்தின் உத்தியோகத்தர்களினாலும் 15 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் 04 வழக்குகளுக்காக பணியகத்தினால் பொறுப்பொன்றாக இணங்காணப்பட்ட பெறுமதி ரூபா 1,348,596 ஆகும். அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திருத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களில் இந்த வைப்பு கணக்கு குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ளது. |

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ) பணியகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி 7 செயற்திட்டங்களின் நிதிசார் செயல்முன்னேற்றம் 46 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டதுடன் 08 செயற்திட்டங்கள் பணியகத்தினால் அமுல்படுத்தப்படவில்லை. மேலும் 05 செயற்திட்டங்கள் எதிர்பார்ம்மப்பட்ட மதிப்பீட்டுச் செலவினத்தை விட உள்ளபடியான செலவினத்தின் அதிகரிப்பு 82 சதவீதத்திற்கும் 170 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது.

நிறுவனத்தின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கை தயார் செய்யப்படுவது கடந்த ஆண்டுகளில் இருந்து வந்த தகவல்களின் அடிப்படையிலேயாகும். இதன் காரணமாக மாற்றங்களை ஏதிர்பார்க்க வேண்டும். 82% - 170% வரையிலான மாற்றங்களை நியாயப்படுத்த முடியாது. சில வேலைத்திட்டங்கள் செயற்பாட்டு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பினும், நடைமுறையில் அமுல்படுத்தும் போது ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக ஆரம்பிக்கப்படவில்லை.

புதிய செயற்பாட்டு திட்டங்களை தயார் செய்யும் போது இவ்வாறான மாற்றங்கள் இடம்பெறுவதனை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆ) வெளிநாட்டு நலன்புரி பிரிவில் மீளாய்வாண்டின் செலினப் பகுப்பாய்வு கீளே காண்பிக்கப்படுகின்றது.

| செலவின வகை | தொகை | சதவீதம் |
|---|---|---|
| | ரூபா. | |
| வெளிநாட்டு தூதரகங்களில் இருக்கின்ற பணியகத்தின் பதவியணயினரின் நேர்ச் செலவினம் | 419,300,801 | 57.63 |
| குடியகல்வோருக்காக செலவிடப்பட்ட நேர்ச் செலவினம் | 232,978,562 | 32.02 |
| ஏனய பதவியணியினர் நலன்புரி நடவடிக்கைகள் | 75,281,190 | 10.35 |
| | 727,560,553 | 100.00 |

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு நலனோம்பல் வசதிகளை வழங்கும் போது அதற்கேற்ப போதியளவு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த வேண்டியதுடன், அவர்களுக்கு செலுத்த வேண்டிய சம்பளம், போக்குவரத்துச் செலவினம், வீட்டு வாடகை ஆகியன வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் கடைபிடிக்கப்படும் விதிமுறைகளுக்கிணங்க பணியகத்தினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதற்கிணங்க அந்தச் செலவினம் நியாயமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டமை தெளிவாகிறது. அத்துடன், தொழிலாளர் நலனோம்பல் சம்பந்தப்பட்ட ஏனைய செலவினங்களும் தேவைகளுக்கிணங்க பணியகத்தினால் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்த வெளிநாட்டு ஊழியர் நலன்புரிப் பிரிவினால் அதன் குடியகல்வோர் ஊழிய நலன்புரிக்காக 32 சதவீத அளவைவிடக் குறைவான கிரயமொன்று செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்ப்படாத முறைப்பாடுமளின் எண்ணிக்கை 7,556 ஆகவும், பாதுகாப்பு வீடுகளில் தரித்து வைக்கப்பட்டுள்வர்களின் எண்ணிக்கை 431 ஆகவும் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 315 ஆகவும், சிறைச்சாலைகளில் இடப்பட்ட, பொலிஸ் கைது மற்றும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்வர்கள் 75 ஆக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இந்த காரணத்தினால் அந்த குடியல்வோர் சமூகத்தின் பிரச்சினைகளுக்காக பணியகத்தின் பங்களிப்பு மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

வெளிாட்டு தூதுவராலயங்களில் கடமையாற்றும் பணியக உத்தியோகத்தர்களுக்குரிய செலவினங்களானது, புலம்பெயர் தொழிலாளர்களின் பிரச்சினைகளை தீரக்கும் கடமைகளின் போதும், அவர்களின் நலனோம்பலின் போதும் ஏற்கப்பட்டுள்ளது. ஆதலால் வெளிநாட்டு தொழிலாளர் நலன்புரி பிரிவில் கடமைகளை பண அடிப்படையில் மாத்திரம் மதிப்பீடு செய்வது பொறுத்தமற்றது.

| | |
|---|---|
| இ) ஜப்பானின் தொழிலாளர் நலன்புரிப் பிரிவிற்கு மீளாய்வாண்டில் ரூபா 6,342,582 தொகையான கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 5,385,002 தொகை செலவிடப்பட்டிருந்தது. அது பணியகத்தின் பதவியணியினருக்காக ரூபா 5,098,056 தொகையும், குடியகல்வு ஊழியர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ரூபா 286,946 தொகையும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி குடியகல்வு ஊழியர்களின் நலன்புரிக்காக 4 சதவீதத்திற்கும் 6 சதவீதத்திற்கும் இடையிலான அளவில் செலவிடப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாணடு வரை ஜப்பானுக்கு சென்ற பதிவு செய்யப்பட்ட ஊழியர்கள் 337 பேராக இருந்ததுடன் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 30 ஆக இருந்தது. | ஜப்பான் தூதுவராலயத்திற்கு தொழிலாளர் நலன்புரி உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கக் காரணம், பணியகத்தின் பணிப்பாளர் சபையின் அனுமதித்திணங்க இலங்கையர்களுக்கு தொழில்வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்காகவே ஆகும். எனினும் அவர் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு நலனோம்பல் கடமைகளையும் நிறைவேற்றியுள்ளார். ஜப்பான் போன்ற உலகின் முதல் தர நாடொன்றில் புல்பெயர் பிரச்சினைகள் குறைந்தளவில் காணப்படுவதனால் குறிப்பிட்ட செலவினம் மிகவும் குறைந்த பெறுமதியினைக் கொண்டுள்ளது. |
| **4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**<br>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன. | |
| அ) உள்ளக கணக்காய்வு அறிக்கையின்படி அபூதாபி மற்றும் லெபனான் தூதரகங்களில் தொழிலாளர் நலன்புரி பிரிவுகளின் செயற்பாடுகளில் நிதிக்கட்டுப்பாடு நலிவான நிலையில் காணப்படுகின்றமை பௌதீக சொத்துப் பயன்பாடு மற்றும் செயலாற்றல் போதியளவாக இல்லாதிருந்தமையும் அறிக்கையிடப்பட்டிருந்தது. | தொழிலாளர் நலன்புரி நிதியத்தின் நடவடிக்கைகள் மீதான கணக்கியல் நடவடிக்கைகள் பற்றிய முறையான பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதுடன், முறையான அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் இப்பிரிவிற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வருங்காலத்தில் இத்தகைய பிரச்சினைகள் ஏற்படா வண்ணம் கடமைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு தூதுவராலய கணக்காய்வு மற்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் இப்பிரச்சினைகள் தொடர்பில் கணக்காய்வின் போது மென்மேலும் கவனம் செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டனர். |

| | | |
|---|---|---|
| ஆ) | 31 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,352,771 தொகையான கடன் 11 மாதங்கள் முதல் 110 மாதங்கள் வரை நிலுவையாகக் காணப்பட்டது. | இந்நிதியினை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை பரிபாலனம் மற்றும் மனிதவனப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. |
| இ) | மீளாய்வாண்டில் ரூபா 3இ757661 தொகை பொருளாதார சேவைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகை ஆண்டின் செலவினமாக இனங்காணப்பட்டிருந்த போதும் அந்தக் ொகடுப்பனவுகள் | இந்த கொடுப்பனவானது குறிப்பிட்ட ஆண்டின் வட்டி கடனாக வருமான வரி கணக்கெடுப்பின் போது குறைக்கப்பட்டுள்ளது. |
| **4.3** | **செயற்பாட்டு செயற்திறனின்மை**<br>---------------------------------<br>பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | |
| அ) | 10 வெளிநாடு சென்ற ஊழியர்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா. 2,065,000 தொகைக்காக காப்பறுதி இழப்பீட்டுப் பணம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவருக்கு 2013 ஆம் ஆண்டில் கிடைந்திருந்த போதிலும், பணியகத்தினால் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்தப் பணம் உரிய இழப்பீட்டாளர்களுக்கு விடுவிப்பதற்க முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிதியில் ரூபா 800,000 இதுவரையில் செலுத்தப்பட்டுள்ளது. கொடுப்பனவு மேற்கொள்வதற்கு தாமதமான காரணம் போதியளவு விபரங்களை சமர்பிக்காமையையேயாகும். |
| ஆ) | 1990 ஆம் ஆண்டின் போது ஈராக்கினால் குவைத் ஆக்கிரமிக்கப்பட்டதனால் அதில் வேலையிழந்த இலங்கையர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் இழப்பீட்டு ஆணைக்குழுவிற்குக் கிடைத்தது எஞ்சியிருந்த ரூபா 2,975,504,815 தொகையை உரிய ஊழியர்களுக்குச் செலுத்தி தீர்ப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று பணியகத்தினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பணியகத்தினால் பல்வேறு சந்தர்ப்பங்களில் பத்திரிகை விளம்பரம் மற்றும் கடிதங்கள் மூலம் நட்டஈட்டாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். தொழில் கருதி மீண்டும் வெளிநாடு செல்லுதல், தேவையான போதியளவு ஆவணங்கள் சமர்பிக்கப்படாமை ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த நபர்களுக்கு நட்டஈடு வழங்க முடியாதுள்ளது. நடைமுறையில் இதில் இருக்கும் மீதியானது குறிப்பிட்ட நிதியினை முதலீடு செய்ததன் மூலம் கிடைக்கப்பெற்ற வட்டி வருமானமாகும். சம்பந்தப்பட்ட நட்டஈட்டினை பெறுவதற்கு போதியளவு சரியான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நட்டஈடு கோரும் நபர்களுக்கு ரூபா 75,000/- தொகைப்பணம் நட்டஈடாக வழங்கப்படும். |

| | |
|---|---|
| இ) மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 95 மில்லியன் தொகையான வ/ப கஹகொல்ல பொறியியல் சேவைக்கம்பனிக்குரிய காணியொன்று 99 வருட குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக பணியகத்தினால் 2013 ஆம் ஆண்டில் ரூபா 20 மில்லியன் முற்பணமொன்று வ/ப அரசாங்க வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. 2013 சனவரி 17 ஆந் திகதிய 10/2013 (M-01)ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின்படி ரூபா 20 மில்லியன் செலுத்தி கட்டிடங்களினதும் காணிகளினதும் உரித்தைக் கையேற்குமாறு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரித்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த காணியினை தனதாக்கிக் கொள்வதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலன்புரி அமைச்சின் செயலாளரினால் அரச வளங்கள் மற்றும் நிறுவன அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு பல கடிதங்கள் அனுப்பியுள்ளார். இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு சட்ட ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| ஈ) வெளிநாடு சென்ற ஊழியர்களுக்காக பணியகத்தினால் பேணப்பட்ட சேமலாப நிதிய உத்தேசத்திட்டம் தற்போது செயற்பாடற்ற நிலையில் காணப்படுவதுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பணியகத்தினால் நிறுத்தி வைக்கப்பட்ட 1620 குடியகல்வோருக்ககுரிய ரூபா 6,572,054 தொகையான பங்களிப்புப் பணத்தை விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிதி தனியான ஓர் வைப்பாக பேணப்பட்டு வருவதுடன், சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் தமது விண்ணப்பங்களை சமர்பிக்கும் வழி முறைகளுக்கிணங்க இந்நிதி விடுவிக்கப்படும். இந்நிதியத்தின் வட்டியானது வருடாந்தம் இந்நிதியத்தின் மீதியுடன் வரவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வைப்பாளர்கள் முன்வராமை காரணமாகவும் போதியளவு துல்லியமான தகவல்கள் சமர்பிக்காததன் காரணமாகவும் கொடுப்பனவு மேற்கொள்வது தாமதமடைந்துள்ளது. |
| **4.4 நோக்கத்துக்க முரணான கொடுப்பனவுகள்**<br>---<br>பணியகத்தினால் ரட்டவிரு செயற்திட்டத்திற்கமைய மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 84,527,351 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | |

| | | |
|---|---|---|
| அ) | தேர்தல் நடாத்தப்பட்ட கால எல்லையான ஏப்ரல் மற்றும் திசெம்பர் மாதங்களில் செலவினம் முறையே ரூபா 17,731,248 மற்றம் ரூபா 17,148,865 தொகை 151.7 சதவீதத்தினாலும், 143 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்ததுடன் மே மற்றும் நவம்பர் மாதங்களின் போது செலவினத்தை சராசரிச் செலவினத்திற்கு ஒப்பாக 46 சதவீதத்தினாலும் 43 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. மொத்த செலவினத்தில் 10 உறுதிச்சீட்டுக்களுக்குரிய ரூபா 10,800,750 தொகையான 13 சதவீதம் செயற்திட்டத்திற்குரித்தற்ற விளம்பர நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக தனக்கு அறிவிக்காதிருந்தாக பிரதிப் பொது முகாமையாளரினால் விளம்பர மற்றும் வெளிநாட்டு தொடர்பு)அறிவிக்கப்பட்டிருந்தது. | இந்தச் செலவுகள் ரட்டவிரு செயற்திட்டத்திற்கென ஏற்கப்பட்ட செலவுகளாவதுடன் இந்த மாதங்களில் செலவினங்கள் அதிகரிப்பதற்கான காரணம் ரட்டவிரு குடும்பத்தவர்களின் விபரங்கள் நடமாடும் சேவை நிகழ்ச்சிகளினூடாக பெற்றுக் கொள்ள வேண்டியேற்பட்டதனாலேயாகும். |
| ஆ) | ரட்டவிறு பக்மஹ விழாவிற்கான போஸ்டர், காட்சிப் பதாதைகள், பெனர் என்பவற்றை அச்சிடுவதற்கு கேள்வி நடைமுறைகளுக்குப் புறம்பாக ரூபா 6,014,450 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,399,975 பெறுமதியான போஸ்டர்கள் பணியகத்தின் தலைவரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு முன் அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. மேலும் அதனை நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்பிற்காக கூறுவிலை கோராமல் ரூபா 1,399,975 தொகையில் தனியார் ஊடக நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கௌரவ அமைச்சரினதும் பணிப்பாளரினதும்(நிருவாகம்) ஆலோசனைக்கிணங்க, இந்த நடவடிக்கைகள் துரித கதியில் நடைமுறைப்படுத்த வேண்டியிருந்ததனால் டென்டர் நடைமுறைகளுக்கு மாறாக செயற்பட வேண்டியேற்பட்டது. எனினும் குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மத்தியில் குறைந்த விலையினை இச்சேவையினை வழங்கும் நிறுவனமொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரல் வெளிநாடுகளில் ஒளிபரப்பு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதனால் செட்டலயிட் தொழிற்நுட்பத்தின் மூலம் ஒளிபரப்பு செய்யப்பட்டதுடன் தனியார் ஊடக நிறுவனம் ஒன்று இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டது. |

| | |
|---|---|
| இ) மாத்தறை மாவட்ட ரட்டவிறு பலப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 4,844,000 கிரய மதிப்பீடொன்று பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கிரய மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத ரூபா 4,048,850 தொகையான குடை மற்றும் 1,600 ரீ சேர்ட் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் பகிர்ந்தளித்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2014 ஏப்ரல் 08 ஆந் திகதி தென் மாகாண சபை தேர்தல் நடைபெற்ற காலத்தை அண்மித்தாக குடை மற்றும் ரீ சேர்ட் அந்தப் பிரதேசத்தால் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் பணியகத்தின் நோக்கங்களுக்கு முரணான கொடுப்பனவாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது, | இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஒட்டுமொத்த செலவினமாக ரூபா 30 மில்லியன் தொகை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனினும், மாத்தறையில் நடைபெற்ற அடிப்படைத் திட்டத்திற்கான மதிப்பீட்டில் குடை மற்றும் டீ-சர்ட் விநியோகம் உள்ளடக்கப்படவில்லை. குறிப்பிட்ட செலவினை ஏற்க காரணம் ரட்டவிரு அமைப்பினை வலுப்படுத்துதல் மற்றும் பணியகத்திற்கும் அவர்களுக்கும் இடையேயான தொடர்பினை வளர்க்கும் நோக்கத்திற்காகவே ஆகும். |
| **4.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**<br>-------------------------------------------------------------<br>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |
| அ) பணியகத்தின் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 5,301,873 தொகையான செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்தக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் சர்ச்சைக்குரிய நிலைமையொன்று காணப்படுகின்றமையினால் அந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய காசோலை கையளித்தல் மேற்கொள்ளப்பட்டருக்கவில்லை. | இந்த விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்புகளாக காட்டப்பட்டுள்ளதுடன் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| ஆ மீளாய்வாண்டிற்குரிய ரூபா 4,667,368 தொகையான செலவினம் தேர்தல்கள் ஆணையாளரின் சுற்றறிக்கையின் படி நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்கரியதாகக் காணப்பட்டமையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆண்டின் சேர்ந்த செலவுகளாக இவ்விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டுள்ளதுடன் 2015 மறறும் 2016 ஆண்டுகளில் பணிப்பாளர் சபை அனுமதியுடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. |

| | |
|---|---|
| இ) லெபனானில் அமைந்துள்ள இலங்கை தூதரகத்தில் தொழிலாளர் நலன்புரிப் பிரிவில் மதிப்புரையாளராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவருக்கு நியமனக் கடிதத்தின்படி மாதமொன்றிற்கு போக்குவரத்துப்படியாக ஐ.அ.டொலர் 350 உரித்தாக இருந்த போதிலும் அதற்கு மேலதிகமாக ஐ.அ.டொலர் 2,793.32 தொகையான வாடகை வாகனக் கட்டணமாக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. மேலும் குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கும் குடும்பத்திலுள்ளவர்களுக்கும் கூறுவிலை கோரப்படாமல் ஆகக் கூடியது 14 நாட்கள் ஹோட்டலில் தங்கியமையின் காரணமாக அமெரிக்க டொலர் 2,450 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. 2014 பெப்ரவரி 10 ஆந் திகதிய முன்னாள் தொழிலாளர் பிரிவுத்தலைவரின் கடிதத்தின்படி அமெரிக்க டொலர் 1,500 தொகையான மாதாந்த வாடகையில் வீடொன்றை வழங்குவதற்கு இணங்கியிருந்த போது, மேலதிகமாக 14 நாட்கள் ஹோட்டலில் தங்கியிருந்தனர். இந்த தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக டொலர் 5,050 தொகையான காசோலையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், ஹோட்டலின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டின்படி, லெபனான் பவுண்களால் பணம் செலுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | 2014 மார்ச் மாதம் 07 ஆந் திகதி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க, தலைவரினால் தொழிலாளர் நலன்புரி நிதிய குழுவின் அனுமதியினை பெறும் வரையில் இலக்கம். OAD/02/02/03/10-11, 2014.04.03 ஆந் திகதிய கடிதத்திற்கிணங்க, 2014 பெப்ரவரி மாதம் 07 ஆந் திகதியிலிருந்து 2014.03.06 வரை அவர் மற்றும் அவரின் குடும்பத்தவர்களுக்கு கம்பர்ட் ஹோட்டலில் தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பின்னர் அந்த கோரிக்கை 2014.02.26 ஆந் திகதி நடைபெற்ற தொழிலாளர் நலன்புரி நிதிய குழுவிற்கு சமர்பித்து அனுமதியினை பெற்றுக் கொண்டுள்ளதுடன் அந்த குழுவின் அறிக்கை 2014 மே மாதம் 22 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு சமர்பிக்கப்பட்டது. கம்பர்ட் ஹோட்டலில் தங்கியிருந்தமைக்கு காரணமாக அவர் முன் வைக்கும் காரணம் என்னவெனில் லெபனானில் இருந்த ஆலோசகரினால் தேர்ந்தெடுத்த இல்லத்திற்கு செல்வதனை சேவையிலிருந்த தூதுவர் அனுமதி வழங்கப்படாமையையே ஆகும். குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு ஒரு மாதத்திற்கு போதியளவு ஒருங்கிணைந்த கொடுப்பனவாக அமெரிக்கன் டொலர் 350 உரித்தாகும். அன்றாட கடமைகளை நிறைவேற்றுவதற்காக அவருக்கு வீட்டிலிருந்து தூதுவராலயத்திற்கு செல்வதற்கும், தூதுவராலயத்திலிருந்து வீடு வரைக்கும் செல்வதற்கு லெபனன் தூதுவராலயத்தில் வாகனமொன்று இருப்பினும் சாரதி ஒருவர் இன்றி அதனை உபயோகப்படுத்தாமையினால் கூலி வண்டியொன்றினை ஈடு செய்ய வேண்டியேற்பட்டது. |

| | |
|---|---|
| **4.6 வெளிப்படையான மோசடிகள்**<br><br>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |
| அ) பணியகத்தின் இலக்கிடப்பட்ட பணியல்லாத ஊடகவியலாளர்களுக்கு அறிவிப்பதற்காக நடாத்தப்பட்ட 02 செயலமர்வுகளுக்கு பங்குபற்றிய ஊடகவியலாளர்களுக்கு பரிசாக கையளிப்பதற்காக ரூபா 479,000 தெகையான 175 டொங்கல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | நிறுவனத்தின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கைக்கிணங்க, நடாத்தப்பட்ட ஊடகவியலாளர் பட்டறைகளின் போது குறிப்பிட்ட டொங்கல் வழங்கப்படுவது நடைமுறையிலிருந்தது. இதன் மூலம் ஊடகவியலாளர்களுக்கு தொழிற்நுட்ப உதவி கிடைக்கப்பெறுவதுடன் தகவல் தொடர்பாடல்களுக்கு வசதியளிப்பதன் மூலம் ஊடகவியலாளர்களுடன் உயர் தொடர்பினை பேணுவதற்கு அமைச்சரின் ஆலோசனைக்கிணங்க, தலைவரின் அங்கீகாரத்துடன் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| ஆ) 2014 ஏப்ரல் 27 மற்றும் 29 ஆந் திகதிகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பாக அறிவூட்டும் பாத யாத்திரை கம்பஹா மற்றும் கொழும்பில் நடாத்திய போது அதில் பங்குபற்றிய 5,200 பேருக்கு உணவு வழங்குவதற்காக ரூபா 2,854,000 தொகையும் ரீசேர்ட் மற்றும் தொப்பிகளை கொள்வனவ செய்வதற்காக ரூபா 3,627,000 தொகையும், கேஸ் நிரப்பிய 3000 பலூன்கள் மற்றும் 30 பெனர்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 925,304 தொகையுமாக ரூபா 7,406,304 தொகை தனியார் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக அங்கீகரிக்கப்பட்ட வேலை அட்டவணை மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெறப்படாதிருந்ததுடன் முறையாக கொள்வனவு வழிகாட்டிக் கோவையும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கூறப்பட்ட கொடுப்பனவுகளுக்கு உரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகள் ஏற்றுக் கொள்ள முடியாதிருந்ததுடன் கொள்வனவுகள் முறையான பிரகாரம் பணியகத்தின் களஞ்சியம் ஊடாக மேற்கொள்ளப்படாமையினால் அந்த பொருள்கள் பணியகத்திற்கு கிடைத்தமைக்கும் சான்றுகள் காணப்படவில்லை. | கொள்முதல் பிரிவினூடே இந்நடவடிக்கைகள் குறுகிய காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்நடவடிக்கை செயற்பாட்டு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. செயற்பாட்டு திட்டம் மற்றும் வரவு செலவுத்திட்டங்களுக்கு பணிப்பாளர் சபை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த பொருட்களை எமது பிரதான களஞ்சியத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு போதிய காலஎல்லை இன்மை காரணமாக இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொறுப்பாக கடமையாற்றிய பணியகத்தின் பொறுப்பு மிக்க உத்தியோகத்தரான சந்தை மேம்பாட்டு நிறைவேற்று அதிகாரி நேரடியாகவே இப்பொருட்களை பொறுப்பேற்றுள்ளார் என்பதனை குறிப்பிட விரும்புகிறேன். |

| | | |
|---|---|---|
| இ) | 2014 மே 09 ஆந் திகதி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்ப்பவர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கான விளம்பரச் செயற்பாடுகளுக்காக ரூபா 1,713,600 தொகை செலசினே நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டமைக்கான உறுதிப்படுத்தும் எந்த ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட நிறுவனம் அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்த நிறுவனமாதலால் விலைக்கோரல் எதுவும் இன்றி தலைவரின் அனுமதியின் கீழ் குறிப்பிட்ட கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| ஈ) | ஹாலி எல குடியகல்வு வள நிலையத்திற்கு அடிக்கல் நாட்டும் விழாவின் செலவினத்திற்காக தலைவரின் நிதி அதிகார எல்லையை விஞ்சி ரூபா 12,612,500 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த தொகையிலிருந்து ரூபா 9,157,060 தொகை செலவிடப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 8,048,648 தொகை மேற்கூறப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது | ஹாலிஎல புலம்பெயர் வள மையத்தினை நிர்மானித்தலுக்காக அடிக்கல் நாட்டு விழாவிற்காக ரூபா 12,612,500/- தொகை செலவின மதிப்பீடு 2014.09.25 ஆந் திகதிய இல.117/2014 பணிப்பாளர் சபைப்பத்திரத்தினூடே 2014.09.25 ஆந் திகதி இதற்கான பணிப்பாளர் சபை அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இரண்டு நாட்களைக் கொண்ட குறுகியதொரு காலத்தினுள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவித்திருப்பதனால், கொள்முதல் நடைமுறைகளில குறைபாடுகள் இடம் பெற்றிருப்பதாகவும் வருங்காலத்தில் இத்தகைய குறைபாடுகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதிப்பெதுமுகாமையாளர்(பரிபாலனம் மற்றும் மனிதவளம்) பரிந்துரைக்கிணங்க முகாமையாளர்(கொள்முதல்) அறிவித்துள்ளார். |
| உ) | குடியகன்றோர் தின விழாவிற்காக வடக்கு, கிழக்கு, சப்ரகமுவ மற்றும் மத்திய என்ற 04 மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட 9375 நாட்டிற்காக உழைத்த குடும்பங்களின் 11,000 பாடசாலைப் பிள்ளைகளுக்கு பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் உபகரணத் தொகுதிகளை பகிர்ந்தளிக்கும் உதவி நிகழ்ச்சித் திட்டத்திற்காக வழங்கல் ஒப்பந்தத்தின் மொத்தப் பெறுமதி ரூபா 16,550,100 தொகை 04 மாகாணங்களுக்கான 04 கொள்வனவுகளின் கீழ் பகுதிகளாக்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டமையினால் அமைச்சின் கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறுகிய காலத்தினுள் இந்த கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததனால் கொள்முதல் 04இற்கு வகைப்படுத்தி தலைவரின் அனுமதியினை பெற்றுக்கொண்டு இந்த கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அமைச்சின் கொள்முதல் நடைமுறைகளிலிருந்து விலகி செயற்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்வதுடன் எதிர்வரும் காலங்களில் இததகைய குறைபாடுகள் இடம்பெறா வண்ணம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கிறேன். |

| | | |
|---|---|---|
| ஊ) | மண்சரிவினால் அழிவுக்குட்பட்ட மீரியபெத்த, கொஸ்லந்த பிரதேசத்தில் நாட்டிற்காக உழைத்த குடும்பங்களுக்கு உதவி வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரமின்றி ரூபா 1,000,000 தொகை பதுளை குடியகல்வோர் வள நிலையத்தின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு வங்கிப் பிணையொன்றின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. | திடீர் அனர்த்த நிலைமையின் கீழ் இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக தற்போது விசாரணை இடம்பெறுவதுடன் பணியகத்தின் உத்தியோகத்தர் ஒருவரின் சேவை நீக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுப்பேன் என்பதை அறியத்தருகிறேன். |
| எ) | கொழும்பு மாவட்டத்தில் ஆபத்து மற்றும் இயலுமைகளைக் கணிப்பிடல் மற்றும் பயிற்சியளித்தல் செயலமர்வுகளுக்காகப் பெறப்பட்ட 1,985,100 தொகையான முற்பணத்தைத் தீர்ப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட நாட்குறிப்பு உறுதிச்சீட்டின் மூலம் பிழையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பணியகத்தின் பணம் முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டமை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. மேலும் 2014 நவம்பர் 22 ஆந் திகதிய பீஆர்/2015/43 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் கடிதத்தின் பந்தி இலக்கம் 05(i) இற்கு முரணாக 2015 இன சனாதிபதித் தேர்தல் கால எல்லையில் இந்தச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இது தொடர்பாக தற்போது விசாரணை இடம்பெறுவதுடன் பணியகத்தின் உத்தியோகத்தர் ஒருவரின் சேவை நீக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுப்பேன் என்பதை அறியத்தருகிறேன். |
| **4.7** | **குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்** <br> பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |
| அ) | 2004 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட ரூபா 60,831,694 பெறுமதியான மலம் அகற்றும் முறைமைக்காக மீண்டும் 2009 ஆம் ஆண்டில் ரூபா 492,796 தொகையான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அது பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பாதுகாப்பற்ற வகையில் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | கொள்முதல் நடைமுறைகளினூடே இந்த உபகரணங்கள் துரித கதியில் பெற்றுக் கொள்வது கடினமான காரியமாகையால் சேவை வழங்கும் நிறுவனங்களின் பரிந்துரைக்கிணங்க இந்த ஆணை பெறப்பட்டது. தற்போது அது பாதுகாப்பாக வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| ஆ) 1999 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட 05 வாகனங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் 2009 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 02 வாகனங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டது. | இந்த வாகன பழுதுபார்த்தலுக்காக பெருந்தொகைபணம் செலவாகுவதனால் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. தற்போது முறையான கொள்முதல் நடைமுறைகளுக்கிணங்க அகற்றுவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறது. |
| **4.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**<br>------------------------------------------<br>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |
| அ) பணியகத்தினால் காலி மாவட்ட பயிற்சி நிலையத்திற்காக நிர்மாண நடடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத கட்டிடமொன்று ரூபா 300,000 தொகையான மாதாந்த வாடகையில் பெறப்பட்டிருந்தது. அந்த வாடகையாளர் கட்டிட நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் அரசாங்க மதிப்பீட்டாளரின் பெறுமதியான ரூபா.400,000 தொகையாக மாதாந்த வாடகை அதிகரிக்கப்பட்டிருந்துடன் பணியகத்தினால் கொள்வனவு நடைமுறையில் இணங்கப்பட்ட தீர்மாகத்தை மீறி மாதாந்த வாடகையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ரூபா 300,000 மாதாந்த வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடம் பின்னர் பயிற்சி நிலையம் ஒன்றிற்கு பொருந்தக் கூடியவாறு பணியகத்தின் தேவைகளுக்கேற்ப தயார் செய்ப்பட்டது. பெரும் மதிப்பில் இந்த வித்தியாசம் இடம் பெற்றிருந்தபடியால் அரச மதிப்பீட்டு திணைக்களத்தினூடே கட்டிட உரிமையாளரினால் பின்னர் சமர்பிக்கப்பட்ட மதிப்பீட்டில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கிணங்க மதிப்பீட்டு பெறுமதியான ரூபா 400,000 மாதாந்த குத்தகை செலுத்தப்பட்டுள்ளது. |
| ஆ) தகவல் தொழில்நுட்ப மதியுரையாரையும் 24 உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்ப பிரிவொன்று பணியகத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் போது திறந்த சந்தை விலை கோரி பணியகத்தின் இணையத்தளத்தை மீள வடிவமைப்பதற்காக ரூபா 780,000 தொகை தனியார் நிறுவனமொன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. | பணியகத்தின் அலுவல்கள் தொடர்பில் திறன் வாய்ந்தவர்களாக இருப்பினும் இணையத்தளம் வடிவமைத்தல் தொடர்பில் பணியக உத்தியோகத்தர்களுக்கு போதிய அளவு பயிற்சி இன்மை காரணமாக மேல் முகாமைத்துவத்தின் பரிந்துரைக்கிணங்க பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து விலை கோரப்பட்டு சம்பந்தப்பட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |

| | |
|---|---|
| இ) ரட்டவிறு டெலன்ட் ஸ்டார் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 27,545,985 தொகைக்குரிய செயற்திட்டம் கைவிடப்பட்டமையின் காரணமாக சிக்கனமற்ற செலவினமொன்றாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | தற்போது இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துதல் கைவிடப்பட்டுள்ளது. |
| ஈ) உடன்படிக்கையில் கையொப்பமிடல் அலுவலக வளாகத்திற்காக கட்டிடமொன்றை வாடகைக்கு எடுக்கும் நடவடிக்கைகளின் போது தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாது நடவடிக்கை எடுத்தமையின் காரணமாக இரண்டு கட்டிடங்களுக்காக 2014 திசெம்பர் மாதம் முதல் 2015 மார்ச் 13 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் முறையே ரூபா 2,625,000 தொகை மற்றும் ரூபா 1,926,000 தொகையான வாடகை செலுத்துவதற்கு பணியகத்திற்கு எற்பட்டிருந்தது. | பணியகத்தின் தேவைக்கேற்ப புதிய கட்டிடங்கள் தயார் செய்யப்பட வேண்டியிருந்ததனால் அந்த கட்டிடத்திற்கு குத்தகை ஒப்பந்தம் ஒன்றிற்கு உடன்பட்டு கொள்முதல் வழியினூடாக சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு காலம் எடுக்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்திற்கான குத்தகைப்பணம் கட்டிடங்கள் இரண்டிற்கும் செலுத்தப்பட்டது. |
| **4.9 இனங்காணப்பட்ட நட்டங்கள்**<br>--------------------------------<br>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |
| அ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கரிய தேசிய காப்புறுதி நிதியப் பொறுப்பிற்கும் இலங்கை வேலைவாய்ப்பு முகவராண்மைக்கும் காப்புறுதித் தவணைப் பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 218,681,760 தொகையில் உள்ளடங்கியுள்ள ரூபா 23,430,210 தொகையான உள்ளீட்டு வரி மற்றும் தங்காலை குடியகல்வோர் பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 58,549,800 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,635,915 தொகையான வற்வரி, உள்ளீட்டு வரியாக கழித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் பணியகத்திற்கு ரூபா 29,066,125 தொகையான நட்டமொன்று எற்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட பணியக உத்தியோகத்தர்கள் அந்த பண மோசடியினை செய்யாததனால் அவர்களுக்கு குற்றப்பத்திரிகை வழங்குவது தேவையற்றது எனவும் அவர்களுக்கு எச்சரிக்கை கடிதம் வழங்குமாறும் அப்போது இருந்த தலைவரின் கட்டளைக்கிணங்க, 2015.08.13 ஆந் திகதி முன்னால் பிரதிப் பொது முகாமையாளருக்கும் (நிதி) விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கும் நிருவாகம் மற்றும் மனிதவளப்பிரிவினால் எச்சரிக்கை கடிதம் வழங்கப்பட்டது. |

| | |
|---|---|
| ஆ) அபூதாபியில் இலங்கை தூதரகத்தில் பேணப்பட்டு வந்த பணியகத்தின் தொழிலாளர் நலன்புரிப் பிரிவில் பெண் எழுதுவினைஞர் உத்தியோகத்தரினால் 2014 யூன் 03 முதல் 09 ஆந் திகதி வரையான காலத்தில் சேகரிக்கப்பட்ட எமிரேட்ஸ் திர்ஹம் 29,295 தொகையான (அண்ணளவாக ரூபா 1,058,276) பணம், நிதிப் பிரமாணம் 187(3)இன் படி தாமதமின்ற வங்கியிலிடுவதற்க நடவடிக்கை எடுக்காமை மற்றும் அந்த அளவினால் தொழிலாளர் நலன்புரிப் பிரிவில் காசு நிலுவையொன்று காணப்பட்டமை தொடர்பாக முறையாக நடவடிக்கையொன்று பணியகத்தினால் எடுக்கப்படாதிருந்ததுடன் மேற்கூறிய உத்தியோகத்தர் பணியகத்தின் சேவையிலிருந்தும் விடுக்கப்பட்டிருந்தார். | இது பற்றி குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன. |
| **4.10 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்க வழங்கப்பட்ட பணியகத்தின் வளங்கள்**<br>----------------------------------------------------------------------------<br>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |
| அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக பணியகத்திற்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்ட 04 வாகனங்கள் உரிய அமைச்சிற்கும் ஏனைய அரசாங்க நிறுவனமொன்றிற்கும் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 4.126,716 தொகை செலவிடப்பட்டிருந்தது. | நேரியல் அமைச்சின் அலுவல்களுக்காக வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் வாகனங்களை வழங்காமலிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |
| ஆ) பணியகத்தின் 10 உத்தியோகத்தர்கள் அமைச்சிலும் அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 5,425,814 தொகை மற்றும் ரூபா 5,637,205 தொகை மற்றும் வேதனங்களாகச் செலுத்தப்பட்டிருந்தன. | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களில் எட்டுபேர் தற்போதைக்கு பணியகத்திற்கு சேவைக்காக வருகை தந்துள்ளதுடன் இரண்டு பேர் சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளனர். |

| | |
|---|---|
| **4.11 பதவியணியினர் நிர்வாகம்**<br>--------------------------------<br>2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பணியகத்திற்குரிய பதவியணியினர் விபரம் பின்வருமாறு இருந்தது. | |
| அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பணியகத்தில் 22 பதவிகளுக்காக 1216 பேர் நிரந்தர பதவியணியினராக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 1116 ஆனமையால் 100 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது ஒப்பந்த மற்றும் இரண்டாம் அடிப்படையில் முறையே 70 மற்றும் 21 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | பணியகத்தின் சேவை அவசியம் காரணமாக குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் குறிப்பிட்ட ஒரு தொகையினரின் சேவை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பதவிகளில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களிடம் நிதி முகாமைத்துவம், விமான பயணச்சீட்டு விற்பனை, மற்றும் தொழிற்நுட்பம் போன்ற பிரபலமான துறைகள் பற்றி அறிவுஞானம் இல்லாமல் இருந்தபடியால், ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| ஆ) பணியகத்தின் அங்கீகரிக்கப்படாத 08 பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் 167 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 60,188,791 தொகையொன்று 2014 ஆம் ஆண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட பதவிகளில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களிடம் நிதி முகாமைத்துவம், விமான பயணச்சீட்டு விற்பனை, மற்றும் தொழிற்நுட்பம் போன்ற பிரபலம் வாய்ந்த துறைகள் பற்றி அறிவுஞானம் இல்லாமல் இருந்தபடியால், ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இவர்களில் குறிப்பிட்ட ஒரு தொகையினரின் சேவை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| **5. கணக்களிப்புப் பொறுப்பும் நல்லாளுகைகளும்**<br>-------------------------------------- | |
| **5.1 கூட்டிணைந்த திட்டம்**<br>-------------------- | |
| பணியகத்தினால் காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் திசெம்பர் 18 ஆம் திகதிய பீஈடீ/47 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் திருத்தப்பட்ட 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம், அந்தந்த வருடங்களின் இறுதியில் கூட்டிணைந்த திட்டத்தின் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான செயல்முன்னேற்றம் மற்றும் அமுல்படுத்தப்படாத மற்றும் மந்தகதியிலுள்ள பிரிவுகள் தொடர்பாக மதிப்பீட்டை செய்து எஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிராததுடன் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கும் உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 ஆண்டில் அமுல்படுத்தப்படாத மற்றும் மந்தமான பிரிவுகள் பற்றி ஆய்வொன்றினை மேற்கொண்டு அதன் மூலம் வருடாந்த செயற்பாட்டு அறிக்கை முன்னேற்ற அறிக்கை தயார் செய்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு அரசாங்க கணக்காய்வு திணைக்களம் மற்றும் வியாபார திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் பணிப்பாளர் சபையினரின் கவனத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. |
| **5.2 கொள்வனவுத் திட்டம்**<br>----------------------<br>**பின்வரும் விடையங்கள் அவதானிக்கப்பட்டன.** | |
| அ) 2013 செப்தெம்பர் முதல் 2014 செப்தெம்பர் காலப்பகுதியில் தெற்காசிய வேலைவாய்ப்பு மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக குடியகல்வோருக்கு ரீ சேர்ட் மற்றும் குளிர் உடைகளை கொள்வனவு செய்வதற்காக ருபா 20 மில்லியன் தொகையை பணிப்பாளர் சபை அங்கீகரித்திருந்த போதிலும் கெள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3 ஆம் அத்தியாயத்தின் படி இந்த செலவினத்திற்கான கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு கோவைக்கான மேலதிகஇலக்கம் 28 மற்றும் 2014 யூலை 04 ஆந் திகதிய வழிகாட்டியின் தொடர்பு 2.14.1 இன் படி சந்தை விலை தளம்பல் | குறிப்பிட்ட கட்டளையினை வழங்குனரினால் வழங்க முடியாமற் போனமையினால் செயல்திறன் பிணையினை பணியகம் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | முறைமை பின்பற்றக்கூடிய எல்லை ரூபா 5 மில்லியனாக இருந்த போதிலும், ரூபா 6,840,000 தொகையான மேற்கூறப்பட்ட கொள்வனவுகளுக்காக அந்த முறைமை பின்பற்றப்பட்டிருந்தது. மேலும், கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.12 ஆம் அத்தியாயத்தின்படி கேள்விதாரர்களின் முழுமையான தகைமைகள் பரீட்சிக்கப்படாமையின் காரனமாக குளிர் உடைகளின் கொள்வனவுக்கான கட்டளையை வழங்குவதற்கு கேள்விதாரர் தவறியிருந்தார். | |
| ஆ) | பணியகத்தினால் உத்தியோகத்தர்களின் சீருடைக்காக சேலைகளை கொள்வனவு செய்யும் போது ரூபா 20,563 தொகை செலவில் சேவை மாதிரியொன்றை தயாரித்திருக்கும் போது திணைக்களத்தின் கொள்வனவுக் குழுவினால் அதற்கு புறம்பாக கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.12 ஆம் பந்திக்கு முறனாக வேறு நிறுவனமான பதுளை மாவட்ட ரட்டவிறு முயற்சியாளர்களுக்கும் அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்திற்கும் அதன் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட சேலைமாதிரிக்குப் பதிலாக வேறொரு மாதிரியுடன் சேலை கொள்வனவு செய்யப்பட்மையின் காரணமாக அந்த செலவினங்கள் பயனற்ற செலவினமாக இருந்ததுடன் மாதிரியை மாற்றியமையின் காரணமாக சேலைகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,279,200 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | சகல தரங்களுக்கும் கைத்தறி சேலை பெற்றுக் கொள்ளுமாறு அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட உபதேசத்திற்கிணங்க கைத்தறி சேலை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. ஆதலால் அந்த விலையில் மாற்றம் ஏற்பட்டது. மேலும் குறிப்பிட்ட வழங்கல் நிறுவனம் ரட்டவிரு வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மேற்கொள்ளும் பங்களிப்பினை இங்கு கவனத்தில் கொண்டுள்ளது. |
| இ) | 2013 மார்ச் முதல் 2014 மார்ச் வரை கொரிய வதிவிடப் பயிற்ச்சியாளர்களுக்கு உணவு பாணங்கள் வழங்குவதற்காக கொள்வனவு வழிகாட்டி கோவைக்கான மேலதிக இலக்கம் 21 மற்றும் 2012 பெப்ரவரி 23 ஆந் திகதிய வழிகாட்டியின் 3.4 ஆம் பிரிவிற்கு முறணாக ரூபா 38,306,628 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த கடைமையினை ஆரம்பிக்கும் போது கொரியன் தொழில் பெறுநர்களுக்கு ஒப்பந்தம் கிடைக்கப்பெறல் என்பது ஒரு நிச்சயமற்ற முடிவாகையால் அதற்குறிய கொள்முதல் பத்திரிகை விளம்பரத்தினுடே மேற்கொள்ளாது பதிவுச் செய்யப்பட்டுள்ள வழங்குனர்கள் 10 பேருக்கு பதிவுத் தபால் மூலம் டென்டர் பத்திரம் சமர்பிப்பதன் மூலம் தேவையான கொள்முதல் செய்யப்பட்டது. நடைமுறையில் கொள்முதல் வழிகாட்டிக்கிணங்க இதற்கான வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். |

| | | |
|---|---|---|
| ஈ) | 2014 மார்ச் முதல் 2014 யூன் வரை 28 நிகழ்ச்சித்திட்டங்கள் 1,244 பயிற்சியாளர்களுக்காக ரூபா 9,526,603 தொகையான உணவுகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் உடன்படிக்கையோ அல்லது கொள்வனவுக் குழுவின் அங்கீகாரமோ இன்றி வழங்கப்பட்டிருந்தது. | கொள்முதல் நடைமுறைகளுக்கிணங்க புதிய வழங்குனரொருவரை தேர்ந்தெடுப்பதற்கு காலஞ்செல்வதனால் அவ்வப்போது நிறுவன கொள்முதல் குழுவின் அனுமதிக்கிணங்க பழைய வழங்குனரிடமிருந்து இந்தச் சேவையினை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| உ) | ரூபா 10 மில்லியன் வரையான 03 மாத காலப்பகுதிக்கான உணவு வழங்கும் ஒப்பந்தத்திற்குரிய உடன்படிக்கையில் கைச்சாத்திடும் போது அது வருடமொன்றிற்குரிய காலப்பகுதியாக வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 யூலை 04 ஆந் திகதிய கொள்வனவு செயற்கோவைக்கான மேலதிக 28 இன் வழிகாட்டியின் 2.14.1 இன் படி மொத்த கிரய மதிப்பீடு கவனத்தில் கொள்ளப்படாமல், அலகு விலை மாத்திரம் கவனத்தில் கொள்ளப்படாது வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். | நிறுவன கொள்முதல் குழு 03 மாத காலத்திற்கு வழங்குனருக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதுடன், கொள்முதல் பிரிவு தவறுதலாக ஓராண்டு காலத்திற்கு என ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். |
| ஊ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.3 இற்கு முரணாக வழங்குனருடன் உடன்படிக்கைக்கு உட்படாமல் ரூபா 2,127,655 தொகை உணவு வழங்கலுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிறுவன கொள்முதல் குழுவினால் இந்த வழங்குனருக்கு சேவை வழங்குவதற்கு 01 ½ மாத குறுகிய காலமொன்றிற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதனால் செயற்திறன் பிணை மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழ் ஆகியனவற்றை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. |
| **5.3** | **பாதீட்டுக் கட்டுப்பாடு**<br>பணியகத்தின் பாதிடப்பட்ட மதிப்பீடுகளின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் பணியகத்தின் விளம்பர செலவினங்களில் உள்ளடக்கப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினம் 900 சதவீதத்தினாலும் வானொலி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினம் 517 சதவீதத்தினாலும் உயர்வடைந்திருந்தது. மேலும் முயற்சிகள் | வரவு செலவு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடாகும். அது முகாமைத்துவத்தின் தேவைக்கிணங்க எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் போது மதிப்பிடப்பட்ட செலவினங்களில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. எதிர் வரும் காலங்களில் வரவு செலவுத் திட்டத்தினை தயாரிக்கும் போது இவ்வாறான வேறுபாடுகள் குறையும்படி செலவு மதிப்பீட்டினை தயார் செய்வதற்கு எதிர்பார்க்கிறேன். |

| | | |
|---|---|---|
| | மேம்படுத்தல் செலவினங்களில் சந்தை மேம்படுத்தல் செயற்பாடுகளுக்கான செலவினம் 394 சதவீதத்தினாலும் கொரிய செயற்திட்ட செலவினம் 203 சதவீதத்தினாலும் உயர்வடைந்திருந்ததுடன் பாதீடு நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | |
| | **5.4 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**<br>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |
| அ) | நிதிப்பிரமாணம் இலக்கம் 371(2) இ பந்திக்கு முரனாக 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் 10 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 129,500 தொகையான முற்பணம் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இந்த முற்பணத்தை தீர்க்கப்படாமல் இருந்ததனால் பணியகத்தின் சட்டப்பிரிவிற்கு இவ்விடயம் சமர்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த முற்பணத்தினை பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள் தொழிலிருந்து விலகிச் சென்றிருப்பதனாலும் அவர்களின் தற்போதைய விலாசங்கள் பற்றிய விபரமான தகவல்களை பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்பட்டிருப்பதனாலும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியாமல் இந்த முற்பணம் இதுவரையில் தீர்க்கப்படாத முற்பணமாக இருந்து வருகிறது. எனினும், இந்த முற்பணத்தை தீர்ப்பதற்கு தொடர்ந்தும் முயற்சித்து வருகிறோம். |
| ஆ) | 2009 செப்தெம்பர் மாதத்தின் போது போலியாக கையொப்பமிட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 400,000 தொதையான 2 காசோலைகள் இணங்காணப்படாத வரவு மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மோசடி தொடர்பாக தாமதமின்றி நடவடிகை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான ஒழுக்காற்று பரிசீலனை அறிக்கை மீண்டும் கோரப்பட்டுள்ளதுடன், கிடைக்கப்பெறும் பரிசீலனை அறிக்கைக்கிணங்க, ஒழுக்காற்று கட்டளை விடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| **இ)** | 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் கொரியாவிற்கு ஊழியர்களை வெளிநாட்டுக்கு அனுப்பும் போது வெளிநாட்டிற்கு செல்லாத 62 ஊழியர்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட விமானப் பயணச் சீட்டுக்கள் மீண்டும் அவர்களுக்கு கையளிக்கப்படாமையின் காரணமாக ஏற்பட்ட ரூபா 2,264,660 தொகையான நிதி நட்டம் தொடர்பாக பணியகத்தினால் முறையான நடவடிக்கையொன்று தாமதமின்றி எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட பரிசீலனையின் பரிந்துரைக்கிணங்க ஏற்பட்டுள்ள நட்டம் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திணங்க நடவடிக்கை மேற்கொள்ளபடபபட்ட வண்ணமுள்ளன. |

| | |
|---|---|
| ஈ) சகல மாவட்டங்களையும் மேவுகை செய்யும் வகையில் குடியகல்வோர் பயிற்சி நிலையத்தை தாபிப்பதற்கு அமைச்சரவை அங்கிகாரம் கிடைத்திருந்தது. அதன்படி கதிர்காமம், ஹோமாகம கஹகொல்ல மற்றும் தம்புள்ள குடியகல்வோர் வள நிலையங்களை நிர்மானிப்பதற்காக 2007 ஆம் ஆண்டு முதல் 2010 வரையான காலத்தில் ரூபா 50,372,816 தெகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிர்மான செயற்திட்டங்களின் வேலை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு காரணங்களினால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளமையினால் கணக்காய்வு கேள்விகளில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்பதுடன், தற்போது கதிர்காம புலம்பெயர் வள மையத்தினை நிர்மானிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் மாற்றமடைந்து அந்த இடத்தில் புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் சுற்றுலா விடுதி ஒன்றினை நிர்மானிப்பதற்கு தீர்மானித்துள்ளதுடன் அது சம்பந்தமான நடவடிக்கைகள் நடைபெற்ற வண்ணமுள்ளன. ஹோமாகமை மற்றும் கஹகொல்ல நிலம் தொடர்பாக சட்டசிக்கல்கள் முடிவடைந்தவுடன் கட்டிட நிர்மானப்பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கிறோம். தம்புள்ள கட்டிட நிர்மானம் சம்பந்தமான தொழிற்நுட்ப மதிப்பீடு குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள கொந்தராத்து நிறுவனத்திற்கு நிதி அமைச்சினால் அனுமதி வழங்கப்படவில்லை. |
| **6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**<br>-----------------------------------------------<br>கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் மட்டுப்பாட்டு குறைபாடுகள் தொடர்பாக காலத்திற்கு காலம் பணியகத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது. | |
| அ) கணக்கீடு. | பணியகத்தின் வருமானம் மற்றும் செலவினம் முறையாக கணக்குப் புத்தகங்களில் பதியப்படுவதற்கு அதிகபட்ச நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான புதிய கணக்கியல் அமைப்பினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதும் பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் ஆலோசனையைப் பெற்று கொண்டு கணக்கியல் நடவடிக்கைகளை முறையாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொளளப்பட்ட வண்ணம் உள்ளது. |

| | |
|---|---|
| ஆ) கொள்வனவு நடைமுறை | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட அமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் பரிந்துரைகள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு எதிர்காலத்தில் கொள்முதல் நடைமுறைகளை முறையாக பேணுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| இ) வாகன நிர்வாகம். | அலுவலக உபயோகங்களுக்காக வாகனங்கள் தேவைப்படும் போது வாகனமொன்றை பெறுவதற்கான விண்ணப்பம் கணினி அமைப்பு முறைமையொன்றின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த கசல தரவுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. |
| ஈ) வெளிநாட்டு தூதரகங்கள் மூலம் உழைக்கப்படுகின்ற வருமானமும் சேவை வழங்கலும். | வெளிநாட்டு தூதுவராலயங்களுக்காக ஈட்டப்படும் வருமானம் நிருவாக நடவடிக்கைகள் பெரும்பாலும் குறிப்பிட்ட வெளிநாட்டு தாதுவராலய முகாமைத்துவத்திற்காக பயன்படுத்தப்படுவதுடன் மேலதிகமான நிதி பணியகத்தின் கணக்கில் வைப்புச் செய்யப்படும். வெளிநாட்டு துதுவராலயங்களினால் சேகரிக்கப்படும் நிதி பணியகத்தின் கணக்குகளில் வைப்புச் செய்வதற்குரிய முறையான அறிவுறுத்தல்களும் செயல்முறைகள் பற்றியும் குறிப்பிட்ட வெளிநாட்டு துாதுவராலயங்களின் தொழில் பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த நிதியை பயன்படுத்தும் போது செயலாற்ற வேண்டிய முறைகள் பற்றி அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |
| உ) வெளிநாட்டு வேலை முகவர் நிறுவனங்களின் நடவடிக்கைகள் | தொழில் முகவர் நிலையமொன்றிற்கு புதிய அனுமதிப் பத்திரம் வழங்கும் போதும் நடைமுறையிலுள்ள அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிக்கும் போதும் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் தற்போது குறிப்பிட்ட பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போது அவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| ஊ) சொத்து பயன்பாடு. | சொத்து இயற்பியல் பரிசோதனை வருடாந்தம் நடைபெறும். அதன் போது சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் பயன்பாடு தொடர்பாக எப்போதும் அறிவுறுத்தல் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் காலத்தில் அறிவுறுத்தல் பத்திரங்கள் தயார் செய்து அதன் மூலம் அறிவுறுத்தல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |